ஞாலத்தில்

# புதுமை புகும் தாலம்

## கண்காட்சி
## சிறப்பு மலர் - 2016



பனை அபிவிருத்திச் சபை

தேசிய வீடமைப்பு அதிகாரசபைக் கட்டடம், முதலாம் மாடி, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

**சிறைச்சாலை மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு,**
**மீள் குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞாலத்தில் புதுமை புகும் தாலம்

## கண்காட்சி சிறப்பு மலர் - 2016



**பனை அபிவிருத்திச் சபை**
**தேசிய வீடமைப்புச் செயலகம், முதலாம் மாடி,**
**கண்டி வீதி, யாழ்ப்பாணம்.**
**சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு,**
**மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலர் உதயம்


| | | |
|---|---|---|
| **மலர்ப் பெயர்** | : | "ஞாலத்தில் புதுமை புகும் தாலம்"<br>பனை அபிவிருத்திச் சபையினால் நடாத்தப்பட்ட கண்காட்சி, ஆய்வரங்கு, போட்டிகள் ஆகியவற்றின் மகுடமான கண்காட்சி சிறப்பு மலர் |
| **அட்டைப்படம், மலர் தொகுப்பு ஆசிரியர்** | : | திருமதி. பவானி தங்கத்துரை<br>முகாமைத்துவ உதவியாளர் விரிவாக்கல் பகுதி<br>பனை அபிவிருத்திச் சபை |
| **பதிப்புரிமை** | : | பனை அபிவிருத்திச் சபை |
| **பதிப்பாண்டு** | : | 2016 |
| **அச்சுப்பதிப்பு** | : | அன்றா பிறிண்டேர்ஸ்<br>இல. 379, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.<br>021 222 8929 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலரிதழ்கள்


1. மலர்க்குழு விபரம்.......................................................................................v
2. சின்மயா மிஷனின் ஆசிச்செய்தி......................................................................vi
3. பௌத்த மதகுருவின் ஆசிச்செய்தி....................................................................vii
4. அருட்பணி யோ.மவுலிஸ் ஆசிச்செய்தி..............................................................viii
5. ஜும்மா பள்ளிவாசல் ஆசிச்செய்தி......................................................................ix
6. Minister's Message.........................................................................................x
7. கௌரவ. D.M.சுவாமிநாதன் வாழ்த்துச் செய்தி..................................................xi
8. திரு.வே.இ.சிவஞானசோதி வாழ்த்துச் செய்தி...................................................xii
9. Dr.இ.சிவசங்கர் வாழ்த்துச் செய்தி....................................................................xiii
10. සභාපති තුමාගේ සුභ පැතුම් පණිවිඩය...........................................................xiv
11. திரு.எம்.பி.லோகநாதன் வாழ்த்துச் செய்தி........................................................xv
12. உற்பத்தி முகாமையாளரின் எண்ணத்துளிகள்...................................................xvi
13. பனை அபிவிருத்திச் சபை உற்பத்திப் பகுதி.....................................................01
14. அபிவிருத்தி முகாமையாளரின் எண்ணத்துளிகள்..............................................08
15. அபிவிருத்திப்பிரிவு.........................................................................................09
16. பனையின்றி வாழ்வில்லை என்றிருந்த எம்மவர்கள்..........................................15
17. நிர்வாக முகாமையாளரின் எண்ணத்துளிகள்...................................................17
18. உடல், மனம், ஆன்மாவை லயமாக்கும் பனை மரம்..........................................18
19. சித்த மருத்துவ நிபுணர் மருத்துவக் குறிப்புக்கள்.............................................19
20. பனையெழுதும் பயன் கண்டேன்.......................................................................22
21. விரிவாக்க முகாமையாளரின் எண்ணத்துளிகள்.................................................24
22. அறிந்துகொள்ள அழைக்கின்றோம் விரிவாக்கல் பகுதி பற்றிய ஓர் பார்வை..........25
23. விரிவாக்கல் பகுதி..........................................................................................26
24. மனிதம்..........................................................................................................33
25. உள்ளகக் கணக்காய்வாளரின் முகாமையாளரின் எண்ணத்துளிகள்......................36
26. பனை அபிவிருத்திச் சபையின் உள்ளக கணக்காய்வுப் பகுதி..............................37
27. பனை மரம் (கற்பகதரு)....................................................................................39
28. இன்பப் பனை..................................................................................................41
29. சந்தைப்படுத்தல் முகாமையாளரின் எண்ணத்துளிகள்.........................................42
30. பனை அபிவிருத்திச் சபையின் சந்தைப்படுத்தல் பகுதி........................................43
31. கரமுயர்ந்த கைப்பணிப் பெண்...........................................................................48
32. துணை ஒன்று - சிறுகதை..................................................................................51
33. இலக்கியம் தொட்டு வாழ்வியல் ஈறாக பனை.....................................................53
34. ஆராய்ச்சி முகாமையாளரின் எண்ணத்துளிகள்..................................................56
35. பனை சார் பாரம்பரிய கைத்தொழில் மக்களின் வாழ்வாதாரம் நோக்கிய பனை ஆராய்ச்சி நிறுவனம்..........57
36. பனை வளம் காப்போம்.....................................................................................70
37. பனை பாடும் கவி............................................................................................73
38. எவ்வளவு நாள்களானாலும் கெட்டுப்போகாத உணவைத்தரும் பெண் பனை...........74
39. நிதி முகாமையாளரின் எண்ணத்துளிகள்............................................................75
40. பனைவளம் வருடம் முழுவதும் வற்றாத வளம்...................................................76
41. வடலிகள் வானுயரும்.......................................................................................78
42. கறுப்பு நிறக் கற்பகதரு.....................................................................................79
43. மனிதமும் பனைமரமும் பனை அபிவிருத்திச் சபையும்.......................................80
44. மலரின் மகரந்தம்............................................................................................81




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**ஞாலத்தில் புதுமை புகும் தாலம்**

**கண்காட்சி சிறப்பு மலர்**

இதழ்கள் ஒவ்வொன்றும் அவிழ்கையில்
பனை வாசம் பரவுகின்றது. ஒவ்வொருவரின்
மூச்சிலும் கலந்து உணர்வுகளில் ஒன்றி,
பனை வளத்தின் ஊடாக குடிசைக் கைத்தொழில்கள்
பாரிய தொழிற்சாலைகளாக அமைவுறும்
காலத்தில், அடித்தளத்தின் மேல் நிற்கின்றமையை
ஒவ்வொரு பகுதியின் செயற்பாட்டுக் கட்டுரைகள்
மற்றும் ஆக்கங்கள் அனைத்தும் வெளிப்
படுத்துகின்றன. நாளைய விடிவு, ஞாலத்தில்
தாலத்தின் பயன்பெற இம்மலர்
உறுதுணையாகும்.

**மலர்க்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்க் குழு

**திரு. எம்.பி. லோகநாதன்**

பொது முகாமையாளர், பனை அபிவிருத்திச் சபை

**திரு. க. கோபாலகிருஷ்ணன்**

முகாமையாளர் (விரிவாக்கம்)

பனை அபிவிருத்திச் சபை

**திரு. பா. சுதாகரன்**

முகாமையாளர் (நிர்வாகம், மனிதவளம்)

பனை அபிவிருத்திச் சபை

**திருமதி. த.பவானி**

முகாமைத்துவ உதவியாளர் (விரிவாக்கல் பகுதி)

பனை அபிவிருத்திச் சபை

**திரு. இ.சசிகுமார்**

முகாமைத்துவ உதவியாளர் (உள்ளகக் கணக்காய்வுப் பகுதி)

பனை அபிவிருத்திச் சபை

**திரு. கு. உருத்திரதாசன்**

முகாமைத்துவ உதவியாளர் (நிர்வாகப் பகுதி)

பனை அபிவிருத்திச் சபை


**செல்வி ச.காருண்யா**

முகாமைத்துவ உதவியாளர் (கணக்குப் பகுதி)

பனை அபிவிருத்திச் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சின்மயா மிஷனின் ஆசிச்செய்தி

ஈழத்தின் வடபுலத்தினது பெருமை கூறும் "கற்பகதரு' எமது பனை விருட்சமாகும். பல்வேறு பயன்களை பல மனிதர்களுக்கு பல காலங்களுக்கு வழங்கக்கூடிய பலம் பனை மரத்துக்கு உண்டு. இத்தகு பெருமை கொண்ட பனை விருட்சத்தின் சிறப்புக்களையும்,பயன்களையும் பாருக்கு எடுத்துச் சொல்லுகின்ற கடமையை பனை அபிவிருத்திச் சபை ஆற்றி வருகின்றது. இச்சபை நடாத்துகின்ற இம்மாதக் கண்காட்சி பனை வளத்தை பலருக்கு பயனுள்ள விதத்தில் எவ்வாறு பயன்படுத்தலாம்? என்பது பற்றியும் பனை பற்றிய பல அம்சங்களையும் அனைவருக்கும் எடுத்துச் சொல்ல இருக்கின்றது.

இக் கண்காட்சியில் ஓர் அங்கமாக வெளியிடப்படும் "ஞாலத்தில் புதுமை புகும் தாலம்" எனும் மலர் சிறப்பாக வெளிவரவும், இக் கண்காட்சி சிறப்பாக நடைபெறவும் ஆசி வேண்டி எல்லாம்வல்ல இறைவனையும் பூஜ்ய குருதேவர்சுவாமி சின்மயானந்தர் அவர்களையும் பிரார்த்திக்கின்றோம்.

"வான்முகில் வழாது பெய்க

மலிவளம் சுரக்க"

இறை பணியில்,
**பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா**
வதிவிட ஆச்சாரியார்,
சின்மயா மிஷன்
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Let us Build a World of Peace and Unity

# යාපනය නාග විහාර ප්‍රතිසංස්කරණ අරමුදල
# யாழ்ப்பாணம் நாக விகாரை புணரமைப்பு நிதியம
# Jaffna Naga Vihara Restoration Fund

Sri Nagavihara, Stanley Road, Jaffna, Sri Lanka.


පූජ්‍ය මීගහජදුරේ ඥාණරතන නායක ස්ථවිර
උත්තර ලංකාවේ ප්‍රධාන සංඝනායක

සභාපති
යාපනය නාග විහාර ප්‍රතිසංස්කරණ අරමුදල
(රජය පිළිගත් පුණ්‍යායතනයකි)

විධායක අධ්‍යක්ෂක
සමාදීප සමාධි කේන්ද්‍රය

විහාරාධිපති
ශ්‍රී නාගවිහාර
ජාත්‍යන්තර බෞද්ධ මධ්‍යස්ථානය - යාපනය
දඹකොළපටුන රාජමහා විහාරය - මාදගල්
කඳුරුගොඩ රාජමහා විහාරය - චුන්නාකම්

යාපනය ශ්‍රී නාගවිහාරය - කොළඹ මධ්‍යස්ථානය
29/300, 7 වන පටුමග,
ඩී. එම්. කොළඹගේ මාවත,
කිරුළපොන , කොළඹ 05.
ශ්‍රී ලංකාව.

வண. மீகஹஜந்துரே
கீர்த்தி ஸ்ரீ நந்தாராம ஞானரதன தேரர்
அகில இலங்கை சமாதான நீதவன்
பிரதான சங்க நாயக்கர் - வட மாகாணம்

தலைவர்
ஸ்ரீ ராக விகாரை அபிவிருத்தி நிலையும்
விகாராதிபதி.
தம்பகொல பட்டுன ராஜமகாவிகாரை-மாதகல்
கந்துருகொ ரஜமகா விகானர சுன்னாகம்

ஸ்ரீ நாக விகாரை
சருவநேச பௌத்த கேந்நிரம்-யாழ்ப்பாணம்
நிறைவேற்றுப் பணிப்பாளர்
சாமதீப சமாதி கேந்திரம்

291300
டி. எம். கொலம்பகே மாவத்தை
கிருளப்பனை - கொழும்ப 5
இலங்கை

தாலைபேசி:
தொலைநகல்:
லெத்திரன் அஞ்சல்

**Ven.Meegahajadure Gnanaratana Nayake Thero**
**Chief Sanganayaka - Northern Province**
**JP All Island**

Chairman
**Jaffna Naga Vihara Restoration Fund**

Executive Director
**Samadeepa Samadhi Center**

Chief Incumbent
**Sri NagaVihara**
**International Buddhist Centre - Jaffna**
**Dambakolapatuna Raja Maha Viharaya - Madagal**
**Kandurugoda Raja Maha Viharaya - Chunnakam**

**Sri NagaVihara - Colombo Center**
29/300, 7th Lane,
D.M. Colombage Mawatha,
Kirillapone,
Colombo 05, Sri Lanka.

Telephone : 021 - 222 2014,
Mobile : 077 - 1879183, 071 - 8329010
Hot Line : 077 - 6210718
Fax : 021 - 222 2014
E mail : jaffnanagavihara@sltnet.lk
msirivimala@gmail.com
Web Site : jaffnanagavihara.com


2016 10 16

## සුභාසිංසනයයි

තල් සංවර්ධන මණ්ඩලය විසින් "ලොවේ විමති මවන තල්රුක් - "ஞாலத்தில் புதுமை புகும் தாலம்" - යන තේමාව යටතේ පවත්වනු ලබන ප්‍රදර්ශනය සාර්ථක වේවායැයි ප්‍රාර්ථනාකර සිටින අතර එම ප්‍රදර්ශනය තුලින් තල් මූලික ද්‍රව්‍ය පදනම්කරගෙන නිෂ්පාදනයන්හි යැපෙන ජනතාව හිසි ප්‍රයෝජනය ලැබෙන්වා සුබ පතමි

ජාතිය ආගම භාෂාව පදනම් කරගත් බේදබි ඉත්වචාගොස් සියළු ජනතාවන්ටම සිය සේවාය ලැබෙන පරිදි කැපවී වැඩ කරන තල් සංවර්ධන මණ්ඩලයේ සභාපති අධ්‍යක්වරුන් හා අනෙකුත් සේවකයන්ගේ ආර්මාර්ථකාමිත්වයෙන් තොරවූ මහ සේවයක් කිරීම මම ඉමහත් 'සතුටට පත්වෙමි

තවද මෙම ප්‍රදර්ශනයට අදාලව පලකරනු ලබන ලොවේ විමත මවන තල්රුක් යන සිරස්තලයෙන් යුත් විශේෂ ප්‍රකාශනයටද මගෙ සුභපැතුම් ප්‍රධානකර සිටින්නෙමු

තෙරුවන් සරණයි

පූජ්‍ය ශාස්ත්‍රවේදී මීගහජදුරේ සිරිවිමල හිමි
යාපාපටුන බෞද්ධ කටයුතු සමායෝජක නිළධාරී
යා/දමිළ බෞද්ධ සංගමයේ අනුශාසක,
යා/අන්තර් ආගමික කමිටු සම සභාපති,
විහාරාධිකාරී, ශ්‍රී නාග විහාරය, යාපනය.
ටෙලි: 071 8329010



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஆசிச் செய்தி

பனை அபிவிருத்திச் சபையின் வெளியீடாக வருகின்ற **"ஞாலத்தில் புதுமை புகும் தாலம்"** என்னும் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

நான் பிறந்து வளர்ந்த அளவெட்டிக்கு அருகாமையிலுள்ள சிறுவிளான் குக்கிராமத்தில் ஆயிரக்கணக்கான பனைகள் சூழ்ந்திருந்தன. அவற்றின் நிழலில் சுகங்கண்டு வாழ்ந்தவன் நான். ஒடியல் கூழ், பனம் ஒடியல், பதநீர், பனங்கட்டியென்று பனையின் பயன்களைப்பெற்றிருக்கின்றேன். பனை ஓலையால் வேயப்பட்ட கூரை வீட்டில் அம்மா, அப்பா, சகோதரர்களாக கூடி மகிழ்ந்து வாழ்ந்தோம். இவ்விதமாக பனையால் அடைந்த பயன்களைக் கூறிக்கொண்டே போகலாம்.

எமது பிரதேசத்திற்கு இறைவனால் வழங்கப்பட்ட ஓர் உன்னதமான கொடையாகவே இப் பனைவளம் அமைந்திருக்கின்றது. மனிதர்கள் தமது சுயநலத்தினாலும், நவீன மோகத்தினாலும் பனைகளை அழிப்பதும், பனையின் பயன்பாட்டைப் பெற மறுப்பதும் வேதனைக்குரிய விடயமாகும்.

இவ்விதமான சூழலில் பனையின் பயன்பாட்டை மக்களுக்கு வெளிப்படுத்தும் விழிப்புணர்வை ஏற்படுத்தும் இவ் வகையான கண்காட்சி நிகழ்வை ஒழுங்குபடுத்தியிருப்பது பாராட்டிற்குரியதொன்றாகும். இந்நிகழ்வை பல சிரமங்களின் மத்தியில், திட்டமிட்டு ஒழுங்குபடுத்தி செயற்பட்டுக் கொண்டிருக்கும் பனை அபிவிருத்திச் சபையின் கண்காட்சி ஏற்பாட்டாளர்களுக்கு எனது வாழ்த்துக்களைத் தெரிவித்து இம் மலருக்கு இதயம் நிறைந்த இறையாசிகளையும் தந்து நிற்கின்றேன்.

**அருட்பணி யோ.மவுலிஸ்**
பங்குத்தந்தை
புனித யாகப்பர் ஆலயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி

மனிதனின் எவ்வித பங்களிப்புமின்றி இறைவன் அருளால் மனித தேவைகளை பல்பரிணாமத்தில் நிவர்த்தி செய்வதில் பனை மரத்திற்கும் பாரிய பங்குண்டு. பனை ஓலை முதல் அதன் நார், வேர் முதல் அனைத்துப் பாகங்களும் வெவ்வேறு விதத்தில் மனித தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.

உலகளவில் 140 மில்லியன் பனை மரங்கள் இருப்பதாக ஆய்வுகள் சுட்டிக் காட்டுகின்றன. அவற்றில் இலங்கையில் 11.1 மில்லியன் பனை மரங்கள் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி போன்ற மாவட்டங்களில் 0.6 மில்லியன்களும் ஏனைய மாவட்டங்களில் மிகுதியான மரங்களும் பரந்து காணப்படுகின்றன.

தென்கிழக்கு ஆசிய நாடுகளில் குறிப்பாக இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் Borassus Flavllifer L. எனும் பனைமர இனம் காணப்படுகின்றது.

இலங்கை பனை அபிவிருத்திச் சபை பல சூழலிலிருந்து பற்பசை மாதிரிகளை உற்பத்தி செய்து புதிய உற்பத்திக்கு வழிவகுத்தது என்றால் மிகையாகாது. இன்னும் பல ஆய்வுகள் செய்து பனையின் பலனை முழுமையாகக் கண்டறிந்து பல நோக்குடைய உற்பத்திப் பொருட்களை மேற்கொள்வதன் மூலம் பனை அபிவிருத்தி பொருளாதாரத்தினை மேற்கொள்ள முடியும்.

யாழின் வரலாற்றில் அழியாத் தடம்பெற்ற பல்சமய நல்லுறவுக்கு உறவுப் பாலமாக உதவும் இப்பள்ளிவாசல் நிர்வாகம் சார்பாக எனது மனப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஜும்மா பள்ளிவாசல்**
34, செம்மா தெரு,
பெரியகடை, யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Minister's Message

Palmyrah Development Board is continuously giving its highest efforts for the livelihood of the people who depend on Palmyrah resources. I proudly say that I personally witnessed the hard work and dedication of the management and the staffs to get the optimum benefits from the Palmyrah resources to develop the community and the country. I congratulate the Chairman and the Board of Directors, General Manager, Executive Managers and all the other staffs for their commendable service. The exhibition on Palmyrah Based Products and New technology, Research Dissemination and sales, on the theme of "Gnalaththil Puthumai Puhum Thaalam", is one of the examples to prove the efforts of the members of the board. I wish the Palmyrah Development Board best of luck on this event and I hope they will continue to serve to the people who depend on Palmyrah sector with courage and responsibility in order to uplift their standards of living.

**D.M. Swaminathan,**

Minister,
Ministry of Prison Reforms,
Rehabilitation,
Resettlement and Hindu Religious Affairs



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமைச்சரின் வாழ்த்துச்செய்தி

**ப**னை அபிவிருத்திச் சபையானது பனை வளத்தை நம்பி வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை முன்னேற்றும் நோக்கில் தொடர்ந்து தனது பிரயத்தனங்களை வழாங்கி வருகிறது. அந்தவகையில் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர், பணிப்பாளர்கள், பொது முகாமையாளர், நிறைவேற்றுத்தர முகாமையாளர்கள் மற்றும் பணியாளர் களின் சேவையை நான் பெருமையுடன் பாராட்டுகின்றேன். இவர்கள் பனை வளத்தில் தங்கியுள்ள மக்களது பொருளாதார நிலையை உயர்த்துவதற்கும் இதனூடாக நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் பெரும்பங்காற்றி வருகின்றார்கள்.

பனை அபிவிருத்திச் சபையால் நடாத்தப்படும் "ஞாலத்தில் புதுமை புகும் தாலம்" எனும் தொனிப் பொருளிலான கண்காட்சி பனை அபிவிருத்திச் சபை வரலாற்றில் பனைசார் உற்பத்திகளை மக்களிடையே பிரபலம் அடையச் செய்வதில் பெரும் பங்காற்றும் என நம்புகின்றேன். அத்துடன் இக் கண்காட்சி ஆனது பனை அபிவிருத்திச் சபையின் அங்கத்தவர்களது கடின உழைப்பையும் விடாமுயற்சியையும் வெளிக்கொணர்வதாக அமைகின்றது. அவர்களது பணி வெற்றி பெறவும் பனைசார் உற்பத்தியில் தங்கிவாழும் மக்களுக்கு அவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்குடன் புதிய உத்வேகத்துடனும் பொறுப்புடனும் பணியாற்றவும், கண்காட்சி சிறப்பாக நடைபெறவும் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்,**
அமைச்சர்,
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு,
மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பகுத்தறிவு படைக்கப்பட்ட மனிதர்கள் பண்பாட்டிலிருந்து வழுவாமல், தமது வாழ்வினை ஏனையோருக்குப் பயன்தரும் வண்ணம் வாழ்வது என்பது, மனித பண்பாகும். எமது அறிவின் தேடலுடன் நாம் சார்ந்து உள்ள சூழலின் தேவையைக் கருத்திற் கொண்டு,அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச் செல்லும் திட்டங்களை முன்னெடுத்துச் செல்வது ஆக்கபூர் வமானது ஆகும்.

பனை அபிவிருத்திச்சபை முப்பத்துஎட்டு வருடத்தில் தனது செயற்பாட்டு வழியில், மக்களைச் சென்றடைவதற்கு "ஞாலத்தில் புதுமை புகும் தாலம்" எனும் கண்காட்சியினை நடாத்துவது பாராட்டுக்குரியது. அதனை ஆவணப்படுத்தும் வகையில் இக் கண்காட்சி மலரினை வெளியிடுவது பெருமைக்குரியது.

அத்துடன் இறைவனின் படைப்புக்களுள் அருங்கொடையான மூல வளமான கற்பகதருவின் பயனை சபையானது, மக்களின் பயன்பாட்டுக்கு உகந்த வகையில், செயற்படுதிறனை தத்தமது பகுதி ஊடாக வெளிப்படுத்தி உள்ளது. பணியாளர்களின் கலைத்திறனுக்கு களம் அமைத்துக் கொடுத்துள்ளது.

வளம்சார் சுயதொழில் அபிவிருத்திக்கு பல திட்டங்கள் இம் மலரின் ஊடாக வெளிக்கொண்டு வரப்பட்டுள்ளது. இக் கண்காட்சி மலர் தொனிப் பொருளுக்கு ஏற்ற வகையில் புதுமைகளுள் புக வேண்டுமென இறைவனை வேண்டுகின்றேன்.

**திரு.வே.இ.சிவஞானசோதி**<br>
செயலாளர்,<br>
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வளிப்பு<br>
மற்றும் மீள்குடியேற்றம் இந்துமத அலுவல்கள் அமைச்சு,<br>
கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

பனை அபிவிருத்திச்சபையானது 1978ஆம் ஆண்டில் முன்னாள் பெருந்தோட்ட கைத்தொழில் கௌரவ அமைச்சர் M.D.H. ஜெயவர்த்தனவினால் ஆரம்பிக்கப்பட்டு திரு.கே.சி.நித்தியானந்தா அவர்களை முதலாவது தலைவராகக் கொண்டு செயற்படத் தொடங்கியது. பல்வேறு வளர்ச்சிப் படிநிலைகளைக் கடந்து 2016 ஆம் ஆண்டில் வெற்றிகரமானதாக தன் சேவையை வழங்கிக்கொண்டிருப்பது பாராட்டுக்குரியது. சிறு கைத்தொழிலை மையமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட பனை அபிவிருத்திச்சபையானது இன்று தொழில்நுட்ப ரீதியில் வளர்ச்சியடைந்து எம்மால் பயிற்சி வழங்கப்பட்ட பயிற்சியாளர்கள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் படிநிலையை அடைந்திருப்பது பனை அபிவிருத்திச்சபையின் அதி உன்னத வளர்ச்சியையே காட்டி நிற்கின்றது. அந்தவகையில் 2016 ஆம் ஆண்டில் பனை அபிவிருத்திச் சபையால் தேசிய ரீதியில் நடாத்தப்படும் மாபெரும் பனைசார் உற்பத்திகளின் கண்காட்சியினை முன்னிட்டு “ஞாலத்தில் புதுமை புகும் தாலம்” எனும் தலைப்பிலான கண்காட்சி மலர் வெளிவருவது பெருமைக்குரியதாகும்.

கடந்த காலங்களில் பனை அபிவிருத்திச்சபையின் வளர்ச்சிக்கும் பனையை நம்பி வாழும் மக்களின் முன்னேற்றத்துக்கும் ஆணிவேராக நின்று உழைத்தோரையும், தற்போது பனை அபிவிருத்திச்சபையை வளர்ச்சிப்பாதையில் வெற்றிகரமாகக் கொண்டு செல்வதற்கு அயராது உழைக்கும் அனைத்துப் பணிப்பாளர்களையும், பணியாளர்களையும் பாராட்டுவதுடன், தங்கள் சேவைக்கு பனை அபிவிருத்திச்சபையின் தலைவர் என்றவகையில் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன். பனையை நம்பி வாழும் மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்கிலும் பனை வளத்தினூடு நாட்டின் பொருளாதார வளர்ச்சியைக் கட்டியெழுப்பும் நோக்கிலும் பதின்நான்காவது தலைவராக பதவியேற்ற என் எண்ணமும் கடமையும் இனிவரும் காலங்களில் திறம்பட செயல்வடிவம் பெற அனைவரது பங்களிப்பையும் ஒத்துழைப்பையும் எதிர்பார்த்து நிற்கின்றேன்.

**Dr.இ.சிவசங்கர்,**
தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# සභාපති තුමාගේ සුභ පැතුම් පණිවිඩය.

තල් සංවර්ධන මණ්ඩලය 1978 වසරේ දී හිටපු වතු වගා අත් කර්මාන්ත ගෞරව ඇමති එම්.ඩී.එච් ජයවර්ධන මහතා විසින් ආරම්භ කර කේ. සී නිත්‍යානන්දා මහතාගේ ප්‍රධානත්වයෙන් එහි වැඩ කටයුතු ආරම්භ කරන ලදී. විවිධ සංවර්ධන කඩයින් කිහිපයක් පසු කරමින් මෙම ආයතනය 2016 වර්ෂය දක්වා සේවා ලබා දෙයි.

සුළු කර්මාන්ත ව්‍යාපාර ඉලක්ක කර ගනිමින් ආරම්භ කළ මෙම තල් සංවර්ධන මණ්ඩලය අද තාක්ෂණික දියුණුව ලබා ගනිමින් අප විසින් පුහුණු කරන ලද පුහුණු කරුවන් හරහා විදේශීය රටවල් වලට භාණ්ඩ ආනයනය කිරීම අප ආයතනය ලබා ගත් උසස් වර්ධන පෙන්නුම් කරයි. ඒ වගේ ම 2016 වර්ෂයේ තල් සංවර්ධන මණ්ඩලයෙන් ජාතික මට්ටමින් ක්‍රියා කරන තල් ආශිත නිෂ්පාදනයේ මහා ප්‍රදර්ශනය සඳහා ''විශ්වයේ විශ්මිත කරන තල් '' යන තේමාවෙන් ප්‍රදර්ශන සඟරාව එළිදැක්වීම සතුටට කාරණාවකි.

පසු ගිය කාල වකවානු වල තල් සංවර්ධන මණ්ඩලයේ සංවර්ධනයට සහ තල් නිෂ්පාදන වලට යොමු වන ජනතාවගේ දියුණුව සඳහා කැප වු පිරිසව සහ වර්තමානයේ තල් සංවර්ධන මණ්ඩලයේ දියුණු මගට ගැනීමට කැප වුනු අධ්‍යක්ෂක වරු සියළු දෙනාම සහ නිලධාරීන් සියළු දෙනාම ප්‍රසන්සා කරන අතර තල් සංවර්දන මණ්ඩලයේ සභාපති වරයා වශයෙන් මගේ සුභ පැතුම් එකතු කරමි.

තල් ආශ්‍රිත නිෂ්පාදන වල යෙදෙන ජනතාවගේ ජීවනෝපාය වැඩි දියුණු කරන බලාපොරොත්තුවෙන් සහ තල් සම්පත් හරහා රටේ ආර්ථිකය නගා සිටු වීම සඳහා 14 වන සභාපති වරයා වශයෙන් පත් වුනු මගේ සිතුම් පැතුම් එළඹෙන කාලයේ දී විශිෂ්ටව ක්‍රියාත්මක කරන්න සියළු දෙනාගේ සහභාගිත්වය සහ සාමූහිකත්වය බලාපොරොත්තු වෙමි.

ස්තුතියි.
සභාපති
තල් සංවර්ධන මණ්ඩලය.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவர், தலைமைக் காரியாலய பணியாளர்கள்



தலைமைக் காரியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தலைவர், முகாமையாளர்கள்



## தலைமைக் காரியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வாழ்த்துச் செய்தி

**பா**ரம்பரியத்தின் வெளிப்பாடாய், பழமையின் உன்னதமாய் விளங்குவது எமது மூலவளமாகிய பனை. இதன் பயனை மக்களின் தேவைக்கேற்றவாறு ஆராய்ச்சி வெளிப்பாடுகளுக்கு ஒப்ப, நவீனங்களின் சேர்க்கையை உள்ளடக்கி இன்று பனை அபிவிருத்திச் சபை தேசிய ரீதியில், அபிவிருத்திப் பயணத்தில் முன்னிலை நோக்கி நகர்ந்துள்ளது.

"ஞாலத்தில் புதுமை புகும் தாலம்" என்ற தொனிப் பொருளில், மாபெரும் கண்காட்சியினை நடாத்தி, மற்றும் கண்காட்சி மலரினை வெளியிடுவதன் மூலம் சபையின் செயற்பாட்டின் வெளிப்பாடுகள் எல்லோரும் அறியும் வகையில் முன்வைக்கப்பட்டுள்ளது. அறிவு பூர்வமாகவும், ஆக்க பூர்வமாகவும் கண்காட்சி மலர் சிறப்புற அமைக்கப் பெற்றுள்ளது. மலரின் இலக்கை அடைய என்றென்றும் இறையாசி வேண்டுகின்றேன்.

**திரு.எம்.பி.லோகநாதன்**
B.Sc (Agriculture), M.Phil
பொது முகாமையாளர்,
பனை அபிவிருத்திச் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முகாமையாளரின் எண்ணத்துளிகள்

பனை அபிவிருத்திச் சபையின் பனை வள திரட்டுக்களின் கூடலாய் நமது பொருளாதார விருத்தி, சுகவாழ்வு நோக்கின் எத்தனமாக "ஞாலத்தில் புதுமை புகும் தாலம் - 2016" பனம் பொருள் கண்காட்சி, ஆய்வரங்கு மற்றும் விற்பனையும்.

எமது கற்பக தருவின் பொருளாதார முக்கியத்துவத்தையும் ஆரோக்கியமான சுகவாழ்விற்கான வழிகாட்டலையும் எமது மண் ணிற்கும் பிறதேசங்களிற்கும் உணர்த்தி அருகிவரும் பனை வளத்தின் பயன்கள் முக்கியமாக உணவுப் பழக்க வழக்கங்களை இளம் சந்ததியினருக்கு வெளிப்படுத்தி புத்தெளிச்சியாய் அமைந்து விளங்க பனை அபிவிருத்திச் சபையின் குடும்பத்தில் ஒருவனாக அகமகிழ்ந்து வாழ்த்துகின்றேன்.

**திரு.சி.குருபரராசா**
முகாமையாளர்(உற்பத்தி)
பனை அபிவிருத்திச் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உற்பத்திப் பகுதி



தலைமைக் காரியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை அபிவிருத்திச் சபை
# உற்பத்திப்பகுதி

மக்களின் பயன்பாட்டில் பனைசார் பொருட்களின் பாவனை தொன்றுதொட்டு இருந்து வருகிறது. எமது மூதாதையர் இதனை முக்கிய உணவாகவும் உட்கொண்டனர். இது இயற்கையான ஊட்டச்சத்து மிகுந்த ஆரோக்கிய உணவாக பல விஞ்ஞான ஆய்வுகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது. இடைக்காலத்தில் பல நவீன மாயைகளில் மூழ்கிய மக்கள் இவற்றை விட்டு விலகியதால் பற்பல நோய்களிற்கு ஆளாகியதன் பயனாக தற்போது இவற்றின் பயன்பாட்டின் அவசியத்தை உணரத் தொடங்கியுள்ளனர்.

பனை நமது தேசத்தின் பெரும் வளம் குறிப்பாக தமிழர்களின் அடையாளம் என வர்ணிக்கப்படுகிறது. நமது வாழ்க்கையின் பயன்பாட்டிற்கு பனை தேவையான பல பொருட்களைத் தரக்கூடியது. பனையில் இருந்து நூற்றுக்கணக்கான உணவு மற்றும் உணவுசாரா பொருட்களை உற்பத்தி செய்ய முடியும். இதனால் பனையினை கற்பகதரு, பஞ்சம் போக்கி மற்றும் கற்பகம் என பல பெயர்களால் வர்ணிக்கப்படுகிறது.

நமது முன்னோர்கள் பனைசார் உற்பத்திகளைக் கூடுதலாக நுகர்ந்ததன் பயனாக ஆரோக்கியமான நோயற்ற சுக வாழ்வு வாழ்ந்தனர் என்பதை பல ஆய்வுகள் ஆதார பூர்வமாக நிரூபித்துள்ளன.

எமக்குக் கிடைத்துள்ள இவ்அரியவளத்தை சிதைவடையாது ஒருங்கிணைத்து மேம்படுத்த 1978 ஆம் ஆண்டில் பனை அபிவிருத்திச் சபை ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட பனை அபிவிருத்திச் சபை மூன்று பிரதான நோக்கை அடிப்படையாகக் கொண்டு இயங்கி வருகின்றது.

01. பனை வளத்தைப் பயன்படுத்துதலும் மேம்படுத்துதலும்.
02. பனை வளத்தை நம்பி வாழும் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல்.
03. தேசிய உற்பத்தி மற்றும் வருமானத்திற்குப் பங்களித்தல்.

## பனை அபிவிருத்தி சபையின் உற்பத்திப்பகுதியும் அதன் செயற்பாடுகளும்

பனை அபிவிருத்திச் சபையின் செயற்பாடுகளை இலகுவகையில் முன்னெடுக்கும் பொருட்டு 08 வகையாகப் பிரிக்கப்பட்டதில் உற்பத்திப்பகுதியும் ஒன்றாகும். உற்பத்திப் பகுதியானது பின்வரும் வகையிலான உற்பத்திகளை பிரதானமாக மேற்கொள்வதுடன் அவற்றை மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களையும் பயிற்சி மற்றும் உபகரணங்களை வழங்கி ஊக்குவிப்பதுடன், அவற்றிற்கான சந்தை வாய்ப்பினையும் ஏற்படுத்திக்கொடுப்பது வரப்பிரசாதமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உற்பத்திகளாவன:**



01. பனஞ்சாற்று உற்பத்திகள்.
02. பனம்பழம்சார் உற்பத்திகள்.
03. பனங்கிழங்குசார் உற்பத்திகள்.
04. பனம் தும்புசார் உற்பத்திகள்.
05. பனை மரம்சார் உற்பத்திகள்.

## 01. பனஞ்சாற்று உற்பத்திகள்

பனம் பாளையினைப் பதப்படுத்துவதன் மூலம் பெறப்படும் உற்பத்தியாகும். இவ் உற்பத்தி 02 வகைப்படும்.



**பதநீர்**

பாளையினை பதப்படுத்துவதன் மூலம் பெறப்படும் பதார்த்தத்தை மதுவத் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் பொருட்டு முட்டியினுள் நீறு பூசப்பட்டு பெறப்படுவதாகும்.

**கள்**

பாளையினைப்பதப்படுத்துவதன் மூலம் நேரடியாக பெறப்படுவதாகும்.

**பதநீர் :**



பதநீரில் இருந்து பின்வரும் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) பதப்படுத்திய பதநீர்** -

சுண்ணாம்பை நீக்குவதன் மூலம் தயாரிக்கப்படுவது. இது நேரடியாகப் பருகுவதற்கு உகந்தது.



**(ஆ) பனம் பாணி** - பதப்படுத்திய பதநீரை 106° செல்சியஸ் வெப்பமாக்கப்படுவதன் மூலம் தயாரிக்கப்படும் பாகு.

**(இ) பனங்கற்கண்டு** பனம் பாணியினை 108°, 112°, 113° செல்சியஸ்களில் வெப்பமேற்றி பிரத்தியேகமான தொட்டியிலிட்டு 40 தொடக்கம் 45 நாட்கள்வரை பாதுகாத்தல் மூலம் பெறப்படுவது.



**(ஈ) பனஞ்சீனி** - பனம் பாணியினை 110° செல்சியஸில் வெப்பமேற்றி பிரத்தியேகமான தொட்டியிலிட்டு 48 மணித்தியாலங்களின் பின் பெறப்படுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(உ) **பனை வெல்லம்** - பனம் பாணியினை 118° தொடக்கம் 122° செல்சியஸ்கள் வரை வெப்பமேற்றிப் பெறப்படுவது.



**கள்:**

பின்வரும் வகைகளில் பயன்படுத்தப்படுகிறது.





(அ) கள் - நேரடியாகப் பருகுவதற்கு உகந்தது. இதில் மதுசாரம் அடங்கியுள்ளது.

(ஆ) பதப்படுத்திய கள் - மதுவம் அற்றதுடன் பருகுவதற்கு உகந்தது. இதில் மதுசாரம் அடங்கியுள்ளது.



(இ) **மதுசாரம்** - கள்ளை வெப்பமேற்றி ஆவியாக்கி மீள ஒடுக்குவதன் மூலம் பெறப்படுவது. இது சாராய உற்பத்திக்குப் பயன்படுத்தப்படுகிறது.



(ஈ) **வினாகிரி** - நொதித்த கள்ளை அமுக்க வடிகட்டல் மூலம் பெறப்படுவது.

**பனம் பழம்சார் உற்பத்திகள்.**

பனம் பழத்திலிருந்து பெறப்படும் சாற்றிலிருந்தான உற்பத்திகளாகும். இதிலிருந்து பின்வரும் உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.





**(அ) பதப்படுத்திய பனங்களி** - பனம்பழ சாற்றை அங்கீகரிக்கப்பட்ட பாதுகாப்பு பதார்த்தம் சேர்த்து காய்ச்சி பெறப்படுவது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**(ஆ) பனாட்டு** - பனம்பழ சாற்றை பாயில் பரவி நன்கு வெய்யிலில் காயவிட்டு தயாரிக்கப்படுவது.

**(இ) பாணிப் பனாட்டு** - பனாட்டுடன் பனம் பாணி மற்றும் இதர அனுமானங்கள் சேர்த்து தயாரிக்கப்படுவது.







**(ஆ) பனம் ஜாம்** - பதப்படுத்திய பனங்களியுடன் இதர அனுமானங்கள் சேர்த்து தயாரிக்கப்படுவது.




**(இ) பனங்கிறஸ்** - பதப்படுத்திய பனங்களியுடன் இதர அனுமானங்கள் சேர்த்து தயாரிக்கப்படுவது.



**(ஈ) பனம் பானம்** - பதப்படுத்திய பனங்களியுடன் இதர அனுமானங்கள் சேர்த்து தயாரிக்கப்படுவது.

**(உ) பனங்காய் பலகாரம்** - பதப்படுத்திய பனங்களியுடன் மாவு மற்றும் சீனி சேர்த்து தயாரிக்கப்படுவது.



**(ஊ) இதர உற்பத்திகள்** - ஐஸ்கிறீம், யோக்கட், கேக், இனிப்பு வகைகள் மற்றும் சிற்றுண்டி வகைகள் தயாரிக்கலாம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 02. பனங்கிழங்குசார் உற்பத்திகள்



பனம் விதையிலிருந்து பெறப்படும் உற்பத்தி யாகும். இதிலிருந்து பின்வரும் உற்பத்திகள் மேற்கொள் ளப்படுகின்றன.

**(அ) பனங்கிழங்கு** - அவிப்பதன் மூலம் உணவாகப் பயன்படுத்த முடியும்.



**(ஆ) புழுக்கொடியல்** - அவித்த பனங்கிழங்கை வெய்யிலில் காயவிட்டுப் பெறப்படுவது. இதிலிருந்து பின்வரும் உணவுப் பொருட்கள் தயாரிக்கப் படுகிறது.



**(இ) புழுக்கொடியல் மா** - புழுக்கொடியலை அரைத்து சீனி தேங்காய்ப்பூ கலந்து உணவுவிற்குப் பயன்படுத்த முடியும். அத்துடன் லட்டு, கேசரி போன்ற உணவு வகைகளும் மேற்கொள்ளலாம்.




**(ஈ) பாம்போசா** - புழுக்கொடியல் மாவுடன் கடலை, உழுந்து, பயறு, அரிசி, சீனி மற்றும் இதர அனுமானங்கள் சேர்த்து தயாரிக்கப்படுவது.



**(உ) ஒடியல்** - பனங்கிழங்கை பச்சையாக வெய்யிலில் காயவிட்டுப் பெறப்படுவது.

**(ஊ) ஒடியல் மா** - ஒடியலை அரைத்து பெறப்படுவதாகும். இதிலிருந்து ஒடியல் பிட்டு, ஒடியல் கூழ், பிஸ்கட் வகைகள், மிக்சர், பகோடா, முறுக்கு போன்ற உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.

## 01.பனம் தும்புசார் உற்பத்திகள்

பனங்கிழங்கிலிருந்து பெறப்படும் உற்பத்தியாகும். பனங் கங்கினை அடிப்பதன் மூலம் பெறப்படும் கோறாத் தும்பினை சுத்திகரித்து:

(i) 1ம் தர சுத்திகரித்த தும்பு பெறப்படுகிறது. இது ஏற்றுமதிக்காகவும் தூரிகை வகைகள் தயாரிப்பிற்காகவும் பயன்படுத்தப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



(II) இதன் பின்னரான கழிவிலிருந்து 2ம் தர சுத்திகரித்த தும்பு பெறப்படுகிறது. இதிலிருந்து தும்புத்தடி, கயிறு, மற்றும் அலங்காரப் பொருட்கள் போன்ற உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.



(III) மேலும் இதன் பின்னரான கழிவிலிருந்து 3ம் தர சுத்திகரித்த தும்பு பெறப்படுகிறது. இதிலிருந்து கால்மிதி, மெத்தை மற்றும் இதர உற்பத்திகள் மேற்கொள்ளப் படுகின்றன.



(IV)இறுதியாகப் பெறப்படும் கழிவானது பயிர்களிற்கான பசளையாகப் பயன்படுத்தப்படுகிறது.

## 02. பனை மரம்சார் உற்பத்திகள்

வயது முதிர்ந்த இதர பலன் குறைந்த பனை மரத்திலிருந்து மேற்கொள்ளப்படும் உற்பத்தியாகும். இதிலிருந்து வீட்டுக்கூரை, பூவாஸ், தளபாடங்கள் போன்ற உற்பத்திகள் மேற்கொள்ளப்படுகின்றன.



### ❖ வாழ்வாதார அபிவிருத்தி உதவித்திட்டம்:

2014 ஆம் ஆண்டு முதல் பனை அபிவிருத்திச் சபையின் நிரல் அமைச்சின் விசேட திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்திவரும் வாழ்வாதார அபிவிருத்தி உதவித்திட்டம் மூலம் பனைசார் உற்பத்திகளில் ஈடுபட்டுவரும் பல உற்பத்தியாளர்கள் நன்மையடைந்து வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இவற்றில் உற்பத்திப் பகுதியின் கீழ் முன்னெடுக்கப்படும் பின்வரும் துறைகளில் பயனடைந்த பயனாளிகள் விபரம் வருமாறு,

- பதநீர் உற்பத்தி - 250 பயனாளிகள்
- கள் உற்பத்தி - 150 பயனாளிகள்
- பனங்களிசார் உற்பத்தி - 43 பயனாளிகள்
- பனங்கிழங்குசார் உற்பத்தி - 200 பயனாளிகள்
- தும்புசார் உற்பத்தி - 04 மில்லியன்கள் பெறுமதியான கட்டடமும் தும்புசார் உபகரணங்களும் பளை ப.தெ.வள அ.கூ.சங்கத்திற்கு வழங்கப்பட்டது.
- உணவுசார் உற்பத்தி - 04 மில்லியன்கள் பெறுமதியான கட்டடமும் உணவுசார் உற்பத்தி உபகரணங்களும் செல்வபுரம் ப.தெ.அ.கூ.சங்கத்திற்கு வழங்கப்பட்டது.

பெரும்பாலும் பனையிலிருந்து பெறப்படும் வளங்கள் குறிப்பிட்ட பருவகாலங்களில் மட்டும் கிடைப்பனவாக இருப்பதால், அவற்றைப் பாதுகாத்து ஏனைய காலங்களிலும் பயன்படுத்தும் வகையில் உரிய வழிமுறைகளைக் கண்டறிதல் அவசியமாயிற்று. இதற்கான உத்திகளையும் ஆய்வுகளையும் மேற்கொண்டு அவற்றை உற்பத்தியாளர்களிற்கு அறிமுகப்படுத்தும் பணியையும் பனை அபிவிருத்திச் சபை மேற்கொண்டு வருகிறது.

பொதுவாக பனைசார் உற்பத்திகள் குடிசைக் கைத்தொழில்களாகவே மேற்கொள்ளப் படுகின்றன. இவற்றை நவீன இயந்திர சாதனங்களைப் பயன்படுத்தக்கூடிய ஆலைத் தொழில்களாக மாற்றுதல் உற்பத்திகளைத் தரமானதாகவும் அதேவேளை அதிகரிக்கவும் வழிசெய்யும். இம்முயற்சியிலும் பனை அபிவிருத்திச் சபை படிப்படியாக இயந்திர சாதனங்களை வடிவமைத்து அறிமுகப்படுத்தி வருகிறது.

பனைசார் உற்பத்திகளில் ஈடுபட பின்னிற்பதற்கு போதிய வருவாய் இன்மை பிரதான காரணியாக அமைகிறது. இவற்றை மேம்படுத்த தரநிர்ணயத்தை உறுதிப்படுத்துவதுடன் தொடர்ச்சியான உற்பத்தி சார்ந்த விளம்பரப்படுத்தல் அவசியமாகிறது. அத்துடன் ஏற்றுமதிச் சந்தை வாய்ப்பை ஏற்படுத்துதல் உற்பத்தியாளர்களிற்கு மேலும் வரப்பிரசாதமாக அமையும். இவற்றிலும் பனை அபிவிருத்திச் சபை முனைப்பைக் காட்டிவருவது இங்கு குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முகாமையாளரின் எண்ணத்துளிகள்

தன்னை வாழ்வாதாரமாக நம்பி வாழ்கின்ற மக்களை வாழ்விக்க வல்ல தால விருட்சத்திலிருந்து எவ்வாறாக தொழில்நுட்ப முன்னேற்றத்தின் ஊடான அதி உச்சப்பயன்பாட்டின் பரிணாமத்தினை அடைய முடியும் என்னும் ஆணித்தரமான கருத்தினை மக்கள் மத்தியிலே விதைப்பதற்காய், பனை அபிவிருத்திச் சபையினால் "ஞாலத்தில் புதுமை புகும் தாலம்" என்ற தொனிப்பொருளில் முன்னெடுக்கப்பட்டுள்ள கண்காட்சியும், அதனோடு இணைந்து வெளியீடு செய்யப்படும் கண்காட்சி மலரும் சிறப்புற்று இதன் மூலமாக கொண்டு சொல்லப்படுகின்ற ஆக்கபூர்வமான கருத்துகள் யாவும் செயற்திறன் பெற்று, மேலும் இவ்வளமும் வளம்சார் தொழில்துறையும் பல்கிப்பெருகி விஞ்ஞான தொழில்நுட்பத்துடன் கூடிய உத்திகள் மற்றும் ஆராய்ச்சிகளின் மூலமான சிறப்பான வழிகாட்டல்களுடன் அபிவிருத்தி அடைந்து என்றென்றும் மக்களுக்கு வரப்பிரசாதமாய் அமைவதற்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி.ஜ.சுமித்திரா**
முகாமையாளர் (அபிவிருத்தி)
பனை அபிவிருத்திச் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்திப் பகுதி



தலைமைக் காரியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அபிவிருத்திப்பிரிவு

பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்திப் பிரிவானது, பின்வரும் செயற்பாடுகளில் முக்கியமாக தனது கவனத்தைச் செலுத்தி வருகின்றது.

- பனை மீள் நடுகை.
- பனந்தோட்டங்களை உருவாக்குதலும், பராமரித்தலும், விஸ்தரித்தலும்
- பனை தறித்தலைக் கட்டுப்படுத்தல், அது தொடர்பான விழிப்புணர்வினை ஏற்படுத்தலும்.
- பனை சார்ந்த தொழிலை வாழ்வாதாரமாகக் கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்குடன், அபிவிருத்தி சார்ந்த செயற்றிட்டங்களை வரைதலும், ஏனைய பிரிவுகளின் ஒத்துழைப்புடன் அதனை அமுல்படுத்தலும்.

## பனை மீள்நடுகை.

இயற்கை வளங்களில் எமது பிராந்திய மூலவளமாகிய பனை வளமானது எமக்கு மட்டுமல்லாது, இன்னும் பல இலட்ச வருடங்கள் வாழவிருக்கும் மானிட வர்க்கத்திற்கும், உயிரினங்களுக்கும் சொந்தமானது. பனையின் பயனறிந்து தான் நம் முன்னோர்கள் பஞ்சம்போக்கி, தாலமூல விருட்சம், கற்பகதரு, ஆகிய பொருள் பொதிந்த திருநாமங்களால் பனையை அழைத்தனர். இத்தகைய பெருமையுடைய அரும் பெரும் பொக்கிஷமாகிய இவ்வளம் வடக்கு கிழக்குப் பிராந்தியத்தில் ஏற்பட்ட போர்க்காலச் சூழ்நிலையால் அழிக்கப்பட்டமையானது துர்அதிஸ்டமானது.

இயன்றளவு இவ்வளம் அழிவுறுவதைத் தடுத்து புதிய மீள் நடுகையினூடாக இவ்வளச் சமநிலையினை நிலைநிறுத்த வேண்டிய பாரிய கடப்பாடு எமது இளஞ்சந்ததியினருக்கும், எமது சபைக்கும் உண்டு என்பதனை எவரும் மறுக்க இயலாது. அந்தவகையில் இவ்வளத்தினைப் பாதுகாக்கும் பொருட்டு பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்திப் பிரிவானது ஆண்டு தோறும் வடக்கு கிழக்கு மாகாணங்களிலும், அம்பாந்தோட்டை, புத்தளம், உள்ளிட்ட பனை செழித்து வளரக் கூடிய இடங்களை இனங்கண்டு பெருந்தொகையான பனை விதைகளைப் வெற்று காணிகளிலும், ஏனைய பயிர்ச் செய்கைக்கு உதவாத நிலங்களிலும் நடுகை செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இச்செயற்றிட்டத்தில் மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள், பாடசாலைகள், சமூகம் சார்ந்த கிராமிய அமைப்புக்கள், பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், வடமாகாணசபை என்பனவும் எம்மோடு இணைந்து செயற்பட்டிருந்தமையும் வரவேற்கத் தக்க விடயமாகும்.

கடந்த இரு ஆண்டுகளில் பனை அபிவிருத்திச் சபையினால் பல்வேறு மாவட்டங்களில் நடுகை செய்யப்பட்ட பனம் விதைகளின் எண்ணிக்கை அட்டவணை மூலம் காட்டப்பட்டுள்ளது.

| மாவட்டம் | நடுகை செய்யப்பட்ட பனம் விதைகளின் எண்ணிக்கை | |
|---|---|---|
| | 2014 | 2015 |
| யாழ்ப்பாணம் | 89,450 | 608,700 |
| மன்னார் | | 127,450 |
| வவுனியா | 50,000 | 115,105 |
| கிளிநொச்சி | 50,000 | 74,000 |
| முல்லைத்தீவு | 66,000 | 140,000 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| திருகோணமலை | 10,000 | 43,500 |
| மட்டக்களப்பு | 10,000 | 35,000 |
| அம்பாறை | 10,000 | 10,000 |
| புத்தளம் | 10,000 | 15,000 |
| அம்பாந்தோட்டை | 14,000 | 15,000 |
| அநுராதபுரம் | 5,500 | |
| மொத்தம் | 382,700 | 1,183,755 |

பனை நடுகையின் தப்பும் திறனானது குறிப்பாக பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது. மண்வளம், காலநிலை, பன்றித்தாக்கம், கால்நடைகளின் தாக்கம் பனம் விதைத் தெரிவு என்பன அவற்றில் மிக முக்கியமானதாக அமைகின்றது. பனம் விதைத் தெரிவானது சிறப்பாக அமையுமாயின், ஏனைய வெளிப்புறக்காரணிகளின் தாக்கங்கள் இல்லாதுவிடின் மணற்பாங்கான பிரதேசங்களில் 80% - 85 % மான முளைதிறனும் , களித்தரைகளில் 10% - 35 % மான முளைதிறனும் பொதுவாக அவதானிக்கப்படுகின்றது. சில இடங்களில் பன்றித் தாக்கத்தினாலும், நடுகைக்குப் பின்னரான கடும் வறட்சியினாலும் முளைதிறன் மோசமாகப் பாதிக்கப்படுகின்றமை விசேட அவதானிப்புக்குரியதாகும்.

## பனம் நாற்று நடுகை :

பனம் நாற்று மேடைகளில் இருந்து பனம் நாற்றுக்களை உற்பத்தி செய்து நடுகை செய்யும் முறையும் கடந்த காலங்களில் பனை அபிவிருத்திச் சபையினால் மேற்கொள்ளப்பட்டு வந்தது. இருப்பினும் இந்நாற்றுக்கள் வீதியோரங்களிலும், திறந்த வெளிகளிலும் நடுகைக்குப் பொருத்தமற்றதாக காணப்பட்டமையினால் இடைநிறுத்தப்பட்டுள்ளது. எனினும் பாதுகாப்பான வேலியுடைய பராமரிப்புள்ள இடங்களில் நடுகை செய்வதற்கு மிகப் பொருத்தமான முறை இதுவாகும்.

## மாதிரிப் பனந் தோட்டங்கள்

தான் தோன்றித்தாவரமாகிய பனையினைத் வெற்றுக் காணிகளிலும், ஏனைய பயிர்ச் செய்கைக்கு உதவாத நிலங்களிலும் தோட்டமாக திட்டமிட்டு குறிப்பிட்ட இடைவெளியில் நாட்டி பனந்தோட்டங்களாக விஸ்தரிப்பதன் மூலமாக அக்காணிகளிலிருந்து நீண்டகால பயனைப் பெறமுடிவதுடன், குறுகிய கால விளைச்சலைத் தரக்கூடிய சாத்தியமான பயிர்களை இனங்கண்டு பனைகளுக்கிடையே ஊடுபயிராக நடுகை செய்வதன் ஊடாக குறுகிய காலப்பகுதியில் அத்தோட்டங்களில் பராமரிப்புக்குரிய வருமானத்தை ஈட்டிக் கொள்ளமுடியும்.

இதற்குரிய மாதிரியாக பனை அபிவிருத்திச் சபையினால் சில விவசாயத்திற்கு ஒவ்வாத தரிசு நிலங்களில் பனம் விதைகளை நாட்டி மாதிப் பனந்தோட்டங்கள் ஸ்தாபிக்கப்பட்டன. இந்த வகையில் தற்பொழுது பனை அபிவிருத்திச் சபையின் நிர்வகிப்பில், பின்வரும் இடங்களில் மாதிரிப் பனந்தோட்டங்கள் காணப்படுகின்றது.

மாதிரிப் பனந்தோட்டங்களின் விபரம் பின்வருமாறு

| மாவட்டம் | அமைவிடம் | விஸ்தீரணம் (ஏக்கர்) | ஊடுபயிர்ச்செய்கை விபரம் |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | குடத்தனை | 10 | - |
| | மாமுனை | 500 | மரமுந்திரிகை |
| | நெடுந்தீவு - ஓமலக்காடு | 05 | - |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| கிளிநொச்சி | ஊற்றுப்புலம் | 10 | தென்னை மரங்கள் |
| | முழுங்காவில் | 02 | - |
| | கௌதாரிமுனை | 10 | |
| வவுனியா | புளியங்குளம் | 10 | தேசி , கொய்யா , பூசணி , பயறு |
| அம்பாந் - தோட்டை | வீரவில | 20 | எள்ளு, வாழை, உழுந்து , மிளகாய்,மரவள்ளி |

இதனைவிட எதிர்காலத்தில் இவற்றைப்போன்று வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் மாதிரிப்பனந்தோட்டங்களை உருவாக்குவதற்கு ஏதுவாக மாதிரிப் பனந்தோட்டங்களை உருவாக்குவதற்கு சாதகமாக காணப்படுகின்ற காணிகளை இனங்கண்டு அவற்றினை மாதிரிப் பனந்தோட்டங்களாக அபிவிருத்திசெய்யும் பணிகளை அபிவிருத்திப்பிரிவு முன்னெடுத்து வருகின்றது.

## பனை தறித்தலும் கட்டுப்பாடும்

பனை தறித்தலைக் கட்டுப்படுத்தும் செயற்பாடும், பனை தறித்தல் தொடர்பான விழிப்புணர்வுச் செயற்பாடுகளும், அபிவிருத்திப் பிரிவினூடாகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. பனை தறித்தலுக்கென பிரதேச செயலகங்களுக்கு கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் சபையின் வெளிக்கள உதவியாளர்களினால் பரீட்சிக்கப்பட்டு வழங்கப்படுகின்ற சிபார்சின் அடிப்படையில், ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள பிரதேச செயலகங்களினால் பனை தறித்தலுக்கான அனுமதி வழங்கப்படும் முறையே தற்பொழுது நடைமுறைப்படுத்தப்படுவதனால், பனை தறித்தல் ஓரளவு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது. வீட்டுத்திட்டங்கள், அபாயம், விசேட கட்டடங்கள் அமைப்பதற்கான காணி விஸ்தரிப்பு போன்ற காரணங்களுக்காக மட்டும் அது தொடர்பான ஆவணங்கள் ஆராயப்பட்டு பனை தறிப்பதற்குரிய சிபார்சு வழங்கப்படுகின்றது. இருப்பினும் சட்டவிரோதமான முறையில் பனை தறிக்கும் செயற்பாடுகள் இன்னமும் தொடர்ந்த வண்ணமே உள்ளது என்பதனை எமக்கு கிடைக்கப் பெறுகின்ற முறைப்பாடுகள் மூலமாகவும், காவல்துறையினரினால் கைப்பற்றப்பட்டு எம்மிடம் இழப்பீட்டு பெறுமதி அறிக்கையினை பெற்றுக் கொள்வதற்காக வழங்கப்படும் வேண்டுகைகளின் மூலமாகவும் அறியக் கூடியதாக உள்ளது.

பனை தறித்தலைக் கட்டுப்படுத்தும் பணியில் காவல்துறையினருடனும், பிரதேச செயலகங்களுடனும் இணைந்து பனை அபிவிருத்திச் சபையானது பாரிய பங்களிப்பினை வழங்கி வருகின்றது. அவற்றில் பிரதானமாக;

- பனை தறித்தல் தொடர்பாக பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப்பெறுகின்ற தகவல்களுக்கு உடனடியாக நேரில்சென்று விசாரித்து காவல்துறையினர் மற்றும் பிரதேச செயலாளருக்கு தகவல்களை வழங்குதல்.

- சட்டவிரோதமாக தறிக்கப்பட்டு காவல் துறையினரினால் கைப்பற்றப்பட்ட பனை மரங்களை நேரில் சென்று பார்வையிட்டு, அவர்களினால் மேற்கொள்ளப்படுகின்ற சட்ட நடவடிக்கைகளுக்காக நீதிமன்றங்களில் சமர்ப்பிப்பதற்கு இழப்பீட்டுப் பெறுமதி அறிக்கை வழங்கல்.

- வீதிகளில் பனை தறித்தலுக்கு எதிரான விழிப்புணர்வு விளம்பரங்கள் சுவரொட்டிகளை நிறுவுதல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்வுகளை ஒழுங்கமைத்தல் போன்ற விடயங்களைக் குறிப்பிடலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடந்த இரு ஆண்டுகளாக யாழ்.மாவட்டத்தில் பிரதேச செயலக ரீதியில் அனுமதி பெறப்பட்டு தறிக்கப்பட்ட பனை மரங்களின் விபரம்

| பிரதேச செயலாளர் பிரிவு | 2014 | 2015 |
|---|---|---|
| தெல்லிப்பளை | 1835 | 637 |
| உடுவில் | 732 | 323 |
| கோப்பாய் | 375 | 227 |
| சண்டிலிப்பாய் | 1051 | 818 |
| சங்கானை | 1721 | 1,144 |
| காரைநகர் | 752 | 1,999 |
| பருத்தித்துறை | 840 | 1,022 |
| கரவெட்டி | 890 | 1,009 |
| மருதங்கேணி | 437 | 801 |
| வேலணை | 545 | 507 |
| நல்லூர் | 85 | 72 |
| சாவகச்சேரி | 1995 | 3,415 |
| ஊர்காவற்றுறை | 396 | 170 |
| நெடுந்தீவு | .. | 26 |
| யாழ்ப்பாணம் | .. | 25 |
| மொத்தம் | 11654 | 12,195 |

கடந்த இரு ஆண்டுகளாக ஏனைய மாவட்டங்களில் அனுமதி பெறப்பட்டு தறிக்கப்பட்ட பனை மரங்களின் விபரம்

| மாவட்டம் | 2014 | 2015 |
|---|---|---|
| கிளிநொச்சி | 6,399 | 2,818 |
| முல்லைத்தீவு | 477 | 168 |
| வவுனியா | 45 | 251 |
| மன்னார் | 1,736 | 3,938 |
| திருகோணமலை | 291 | 569 |
| மட்டக்களப்பு | - | 1,279 |
| அம்பாறை | - | 18 |
| புத்தளம் | 5 | 17 |
| மொத்தம் | 8,953 | 6,072 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விசேட செயற்றிட்டங்கள்

➢ விசேட வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டம்

பனை சார்ந்த பொருளாதாரத்தினை நம்பி வாழும் எழுபதாயிரம் குடும்பங்களின் வாழ்வாதாரத்தினை உயர்த்துவதற்காக பனை அபிவிருத்திச் சபையின் அபிவிருத்திப்பிரிவினால் முன்மொழியப்பட்ட விசேட செயற்றிட்டங்கள் மூன்று ஆண்டுத் திட்டமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

2014ஆம் ஆண்டு வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களின் விபரம் பின்வருமாறு

❖ கைத்தொழில் கிராம அபிவிருத்தி திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு மாவட்டத்தில் செல்வபுரம் கைப்பணி மற்றும் உற்பத்தி நிலையம், பாண்டியன்குளம் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களிற்கு 4.6 மில்லியன் பெறுமதியான கட்டட உபகரணங்கள் வழங்கியமை.

❖ கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு 3.17 மில்லியன் பெறுமதியான பனந்தும்பு உற்பத்தி நிலையம், தும்பு உற்பத்திக்கான இயந்திரத் தொகுதி மற்றும் போக்குவரத்துக்களை மேற்கொள்வதற்கான மினி லொறி வாகனம் என்பவை வழங்கப்பட்டது.

❖ யாழ். மாவட்டத்தில் கோப்பாய், பருத்தித்துறை மற்றும் முல்லைத்தீவு மேற்கு ஆகிய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களிற்கு போத்தலில் கள் அடைக்கும் தொழிற் சாலைக்காக தலா 4 மில்லியன் பெறுமதியான இயந்திரப் பொறித் தொகுதிகள் வழங்கப்பட்டமை

❖ வடகிழக்கு மாகாணங்களில் பதனீர் உற்பத்தி செய்யும் 250 பனந்தொழில் வல்லுநர்கள் பனை தென்னை வளக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாகத் தெரிவுசெய்து அவர்களுக்கு ரூபா 20000.00 பெறுமதியான சைக்கிள் மற்றும் பனந் தொழிலுக்கான உபகரணங்களை வழங்கியமை.

❖ யாழ். மாவட்டத்தில் கரவெட்டி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்திற்கு ரூபா 5 இட்சம் பெறுமதியான பனை வெல்ல உற்பத்தி நிலைய உபகரணங்கள் வழங்கியமை.

❖ யாழ். மாவட்டத்தில் அச்சுவேலி, கொடிகாமம் ஆகிய பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களிற்கு 2.5 மில்லியன் பெறுமதியான நவீன பனை வெல்ல உற்பத்தி நிலையம் அமைத்து வழங்கப்பட்டமை.

❖ தேர்ந்தெடுக்கப்பட்ட மகளீர் அமைப்புகளின் ஊடாக பனங்களி உற்பத்தியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, அவர்களில் 5 பயனாளிகளை ஒரு குழுவாக்கி, அவ்வாறான 8 குழுக்களுக்கு 3 இலட்சம் பெறுமதிக்கு மேலான பனங்களி பிரித்தெடுக்கும் இயந்திரம் மற்றும் பனங்களி உற்பத்திக்கான இயந்திரங்களை வழங்கியமை.

❖ பனை அபிவிருத்திச் சபைக்கு பனங்கிழங்கு சார் உற்பத்திகளை வழங்கும் 200 பயனாளிகளைத் தெரிவுசெய்து, அவர்களுக்கு தலா ரூபா 20000.00 பெறுமதியான பனங்கிழங்கு உற்பத்திக்கான உபகரணங்கள் மற்றும் தொழிற்படும் மூலதனம் என்பன வழங்கப்பட்டது.

❖ மன்னார் மாவட்டத்தில் மடுவில் பனைசார் கொள்வனவு விற்பனை நிலையம் 3 மில்லியன் பெறுமதியில் அமைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2015ஆம் ஆண்டு விசேட வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்றிட்டங்களின் விபரம் பின்வருமாறு

- ❖ யாழ்ப்பாணம் வலிகாமம் கொத்தணி மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு ப.தெ.வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கம் ஆகிய சங்கங்களுக்கு தலா ஒவ்வொரு போத்தலில் கள் அடைக்கும் பொறித் தொகுதி சுமார் 04 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது.
- ❖ முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு மற்றும் யாழ். மாவட்டத்தில் மானிப்பாய், தெல்லிப்பளை மற்றும் கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரியில் உள்ள ப.தெ.வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களிற்கு தலா 03 மில்லியன் பெறுமதியான ஒவ்வொரு பனை வெல்ல உற்பத்திக்கான பொறித் தொகுதி வழங்கப்பட்டது.
- ❖ தேர்ந்தெடுக்கப்பட்ட மாதர் சங்கங்களுக்கு ஊடாக பனங்களி உற்பத்தியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு, 3 மில்லியன் பெறுமதியான பனங்களி பிரித்தெடுக்கும் இயந்திரம் மற்றும் பனங்களி உற்பத்திக்கான பொருட்கள் 8 குழுக்களுக்கு வழங்கியமை.

2016ஆம் ஆண்டு விசேட வாழ்வாதார நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமுல்படுத்தப்படவுள்ள சில செயற்றிட்டங்களின் விபரம் பின்வருமாறு:

- ❖ பனங்களி, பனங்கிழங்குசார் உணவு உற்பத்தியில் ஈடுபடும் ப.தெ.வளக் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்களுக்கான பயிற்சியும், உபகரணத் தொகுதி வழங்குதலும். (100 குடும்பங்களுக்கு பனங்களி இயந்திரம், ஒடியல் மா அரைக்கும் இயந்திரம், பனாட்டுப் போடும் இயந்திரம் உள்ளடங்கலாக )
- ❖ பனங்கிழங்கு சார் உற்பத்தியினை குடிசைக் கைத்தொழிலாக மேற்கொள்ளும் உற்பத்தியாளர்களின் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்குடன் தொழிற்படு மூலதனம் வழங்குதலும், சுகாதாரமான உற்பத்தியினூடாக தரமேம்பாட்டிற்காக உற்பத்தி உபகரணங்கள் வழங்குதலும்.
- ❖ பனந்தும்பு உற்பத்தியினை வினைத்திறனுடையதாக மாற்றுதலின் பொருட்டு நவீன தும்படிக்கும் இயந்திரத்தினை அறிமுகம் செய்தல்.
- ❖ பனை சார்ந்த உற்பத்தியைப் பிரபல்யப்படுத்தல், மற்றும் பனை சார்ந்த உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை விஸ்தரித்தல் என்பவற்றை நோக்காகக் கொண்டு தேசிய ரீதியில் கண்காட்சிகளை ஒழுங்குபடுத்தல்.
- ❖ பனந்தொழில் வல்லுநர்களை ஊக்குவிக்கும் நோக்குடன் தொழில் உபகரணங்களும், பதநீர் சார் உற்பத்தியினை தூண்டுதலின் பொருட்டு பதநீர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதற்காக சைக்கிள் மற்றும் தொழில் உபகரணங்கள் வழங்குதல்
- ❖ நவீன கள்ளுத் தவறணைகளை அறிமுகப்படுத்தலும், நிர்மாணித்தலும்.

➢

➢ திக்கம் வடிசாலையை புனரமைப்பதற்கான செயற்றிட்டம்

திக்கம் வடிசாலை புனரமைப்பதற்கான முழுமையான செயற்றிட்டவரைபு அபிவிருத்திப் பிரிவினாலேயே தயாரிக்கப்பட்டு அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் தற்பொழுது அச்செயற்றிட்டத்திற்காக அமைச்சினால் 115 மில்லியன் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும்.

**அபிவிருத்திப்பிரிவு பனை அபிவிருத்திச் சபை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனையின்றி வாழ்வில்லை என்றிருந்த எம்மவர்கள் !

**வி**ண்ணை முட்டி வீராப்புப் பேசிய எங்கள் தாயவள்
கண் மூடி விழிக்கும் நொடிப் பொழுதில்
யுத்தமெனும் கோரத்தால் கண்பட்ட இடமெல்லாம்
தன்னுடலில் புண்பட்டு புரளுகின்றாள் !



பனை மரத்தில் வீடமைத்து!
வடலி ஓலையினில் பிளாக்கோலி!
கூழ் குடிக்க கூடியிருந்த ஒரு கூட்டம்!
திசை மாறி சென்றது காலத்தின் கோலத்தால்!

உயரத்தாலும் உயர்ந்திருந்தாள்!
உள்ளத்தாலும் பரந்திருந்தாள்!
கன்னம் கரிய நிறத்தினாள்!
கருப்பட்டியின் இனிமை மனத்தினள்!

நுங்குடன் கிழங்கும் தந்திடும் தாயவள்!
கள்ளெனும் போதையினை தந்திடும் பேதையிவள்!
பதமாய் பகரவே பதநீர் அருளும் ஊற்றியவள்!
காலமெல்லாம் எமைக் காக்கும் அரணிவள்!

பனம் பழத்தில் பணியாரம்! பனையோலை பொருட்கள் தான்
பண்டைய காலத்தில் பழுதற்ற பொக்கிஷமாம் - பெருமை சேர்
எண்ணெழுத்தும் திருக்குறளும் இலக்கியமும்
பதித்து எம் தமிழ் வளர்த்த பெரு விருட்சம் !

தமிழ் வளர ஓலையானாள்! வெம்மை போக்கும் விசிறியானாள்!
உடல் நலத்திற்கு மருந்துமானாள்! விழுந்திட்டால் வீட்டிற்கு வளையுமாவாள்!
வெட்டினாலும் சட்டமாய் தன்னுடலை அர்ப்பணிப்பாள்!
அன்று தொட்டு எமக்காய் வாழ்கின்றாள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் என் செய்தோம் அவளுக்காய்! தன்னுடலை எம்மவர்க்காய் ஈர்ந்திட்ட அவளுக்கு
வானுயர வளர்வதற்கு நீர் தன்னும் வார்த்தோமா?
நிமிர்ந்து நின்று பேதையவள் கேட்கின்றாள் நம்மவரை
நிலம் உழுது என்னை நலம்பட காக்க வேண்டாம்!

உம்மவர்க்காய் உதிரம் சிந்தி உதவுகின்ற எம்மினத்தை
பிரதிபலன் பார்க்காத என்வளத்தை அள்ளி அள்ளி அழிக்காமல்
வித்தகத்தில் ஓர் விதையை விந்தையாய் நட்டு
காலம் எல்லாம் போற்றி வளருங்கள் - கற்பகமாய்
ஞாலத்தில் உம்மினத்தை உய்விப்பாள் !

**ஆக்கம் :- தர்ஷா தினேஸ்**
முகாமைத்துவ உதவியாளர்,
அபிவிருத்திப் பகுதி,
பனை அபிவிருத்திச் சபை.

**"பனை ஒன்றை நினைவாய் வளர்த்துவிடு வீட்டில்
துணையாகி நல்வாழ்வு வழங்கிவிடும் நாட்டில்"**

**"வீட்டுக்கொரு பனை நாட்டி நம் தேசத்திற்கு வளம் நேர்
சேவையை செய்திடுவீர்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முகாமையாளரின் எண்ணத்துளிகள்

"தினைத் துணை நன்றி செய்யினும் பனைத்
துணையாக்கொள்வர் பயன் தெரிவார்"


என்ற பொய்யாமொழிப் புலவனின் வாக்கிற்கு ஒப்ப தாலத்தின் பாகங்களின் சிறப்பினை அனைவரின் தேவைக் கணிப்புக்கு ஏற்றவாறு பனை அபிவிருத்திச் சபை பனையினால் மேற்கொள்ளப்படும் செயற்பாடுகளான பரம்பல்.பாகங்கள் ஊடான உற்பத்திகள்,ஆராய்சி முடிவுகள் யாவையும் ஒருங்கிணைத்து,எழுத்துருக் கொடுத்து கண்காட்சி சிறப்புமலராக வெளிவருவது மிகவும் சிறப்பான ஓர் விடயமாகும். இம் மலர் மலர்ந்து மணம்பரப்ப என் வாழ்த்துக்கள்.

**திரு.பி.சுதாகரன்**
முகாமையாளர் (நிர்வாகம்.மனிதவளம்)
பனை அபிவிருத்திச் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல், மனம், ஆன்மாவை லயமாக்கும் பனை மரம்!



ஒருவரின் ஆத்ம மேம்பாடு பனைபோல் உயர்ந்த நிலைக்கு எப்பொழுது செல்கிறதோ அப்பொழுதுதான் அவர் சிவபெருமானின் முழு அருளையும் பெறுகிறார். சிவனின் அருட் பார்வைக்கு உட்பட்டவர் சகல சௌகரியங்களையும் பெறுகிறார். ஒருவரின் நல்ல உடற்பாங்கே அவருக்கு நல்ல மனத்திடத்தையும், மனவளத்தையும் தருகிறது. நல்ல மனவளம் பெற்றவரால் மட்டுமே ஆன்மா சார்ந்த விஷயங்களை அலசிப் பார்க்கவும் அனுபவிக்கவும் இயலும்.

சிவனின் பேரருள் பெற்று பேரானந்தப் பெருவாழ்வு வாழ்ந்திட பெருமானின் அருள் பெற்ற பனை மரங்களை வலம்வந்து வணங்குவோம். விழுப்புரத்திலிருந்து சுமார் பத்து கிலோ மீற்றர் தொலைவிலுள்ள பனையபுரம் என்னும் ஊரில் எம்பெருமான் சதுரலிங்கத் தோற்றத்தில் காட்சி தருகிறார். பனைமரங்கள் அடர்ந்த இப் பகுதியில் தோன்றிய இறைவன் பனங்காட்டீசன் என அழைக்கப்படுகின்றார். கோவில் வளாகத்தில் ஆண்பனையும், பெண் பனையும் இணைந்து அழகுறக் காட்சி தருகிறது. இவ்வாறு பனங்காட்டீசன் பேரருள் பெற்ற பனையினை மருந்தாக்கி உடல்நலம் பெற்று ஆன்ம மேம்பாடு அடைய முயல்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகப் பகுதி



தலைமைக் காரியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்த மருத்துவ நிபுணர் அருண் சின்னையாவின் மருத்துவக் குறிப்புக்கள்

## ஆண்மைக்கு அருமருந்து

**மா**னுட சுழற்சியில் குழந்தைப்பேறு என்பதே முழுமையான வாழ்க்கையின் முற்றுப் புள்ளியாய் அமைகிறது. உயிரை உண்டு பண்ணக்கூடிய உன்னத சக்தியைத் தன்னகத்தே கொண்டுள்ளதே விந்தெனப்படுவது. நாத விந்தே சிவசக்தியாய் உலகமெல்லாம் பரிணமித்துள்ளது. நாதவிந்துச் சேர்க்கையே குழந்தை உற்பத்தியாம்.

நாத விந்தினை முறைப்படுத்தும் நற்பங்கினை எம்பெருமான் உறையும் பனைமரம் கொண்டுள்ளது. இனி நிலப் பனங்கிழங்கினை முறைப்படி மருந்தாக்கும் கலையை அறிவோம்.

மானுட விந்தில் கோடிக்கணக்கான உயிரணுக்கள் இருந்தாலும், கரு உருவாக ஒரு அணுவே போதும். கரு முட்டையை நெருங்கித்துளைத்து உட்செல்லும் விந்தணுவே ஓர் ஆண் மகன் தந்தையாகிட அவனுள் அணுவிருத்தி தாராளமாய் அமைந்திட வேண்டும். விந்தில் உயிரணுக்களை மிகைப்படுத்தும் சக்தி நிலப் பனங்கிழங்கிற்கு உண்டு.

நிலப்பனங்கிழங்கை மேல்தோல் மற்றும் நரம்புகளை நீக்கி உலர்த்தித் தூள் செய்து அதற்கு சம அளவு சர்க்கரைக் கட்டி சேர்த்து பத்திரப்படுத்தவும். இதில் ஒன்பது கிராம் வீதம் காலை, மாலை இரு வேளையும் பாலுடன் கலந்து அருந்திவர, விந்தில் உயிரணுக்கள் அதிகரித்து, பத்து மாதங்களில் முத்தான குழந்தையைப் பெறலாம்.

## வெட்டைச்சூடு தணிய

உடம்பில் அளவுக்கதிகமான உஷ்ணம் காணப்பட்டால், பித்தம் மிகுந்து கண்ணெரிச்சல், கால், கைகள் மாமதப்பு போன்றவை உண்டாகி உடம்பில் ரத்தம் கண்டி பலவீனம் உண்டாகும்.

முன் சொன்னபடி நிலப் பனங்கிழங்கை உலர்த்தித் தூள் செய்து காலை,மாலை இரு வேளையும் ஆட்டுப் பாலுடன் கலந்து 21 நாட்கள் சாப்பிட வெள்ளைபடுதல் குணமாகும். மேலும் கன்னம் ஒட்டிக் குழி விழுதல், உடல் எடை குறைவு போன்ற குறைகள் மாயமாய் மறையும்.

## வெண்குஷ்டம் விலக

வெண்குஷ்டத்தை காம நோய்களில் ஒன்றாகவே சித்தர்கள் குறிப்பிடுகின்றனர். நம் கர்மாக்கள் விலகி சுத்த ஆத்ம நிலையை அடைந்திடவே இப் பிறவியைப் பெற்றுள்ளோம். எனவே வெண் குஷ்டத்திலிருந்து மீண்ட அந்த சிவலிங்க மூர்த்தியைச் சரணடைந்து வேண்டினால் உங்களுக்கான வழியை அவரே தேடித் தருவார். வெண்குஷ்டத்திற்கு இறையருளிய மருந்தினை இயம்புகிறேன். குறித்துக் கொள்ளுங்கள். நிலப் பனங்கிழங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெட்பாலை, அரிசி, வெந்தயம், கருந்துளசி, மூங்கிலரிசி ஆகியவற்றை வகைக்கு நூறு கிராம் எடுத்து தூள்செய்து கொள்ளவும். இதில் ஐந்து கிராம் அளவுப் பொடியினைப் பசும்பாலில் கலந்து அதிகாலையில் சாப்பிட்டு வரவும். பனங்காட்டீசன் பேரருளால் வெண்குஷ்டம் மாறி (கர்மா விலகி) சுத்த தேகம் பெறலாம்.

வெண்குஷ்டம் முற்றிலும் மறைய மேற்சொன்ன மருந்துடன் வள்ளலார் அருளிய சுத்த சமரச சன்மார்க்க நியதிகளை அன்றாட வாழ்வில் கடைப்பிடித்து வர வெண்குஷ்டம் முற்றிலும் விலகும்.

**காசநோய் விலக**

சுத்தி செய்த நிலப் பனங்கிழங்கு 250 கிராமுடன் சுக்கு, மிளகு, திப்பிலி, சித்தரத்தை, ஓமம், ஜாதிக்காய், அக்ரகாரம், அதிமதுரம் ஆகியவற்றை வகைக்கு பத்து கிராம் கலந்து தூள் செய்து கொள்ளவும். இதில் ஐந்து கிராம் அளவு காலை, மாலை இரு வேளையும் தேனில் குழைத்துச் சாப்பிட்டு வர காசநோய் மற்றும் காச நோயினால் உண்டாகும் உடல் இளைப்பு போன்றவை மாயமாய் மறையும்.

**சரும நோய் விலக**

நிலப் பனங்கிழங்கு தண்ணீர் விட்டான் கிழங்கு, ஆகாயக்கருடன் கிழங்கு, பால், முதுக்கன் கிழங்கு ஆகியவற்றை வகைக்கு நூறு கிராம் எடுத்து தூள் செய்து காலை, மாலை இரு வேளையும் பசும்பாலுடன் கலந்து சாப்பிட்டுவர சரும நோய்கள் மற்றும் கரும் புள்ளிகள் விலகும்.

**போகம் பெருக**

நிலப் பனங்கிழங்கு, சீந்தில், சர்க்கரை, பூனைக்காலி விதை, நெருஞ்சில், ஆலவிதை, அரச விதை, பாதாம் பருப்பு, பிஸ்தாப் பருப்பு, அக்ரூட் இலவம் பிசின், பாதாம் பிசின், முருங்கைப் பிசுன், முருங்கை விதை, ஜாதிக்காய், அக்ரகாரம் ஆகியவற்றை வகைக்கு ஐம்பது கிராம் சேகரித்து அவற்றை ஒன்றாக்கித் தூள் செய்து சலித்துப் பத்திரப்படுத்தவும். இதில் வேளைக்கு ஐந்து கிராம் வீதம் பசும் பாலுடன் கலந்து சாப்பிட்டுவர பிளிறும் யானையின் வலிவும், பந்தயக் குதிரையின் மதிநுட்பமும் ஒருங்கே பெற்று கன்னியரைக் கவரும் கட்டிளங்காளையாய் பவனி வரலாம். அகமாரக ஆணழகனாய் மாறிட இதுவே அற்புத மருந்தாகும்.

**புண்ணாற்றும் பதநீர்**

பனையிலிருந்து எடுக்கப்படும் பதநீர் உடல் புண், குடல் புண் அனைத்தையும் ஒருங்கே ஆற்றும் வல்லமை பெற்றது. கோடையில் தென்றலாய் பவனி வரும் பதநீரைப் பருகத் தயங்காதீர். சிவனருள் பெற்ற தீர்த்தமாகவே பதநீரைப் பாருங்கள். பருகுங்கள். தூய நீரைப் பருகிட வாய்ப்புண், நாக்குப் புண், தொண்டைப் புண் போன்ற அனைத்தும் விலகும். வெள்ளைபடுதல், ஆண்களுக்கு உண்டாகும் குறிப்புண் போன்ற வியாதிகள் பதநீரால் தீரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உடல் பருக்க**

பச்சை அரிசி, பனை வெல்லம், ஏலக்காய், தேங்காய்த்துருவல் சேர்த்து கொழுக்கட்டை மாவு செய்து பனையோலையில் வைத்துப் பக்குவமாய் வேக வைத்து வாரம் இருமுறை சாப்பிட்டுவர இளைத்த உடல் பருக்கும்.

**உடல் வலுவடைய**

பச்சரிசியையும் உழுந்தையும் சேர்த்து மாவாக்கிக் களி செய்து பனை வெல்லத்தைப் பாகு செய்து களியுடன் சேர்த்துச் சாப்பிட்டு வர உடல் வலிமை உண்டாகும்.

**நீர்க்கட்டு உடைய**

இளம் பனம் நுங்குகளை ஐந்து அல்லது ஆறு எண்ணிக்கையில் சாப்பிட நீர்க்கட்டு நீர்ச்சுரக்கு மறையும். அதேபோல் ஜவ்வரிசியை வேக வைத்து அத்துடன் இள நுங்குகளைப் பிசைந்து சிறிது சர்க்கரை சேர்த்துச் சாப்பிட வெட்டைச்சூடு, நீர் எரிச்சல் ஆகியன தீரும்.

**கடுக்காயும் கருப்பட்டியும்**

நம் முன்னோர்களின் கட்டடக் கலையில் கடுக்காய் மற்றும் கருப்பட்டிக்கும் சிறப்பு பங்கு உண்டு. சுண்ணாம்புடன் பால், இளநீர், கடுக்காய்த்தூள் கருப்பட்டி சேர்த்து நமது முன்னோர்கள் கட்டடம் எழுப்புவர். அது பல ஆண்டுகள் வன்மையுடன் இருக்கும். இதேபோல் கடுக்காய், பனை வெல்லம் இரண்டையும் ஆண்டுக்கணக்கில் உண்டு வருவீர்களானால் உங்கள் உடம்பு என்னும் கட்டடமும் ஒரு நூறாண்டாவது வன்மையுடன் இருக்கும்.

இந்துமதம் நமக்கு அறிவிக்கும் இறையுணர்வு என்பது. நமது அன்றாடப் பணிகள் மற்றும் தனி மனித ஒழுங்கின் அம்சத்தை அடிப்படையாகக் கொண்டே இயங்கி வருகிறது.

ஓரணு ஈரணுவாய், இரண்டு நான்காய் ,நான்கு பதினாறாய் பல்கிப்பெருகி பல கோடி அணுவாகி புல்லிலிருந்து பூண்டாகி மரமாகி மனிதனை அண்டிப் பிழைக்கும் விலங்காகி கடைசியில் மனிதனாகி வீற்றிருக்கும் மனித இனமே. நீங்கள் ஆத்ம மேம்பாடடைய எல்லாம் வல்ல பரம் பொருளே இன்றும் புல்லாய், பூண்டாய், மரமாய், விலங்குகளாய் இருந்து உங்களுக்கு இரையாகி நீங்கள் இறைதேட கருவியாவதை மறந்து விடாதீர்கள். ஆத்ம முக்திக்கு இதுவே பிறவி. இப் பிறவியை ஊழ்வினைக்கு உட்படுத்தாமல் எம்பெருமான் சிவபிரானைச் சரணடைந்து சிவனுறையும் பனையைத் தேடுங்கள்.

இதனால் உடல், மனம், ஆத்மா லயமாகும் பனங்காட்டீஸ்வரன் பாதம் பணிந்து நோயில்லா வாழ்வை வேண்டிப் பெறுவோம்.

**தொகுப்பு:**
நிர்வாகப் பகுதி,
பனை அபிவிருத்திச் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனையெழுதும் பயன் கண்டேன்

என் நிழலின் முகத்திலும்
பனையெழுதும் பயன் கண்டேன்..
அடுப்பேறி சாம்பராக
கனன்ற 'சிராய்' கதை சொல்வேன்..

முகடு நோக்கிப் பார்த்தபோது
தெரிந்த அந்த சிலாகையும்
புகட்டு வாழ்வுக்குரித்தேயாம்
வரிந்தெடுத்த கூரையும்..

முற்றத்தின் முழு வளமாய்
காய்த்தே நின்ற ஒற்றையம்
குருத்ததுவாய் 'வடலி' என்ற
பெயர் கடந்த பனைமரமே!

உற்றவர் பருகிச் செவ்வாய்
கள்ளெனவே மயக்கி மாறாய்..
பற்பலரும் பதனி யென்பார்
பத்தினியும் தான் நனைவார்..
நோன்புச் சுவையெடுத்து நனிநுங்கு
நுரைபரப்பி ... வியர்க்குரு மடிந்துவிட
வேண்டியவர் பூசிடுவார்

வற்றாத வறுமை சொல்லும் ஏழைகளும்
கற்றாரும் திறமை செய்யும் ஆர்வலரும்
பற்றாகப் பிரித்துண்ணும் பனம் பழமே சுவையென்பேன்..
பொன்போன்ற பனாட்டு 'பரணதினில் காயவைத்து
சோற்றுப் பழங்கஞ்சி நயமாக உண்டிடலாம்.
சாய் மனையாம் கதிரையொன்று
பனைமரத்தில் செய்து வைத்தேன்..
தும்புதனை தலைக்கடியில் பரப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து சாய்ந்திருந்தேன்..
அசதி நீங்கி , மருந்தாகி அரும்பலமும் தந்தது...

பண்டை கதிர் ஒன்று மண் மீது வீழ்ந்ததெல்லாம்
எரிவாய்க்குத் தணலாக இட்டது அந்தக்காலம்
மை பூசி வாகாக வனைந்தெடுத்து இல்லமதில்
அலங்கரித்து அகிழ்வதுமே இந்தக்காலம்..

கடகமும் பாயும் பறிகட்டும் ஓலையும்
சுளகோடு நீத்தும் அஞ்சறைப் பெட்டியும்
மட்டையும் கயிறும் மணிகட்டும் கிணுகிணுப்பும்
தட்டியும் சாத்தியும் குடில் அமைக்கும் மாந்தர் நாமே..
கொட்டுதாம் கொட்டையில் கிழங்கெடுத்து ஒடியலும்
வெட்டுதாம் பிளந்தெடுத்து பூரானாம் உட்சதையும்..
மட்டில்லாத தகனத்தில் ஊமலின் வெந்தணலும்
சட்டமும் சலாகையும் ஊன்ற நல்ல நட்டுமரம்..
புதுப்பாகாய் கடையினிலே கிடைக்குதந்த சுவைக்களிம்பு.


நின்றாலும் சாய்ந்தாலும் பயன்தருமே பனைமரமே ..
நிலை தடுமாறி வெட்டாதீர்.. கற்பக தரு அதுவே.

**தேசிய கலைஞர்**
எஸ்.ஏ.உதயன்

**“உளமதில் உழைப்பெனும் வித்தினை ஊன்றி பனை வளமதை உரமென இட்டு சுயதொழில் தொடங்கு”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முகாமையாளரின் எண்ணத்துளிகள்

பனை அபிவிருத்திச் செயற்பாடுகள் அனைத்தும் வளர்ச்சியடைந்து பல்வேறு நடவடிக்கைகளாக, மக்களுக்கு சேவை வழங்கி வருகின்றது. எனினும் அனைவரையும் சென்றடையும் வகையில் "ஞாலத்தில் புதுமை புகும் தாலம்" எனும் தொனிப் பொருளில் கண்காட்சி ஒன்றினையும், கண்காட்சி மலரினையும் வெளியிட்டு, பனையின் சிறப்பியல்பினை எடுத்தியம்பும் புதுத் தகவல்கள் தாங்கி ஆவணமாக வெளிவருவது காலத்தின் தேவையாகும். இம்மலர் பனையைப் பெருமைப் படுத்தும் அனைத்துக் கரங்களுக்கும் விளக்காக ஒளிர எனது வாழ்த்துக்கள்.

**திரு.கா.கோபாலகிருஸ்ணன்**
முகாமையாளர் (விரிவாக்கம்)
பனை அபிவிருத்திச் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிவாக்கல் பகுதி



போதனாசிரியர்கள்
திருகோணமலை



போதனாசிரியர்கள்
யாழ்ப்பாணம்



போதனாசிரியர்கள்
மட்டக்களப்பு



போதனாசிரியர்கள்
முல்லைத்தீவு



**திரு.கா.கோபாலகிருஸ்ணன்**
முகாமையாளர் (விரிவாக்கம்)



போதனாசிரியர்கள்
வவுனியா



போதனாசிரியர்கள்
புத்தளம்



**திருமதி.த.பவானி**
முகாமைத்துவ உதவியாளர்



போதனாசிரியர்கள்
அநுராதபுரம், குருநாகல்



போதனாசிரியர்கள்
கிளிநொச்சி



போதனாசிரியர்கள்
திருகோணமலை



போதனாசிரியர்கள்
மன்னார்



போதனாசிரியர்கள்
அம்பாந்தோட்டை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிவாக்கல் பகுதியை
# அறிந்துகொள்ள அழைக்கின்றோம்

**ப**னைசார் பயிற்சிநெறிகளை விதிமுறை வழியே
வறுமை நீக்க, பனைவள சுயதொழிலின் மூலமாய்
புதுமை புகுத்தி புதுவித தேடல்களின் மிளிர்வாய்
பெருமை மிகு வாழ்வாதார வழிகாட்டும் பகுதி

சபையின் பணியில் பனைசார் பயிற்சிப் போதனைகள்
சலிக்காமல் பயிற்றுவிக்கும் நாற்பத்தாறு போதனாசிரியர்
முகாமையாளர் விரிவாக்கம் முகாமைத்துவ உதவியாளர்
ஒன்றிணைந்த ஆளணிதான் விரிவாக்கல் பகுதி

ஆண்டுதோறும் மீண்டெழும் மக்கள் வாழ்வுக்காய்
அமைச்சும் அதிகாரிகளும் அமைக்கும் திட்டங்களில்
வளம்சார் சுயதொழில் வாழ்வாதார திட்டங்களை
நானிலத்தோர் நல் வாழ்வுக்காய் வழங்கும் பகுதி

பள்ளியில் இடைவிலகி கல்விப் பாதை தொடராமல்
எள்ளி நகைக்கும் நிலையில் தள்ளி ஒதுங்குவோர்
வாழ்வின் சுமையை ஏற்று வாழ வழிதேடுவோருடன்
காலமகளவள் வஞ்சிப்பின் ஏதிலியரும் பயிலவாய்ப்பு

கற்றறிந்தபின் உற்பத்தி அமைப்பாக சிறுசுவடுகள்
கருவிகள் உபகரணங்கள் வழங்கும் அமைச்சு
விற்பதற்காய் சந்தைவாய்ப்பு வழங்கும் கற்பகம்
அறியுங்கள் திருப்புங்கள் பக்கத்தைப் பாருங்கள்

**க.பவானி**






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விரிவாக்கல் பகுதி

தமிழர் வாழ்வியல் பண்பாட்டில் பனை பின்னிப்பிணைந்ததாகக் காணப்படுகின்றது. உணவு, உறையுள், கல்வி என்ற அடிப்படைத் தேவைகளை பனையில் இருந்து பெற்றுக்கொண்டனர். பனையின் வட்டுத் தொகுதியில் கிடைக்கப்பெறும் அனைத்தும் மக்களின் பயன்பாட்டிற்கு உரியவையாக இறைவனால் அருளப்பட்டுள்ளது. தண்டுப்பகுதியின் பயன்பாடு உன்னதமாக இருப்பினும், பனையை அழித்து பயனைப் பெறவேண்டுமாகையால்,அதற்கான பயிற்சிகள் அருகி வருகின்றது. பனையின் வாழ்வுக்கு ஒளித்தொகுப்பின் ஊடாக, உணவை வழங்குகிறது ஓலை. ஒரு ஓலையில் ஓலைச் சட்டங்கள் (40-60), மட்டை, ஈர்க்கு, நார், அடவியன் எனும் பாகங்களும் இணைத்துள்ளன. இவ் ஓலைகளை மூலமாகக்கொண்டு உற்பத்திகளை மேற்கொள்ளும் பணியே எல்லோராலும் பன்னவேலை என பேச்சு வழக்கில் குறிப்பிடப்படும் பனங்கைப்பணி ஆகும். அன்று தொடக்கம் இந் நடவடிக்கை பனையை அண்டி வாழும் மக்களால் சுயதொழிலாக பாரம்பரிய முறையில் உற்பத்தி செய்து விற்பனை செய்கின்றனர்.

பனை அபிவிருத்திச் சபை நாட்டின் பொருளாதாரத்திற்கு மிக அவசியமான பனை வள சுயதொழில் மேம்பாட்டை முன்னெடுக்கும் நோக்குடன், பனையின் பயனை மக்களிடையே பரவலடையச் செய்யும் வகையில், பயனளிக்கும் பல செயல் திட்டங்களை செயற்படுத்துகின்றது.

நாட்டில் பெண்களின் உழைப்பினை பாரிய அளவில் பெறுவதற்கு பனைசார் பயிற்சி வழங்கும் நடவடிக்கையினை விரிவாக்கல்பகுதி ஊடாக முன்னெடுக்கின்றது. இச்செயற்பாட்டிற்கென நன்கு பயிற்றப்பட்ட போதனாசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு வருடமும் போதனாசிரியர்களுக்கான தொழில்நுட்ப திறன்விருத்தியை ஏற்படுத்துவதற்கான பயிற்சிகள் வழங்கப்படுகின்றது.

பனைவளம் உள்ள அனைத்து பிரதேசங்களிலும், பனம் கைப்பணிப் பயிற்சிகள் நடாத்துவதற்குரிய பயிலுநர் தெரிவு, பயிற்சி நிலைய அமைவிடங்களை, பொது அமைப்புக்கள் மற்றும் மகளிர் குழுக்கள் ஊடாக,கிராம அலுவலர்கள், அப்பிரதேச செயலர்களின் அனுமதி பெற்று, சபையின் மாவட்ட இணைப்பாளர் ஊடாக முகாமையாளர் (விரிவாக்கம்) அவர்களின் சிபார்சுடன் பொது முகாமையாளர்/தலைவர் அவர்களின் அனுமதி பெற்று ஆரம்பிக்கப்படுகின்றன.

மேலும் விசேட திட்டங்களான பனங்கைப்பணிக் கிராமங்களை நிறுவுதல், பனங்கைப் பணியாளர்களை சிறுசுவடுகள் உற்பத்திக் கட்டமைப்பினுள் உற்பத்தியாளர்களாக ஒன்றிணைத்தல், உற்பத்தி மேம்பாட்டுக்காக தொழில்நுட்ப பயிற்சிகள், புதிய வடிவமைப்புப் பயிற்சிகள் வழங்குதல் மற்றும் அவர்களுக்கான உற்பத்திக்குரிய உபகரணங்களும், கருவிகளும் ஏனைய உள்ளீடுகளும் வழங்கி , பனங்கைப்பணியாளர்களின் வாழ்வாதாரத்திற்கு வழிகாட்டி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சபையின் பனம் கைவினைப் போதனாசிரியர்கள் - 2016**
**போதனாசிரியர்கள் - 46**

| | | | |
|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | - | 07 | |
| கிளிநொச்சி | - | 04 | |
| முல்லைத்தீவு | - | 02 | |
| வவுனியா | - | 02 | |
| மன்னார் | - | 03 | |
| புத்தளம் | - | 02 | |
| திருகோணமலை | - | 03 | 46 |
| மட்டக்களப்பு | - | 11 | |
| அம்பாறை | - | 05 | |
| அம்பாந்தோட்டை | - | 05 | |
| குருநாகல் | - | 01 | |
| அனுராதபுரம் | - | 01 | |

நாடளாவிய ரீதியில் பயிலுநர்களின் கோரிக்கைக்கு ஏற்ப பயிற்சிகள் வழங்கப்படுகின்றன.

**பயிற்சிகள்**

01 பனையோலைக் கைப்பணி
02 பனை ஈர்க்குக் கைப்பணி
03 பனை நார் கைப்பணி

**பயிற்சிக் காலம்**

| | | |
|---|---|---|
| ஆரம்ப பயிற்சி | - 03 மாதங்கள் | புதிய பயிலுநர்களுக்கானது |
| உற்பத்திப் பயிற்சி | - 03 மாதங்கள் | |
| விசேட பயிற்சி | - 01 மாதம் | |
| புதிய வடிவமைப்புப் பயிற்சி | - 01 வாரம் | உற்பத்தியாளர்கள் மற்றும் போதனாசிரியர்களுக்கானது |
| வலுவூட்டல் பயிற்சிகள் | - 01 - 03 நாட்கள் | |
| விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் | - பனங்கைப்பணியாளர்களுக்கானது | |

**இன்றும் பாவனையிலுள்ள பாரம்பரிய பனம் கைவினைப் பொருட்கள் சில**

1. சுளகு வகை
2. நீற்றுப் பெட்டி வகை
3. பெட்டி வகை
4. கடகங்கள்
5. பாய், இடியப்பத்தட்டு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வடிவமைக்கப்பட்ட சில உற்பத்திகள்**



1. கூடைகள்
2. பைகள்
3. தட்டுக்கள்
4. பூக்கள்
5. பூத்தாங்கிகள்
6. முடிச்சு நீற்றுப் பெட்டிகள்
7. அலங்காரப் பெட்டிகள்
8. சுவர் அலங்காரங்கள்
9. ஏனையவை

| ஆண்டு | மூலதன ஒதுக்கீட்டு நிதி | பயனாளிகள் | |
|---|---|---|---|
| | | எதிர்பார்ப்பு | செயற்படுத்தப்பட்டது |
| 2011 | 3.00 | | 1034 |
| 2012 | 8.50 | 500 | 1277 |
| 2013 | 8.64 | 500 | 1511 |
| 2014 | 9.00 | 500 | 1314 |
| 2015 | 8.50 | 425 | 1438 |

**மூலதன நிதி ஒதுக்கீடு (04 வருடங்கள்)**

| பயனாளிகளின் விபரம் | 2012 | 2013 | 2014 | 2015 |
|---|---|---|---|---|
| திவிநெகும திட்டம் | 288 | 411 | | |
| மாதிரி பனங்கைப்பணிக் கிராமத் திட்டம் | | 275 | 450 | 600 |
| மீளக் குடியமர்ந்தோர்(இந்தியா) | | | | 17 |
| விழிப்புலனற்றோர் | | | | 19 |
| சிறைச்சாலையில் பனங்கைப்பணிப் பயிற்சி பெற்று தொழில் புரிவோர் | | | | 06 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சின் விசேட நிதி

## வாழ்வாதார பனங்கைப்பணிக் கிராம நிகழ்ச்சித் திட்டங்கள் உபகரணங்கள் வழங்குகை




- வடக்கு மாகாணத்தில் நீண்டகாலம் பனங்கைப்பணித் தொழிலை மேற்கொண்ட 263 உற்பத்தியாளர்களுக்கு 2015ஆம் ஆண்டு திட்டத்தில் 2016ஆம் ஆண்டு வழங்கியது.



பாரம்பரியமாக சாதாரண இளைப்பு முறையில் பனங்கைப்பணி உற்பத்தி மேற்கொள்ளப் பட்டது. இன்று எமது பயிற்சிகளால் முடிச்சுக்கள் பின்னல்கள். வெட்டி ஒட்டுதல் தைத்தல் எனும் முறைகளில் முன்னேற்றம் கண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| A | B | C | D |
|---|---|---|---|
| வெட்டி ஒட்டுதல், தைத்தல் | வாழைப்பூ முடிச்சு | கண்ணிமுடிச்சு | சுற்றிழைப்பு |










கொள்வனவுக் கட்டளைக்கு அமைய ஏற்றுமதி தரம் வாய்ந்த உற்பத்திகளுள் சில










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுசுவடுகள்

நோக்கம்: பனைசார் உற்பத்தியாளர்களை நிறுவனப்படுத்தி, அவர்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்கு வழிவகுத்தல்.

## செயற்பாட்டு வழியில்........

அ) பனைசார் கைப்பணியாளர்களை சிறு குழு அமைப்பு முறையில் செயற்படுத்தல்

ஆ) சபையின் செயற்பாடுள்ள ஒவ்வொரு மாவட்டங்களிலும் போதனாசிரியர்களுள் ஒருவர் மாவட்டத் தலைவியாகத் தெரிவு செய்யப்பட்டு, அம் மாவட்ட போதனாசிரியர்கள் ஊடாக விரிவாக்கல் பகுதியுடன் இணைந்து நடவடிக்கையினை மேற்கொள்ளுகின்றனர்.

## நடைமுறைப்படுத்தப்படவுள்ள செயற்பாடுகள்

1) சேமிப்பினை ஊக்கப்படுத்தலும்,நடைமுறைப்படுத்தலும்.
2) உற்பத்திக்கான மூலதனக்கடன் பெறுவதற்கான வழிகாட்டல்
3) விற்பனைக்கான சந்தைவாய்ப்பினை ஏற்படுத்தல்
4) சூழல் பாதுகாப்பினை முன்னெடுக்கும் நோக்கில் பயனாளிகளூடாக சிரமதானமுறையில் சார்ந்துள்ள பிரதேசங்களிலுள்ள வீதிஓர நிழல்தரு விருட்சங்களைப் பாதுகாத்தலும்,புதிய மரங்களை நாட்டலும்.
5) போசாக்கு,சுகாதார திட்டங்களை நடைமுறைப்படுத்தல்
6) சிறுவர்கள் கல்வியை ஊக்குவிக்க, ஆற்றலை வெளிக்கொணரும் முகமாகவும், மாலைநேர வகுப்புகள், பரிசில் திட்டங்கள் போட்டிகள் நடாத்துதல்.
7) குடும்ப நலன்,அபிவிருத்தி தொடர்பாக பெண்களை விழிப்படையச் செய்தல்

பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்கல் பகுதியினால் 2010 ஒக்ரோபர் 12ஆந் திகதி உற்பத்தியாளர்களை ஒன்றுதிரட்டி, சபையின் தலைமைக்காரியாலயம் - யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பண பொதுக்கூட்டம் நடைபெற்று தலைவிகளின் தெரிவு இடம்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைவிகளுக்கான தலைமைத்துவ பயிற்சிகள்

| | | |
|---|---|---|
| யாழ். மாவட்டம் | - | 28/01/2013 |
| மட்டக்களப்பு மாவட்டம் | - | 04/04/2013 |
| அம்பாறை மாவட்டம் | - | 05/04/2013 |
| திருகோணமலை | - | 06/04/2013 |
| வதிவிட பயிற்சி | - | வடக்கு மாகாண தலைவிகளுக்கானது (முகாமைத்துவம், தலைமைத்துவம்) -01, 02/03/2014 |

பயிற்சி பெற விரும்புவோர், வாழ்வாதாரத்தை தேடும் முயற்சியாளர்கள், உற்பத்தியாளர்கள், அனைவரும் பனை வளத்தின் ஊடாக பொருளாதாரத்தினை ஈட்டும் வழிகளை பனை அபிவிருத்திச் சபையின் விரிவாக்கல்பகுதியில் சிறுசுவடுகள் அமைப்புடன் இணைந்து செயற்பட அழைப்பு விடப்படுகின்றது.

**பயிற்சி உற்பத்தித் தொடர்புகளை ஏற்படுத்துவதற்கு கீழ்க்காணும் முறையில் அணுகுங்கள்.**

பொது அமைப்புக்கள்/ கிராம அபிவிருத்திச் சங்கங்கள்/நலன்விரும்பிகள்/ ஏனையோர் பனம் கைப்பணிப் பயிற்சி பெறுவதற்கு, தமது கடிதத் தலைப்பில், பயிற்சியின் பெயரைக் குறிப்பிட்டு, பயில விரும்புவோரின் பட்டியலை (முழுப்பெயர், முகவரி, தே. அ. அ. இலக்கம், தொலைபேசி இலக்கம் அடங்கலாக) இணைத்து, கோரிக்கைக் கடிதத்தினைப் பின்வரும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

தலைவர்,
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலக கட்டடம்,
முதலாம் மாடி, A9 வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 222 2034

முகாமையாளர் (விரிவாக்கம்),
பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்புச் செயலக கட்டடம்,
முதலாம் மாடி, A9 வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல: 021 222 2034 ஊடாக,

- பயில விரும்பும் தனிநபர்கள் நேரிலோ /தபால் மூலமோ தொடர்புகொள்ளமுடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதம்

இருபத்தைந்து வருடங்களுக்குப் பின் தாய் மண்ணில் தடம் பதிக்கிறான் தங்கராசு. இனம் புரியாத ஓர் உணர்வு. குதூகலம் ஒரு புறம் மனக்குமைச்சல் மறுபுறம். பிறந்தது முதல் இருபது வயது வரை ஆனந்தமாக அவன் வாழ்ந்த வீடு, அடையாளமேயில்லாமல் மண்மேடாய் மாறியிருந்தது. முற்றத்திலிருந்த ரோஜாச் செடிகளும் மல்லிகைப் பந்தலும் விலாசமில்லாமல் போயிருந்தன. காணியைச் சுற்றியிருந்த பனை மரங்கள், கிணற்றடியிலிருந்த கமுகுகள் தென்னை மரங்கள் எதுவுமேயில்லை. பனைகள் தறிக்கப்பட்டதற்கான அடையாளங்கள் தெரிந்தன. ஆங்காங்கே பல வடலிகள் தலைவிரித்து நின்றன.அவனையறியாமலே அவனது கண்கள் குளமாகின. நினைவுகள் எண்பதுகளை நோக்கி நகரத் தொடங்கின.

அப்போது அவனுக்கு வயது பத்து.பாடசாலை, வீடு, விளையாட்டு என்று ஓடித்திரிந்த பருவம். நோயால் படுக்கையாகிப் போன தந்தை.குடும்பத்தைக் கட்டியிழுக்கப் பாடுபட்டுக் கொண்டிருக்கும் தாய். படித்துக் கொண்டிருக்கும் தங்கை. சிறிய குடும்பமென்றாலும் வறுமைக்கு மட்டும் பஞ்சமில்லை. பாடசாலை விட்டுப் பசியோடு வீட்டிற்கு வரும் சில நாட்களில் மதிய உணவாக பனாட்டும், சாயத்தண்ணியும் மட்டுமே கிடைக்கும். பழகிப்போன வயிற்றுப் பசிக்கு அது அமிர்தமாகவே இருக்கும். வளவைச் சுற்றியுள்ள பனைமரங்கள் தான் குடும்பத்திற்கு வாழ்வாதாரம். பல நாட்கள் இரவு பட்டினியாகவே உறங்கிப்போன வரலாறுகளும் உண்டு. வறுமையிலும் செம்மையான வாழ்வு பிறரிடம் கையேந்தி நிற்காத தன்மானம். தனக்கில்லா விட்டாலும் பிறருக்குக் கொடுத்துதவும் மனப்பாங்கு, பசியென்றாலும் சிரித்து மகிழ்ந்து களித்த அந்த நாட்கள். எவ்வளவு வறுமை என்றாலும் அந்தக் காலத்தில் இருந்த சந்தோசம், அது ஒரு தனிச் சுகம் தான். ஓலைக் குடிசையிலும் மனம் உல்லாசப்பட்டு வாழ்ந்த பொழுதுகளின் இனிய ராகம் இன்றும் இசைத்துக் கொண்டிருக்கிறது. வெண்டாமரைகள் மலர்ந்திருக்கும் பெரிய குளம். அதில் குளிப்பதே ஒரு வரம் தான். காலைச் சூரிய ஒளிபட்டுத் தாமரைகள் மலரும் முன்பே நண்பர்களுடன் குளித்து விட்டு வருவதிலுள்ள இதம் இன்றைய குளிப்பில், அதுவும் அவசரக் குளிப்பில் இல்லையே. குளத்திலுள்ள துருசு திறந்து விடும் காலங்களில் தங்கராசுவுக்கும் நண்பர்களுக்கும் எப்படிப் பொழுது போகும் என்றே தெரியாது. துருசு வழியாக வரும் வாய்க்கால் பனை வளவை நடுக்கூறாகப் பிரித்துச் சென்று வயலை அடையும். அந்த வாய்க்காலில் கால் நனைத்து அதில் துள்ளி வரும் மீன் குஞ்சுகளை மணலோடு சேர்த்து அள்ளியெடுத்து ரசிப்பது தங்கராசுவுக்கு மிகவும் பிடிக்கும். வாய்க்காலின் அருகேயுள்ள நாவற்பழங்களும் பனம் பழங்களும் அவர்களின் சின்னச் சின்னப் பசியை ஆற்றும் ஆகாரங்களாக அவ்வப்போது இருந்ததுமுண்டு. எப்போது பனம் பழம் விழும் என்று பார்த்திருந்து, அடித்துப் பிடித்துக் கொண்டு ஓடிப் போய் எடுத்துப் பறிபட்டு, பச்சையாகவே சாப்பிடுவதை இப்போது நினைத்தாலும் சிரிப்புத்தான் வரும்.

வீட்டின் மேற்குப் புறமாக முருங்கை மரங்கள் நின்றன. முருங்கைக்காய் சீசன் என்றால், அதைத் தவிர வேறு கறி இருக்காது. குளம் வற்றும் வரை யப்பான் மீன் குழம்பு தினமும் இருக்கும். தங்கராசு படிப்பில் மிகவும் கெட்டிக்காரன். உழைத்து வாழவேண்டுமென்ற எண்ணம் பத்து வயதிலேயே அவனுக்கிருந்தது.தாய் செய்து தரும் பனங்கட்டி, பனாட்டு,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீத்துப்பெட்டி, கடகம் போன்ற பொருட்களை கடையில் சென்று விற்று வருவான். அதில் கிடைக்கும் வருமானத்தில் மதியச் சோறு சமைப்பார்கள். மாலை நேரங்களில் பனங்கிழங்கு அவித்து தேங்காய்ச் சொட்டுடன் உண்டு மகிழ்வார்கள். பக்கத்து வீட்டுக்காரர்களும் இதில் பங்கெடுத்துக் கொள்வார்கள். பக்கத்து வீட்டிலிருந்த கிளிச் சொண்டு மாங்காயை நினைத்தால் இப்போதும் வாய் ஊறுகிறது.

நாட்களின் நகர்வோடு வயதும் நகர்ந்து கொண்டிருந்தது. தங்கராசுவுக்குப் பல்கலைக் கழக அனுமதி கிடைத்தது. அவனது தங்கை கைப்பணித்துறையில் தடம்பதித்து உழைக்கத் தொடங்கி விட்டாள். அந்தநேரத்தில் தான் அவனுக்கும் நாகராணிக்கும் இடையிலான காதல் நாகராணியின் தந்தைக்குத் தெரியவந்தது. நாகராணியின் தந்தை திமிர் பிடித்தவர் என்பது ஊராரின் மதிப்பீடு. சாதி வெறி பிடித்தவர். பணக்கார வர்க்கத்தைச் சேர்ந்தவர் அன்றாடம் கஞ்சிக்கும் கூழுக்கும் அல்லாடும் தங்கராசுவை எப்படி மருமகனாக ஏற்றுக் கொள்வார்? அவர்களின் காதலுக்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். அவர்களின் சாதியும் வறுமையும் அவரின் வாயிலிருந்து மிகவும் இழிவாக வெளிவந்தது. நாகராணியின் தந்தை வேதநாதன் மிகவும் கொடூரமானவர் என்பதை நிரூபித்துவிட்டார். கடைசியில் வெட்டுக் குத்து என்று, தங்கராசுவைக் கொலை செய்யும் அளவிற்கும் துணிந்துவிட்டார்.

அந்த வேதனையில் நோயாளியான தங்கராசுவின் தந்தை உயிரை விட்டுவிட்டார். துடித்துப் போனான் தங்கராசு. இனியும் அந்த ஊரில் வாழ்ந்தால் தங்கராசுவின் உயிருக்கு ஆபத்தைத் தரும் என்பதைத் தாய் உணர்ந்தாள். மனிதம் செத்துவிட்ட இந்தச் சமுதாயத்தில் தங்கராசுவைப் போன்றவர்கள் காதலிக்கக் கூடாது என்று நினைத்தாள். படித்தது போதும் உயிரையாவது காப்பாற்றிக் கொள் என்று கூறி தங்கராசுவை அகதிகளோடு அகதிகளாக இந்தியாவிற்கு அனுப்பி விட்டாள். ஆனால் நாகராணி மட்டும் அவன் மனதில் அழியாத உருவமாகப் பதிந்து விட்டாள். பாவம் அவள் பெண். தந்தைக்குப் பயந்து மௌனமாகவே இருந்து விட்டாள்.

எப்படியோ காலச்சக்கரம் சுழன்று கொண்டிருந்தது. தொடர்ந்து வந்த இலங்கையின் யுத்தம், உறவுகளைப் பிரித்துவிட்டது. இழப்புக்கள், துயரங்கள் என்று காலம் நகர்ந்து கொண்டிருந்தது. தன் உறவுகளைப் பற்றி எதுவுமே அறியமுடியாத நிலையில் பல வருடங்களைக் கழித்து விட்டான் தங்கராசு.

"ஐயா பனாட்டு வேணுமா"? கெஞ்சும் குரல் கேட்டு சுயநினைவுக்கு வந்தான் தங்கராசு. பத்து வயது மதிக்கத்தக்க ஒரு சிறுவன் அருகில் நின்றான். அவன் கைகளிலே பொதி செய்யப்பட்ட பனாட்டு. வறுமையின் அடையாளம் பொதி செய்யப்பட்ட பனாட்டிலும் அவன் முகத்திலும் தெரிந்தன. பார்க்கப் பரிதாபமாக இருந்தது. சிறுவயதில் தான் பட்ட துயரங்களை நினைத்துக் கொண்டான். முழுப்பனாட்டையும் வாங்கிக்கொண்டு பணத்தைக் கொடுத்தான். அன்றலர்ந்த தாமரை போல் அவன் முகத்திலே அப்படியொரு மகிழ்ச்சி. ஒருவாறு தாய் இருக்கும் வீட்டை தேடிப்பிடித்துச் சென்று விட்டான். அங்கே அவர்கள் வாழ்ந்த வீட்டைப் பார்த்ததும் அவனுக்கு இன்ப அதிர்ச்சி. அவர்களின் செல்வந்த நிலையை அந்த வீடு பறைசாற்றிக் கொண்டிருந்தது. வளவைச் சுற்றியிருந்த பனைமரங்கள் அவர்களது வசதி வாய்ப்புக்களை இவ்வளவு தூரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்த்தியிருந்தது. தற்போது அவர்கள் வாழும் இடத்திலும் நிறையப் பனைமரங்கள் நின்றன. அம்மாவும் தங்கையும் கெட்டிக்காரர்கள் தான் என்று நினைத்துக் கொண்டான்.

தங்கராசுவைக் கண்ட தாயும் தங்கையும் ஆனந்தக் கூத்தாடினார்கள். "அம்மா நாகராணி...." என்று , அழுதான் தங்கராசு. பதிலேதுமில்லை. மீண்டும் " அம்மா.... நாகராணி...... " மௌனங்கள் தொடர்ந்த போதும் அவன் விடுவதாயில்லை. வேறு வழியின்றி அவள் வாழ்ந்த வீட்டை அடையாளம் காட்டினாள் தாய். அவனுக்குள் பல்வேறு உணர்வுகள். தந்தை வேதநாயகத்தை நினைத்துப் பயந்தான். நாகராணி தனது கோழைத் தனத்தை எப்படி எடுத்துக் கொள்வாளோ என்று கவலைப்பட்டான். இதயத்தில் சின்னதாக பட்டாம்பூச்சி பறந்தது. நாற்பத்தாறு வயதிலும் மிடுக்குக் குறையாமல் சிங்கநடை போட்டு நாகராணியின் வீட்டையடைந்தான்.

"ஹாய் அங்கிள் வாருங்கோ" பனாட்டு விற்ற அதே சிறுவன் ஓலைக் குடிசையிலிருந்து வெளியே வந்தான். அவனுக்குப் பின்னால் நாகராணியும் இன்னும் இரண்டு சிறுவர்களும் வந்தார்கள். அதிர்ந்து போனான் தங்கராசு. முதுமையின் முழு உருவமாக அதேநேரம் வறுமையின் கோரப் பிடியில் சிக்கியவளாக நாகராணி காட்சியளித்தாள். தங்கராசுவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. நாகராணியின் கழுத்தில் பழுப்பேறிப் போன மஞ்சள் கயிறு, நெற்றியில் குங்குமம் எல்லாவற்றையும் நொடியில் உணர்ந்து கொண்டான் தங்கராசு. நல்லகாலம் நாகராணி தங்கராசுவை அடையாளம் கண்டுகொள்ளவில்லை. "யார் நீங்க? என்ன வேணும்? " நாகராணியின் குரல் கேட்டு நிமிர்ந்து அவள் முகத்தைப் பார்த்தான். பார்க்கப் பாவமாக இருந்தது. தங்கராசுவும் தன்னை அடையாளம் காட்டிக்கொள்ள விரும்பவில்லை. ஒரு பேச்சுக்காக "வேதநாயகம் ஐயா இருக்கிறாரா?" என்று கேட்டான் "அவர் பனாட்டு விற்க சந்தைக்குப் போயிட்டார்". சட்டென்று பதில் கூறிவிட்டு உள்ளே சென்றுவிட்டாள்.

இதயத்தில் எங்கோ ஒரு மூலையில் வலித்தது. இவளுக்கேன் இந்தநிலை என்று இரங்கினான். பணக்கார சாதிவெறி பிடித்த வேதநாயகம் தனது மகளை ஒரு குடிகாரனுக்குக் கட்டிக் கொடுத்ததன் விளைவை இப்போது அனுபவித்துக் கொண்டிருக்கிறார். தங்கராசுவின் வறுமையையும் சாதியையும் இழிவாகப் பேசிய வேதநாயகம் இப்போது அணு அணுவாகத் துடித்துக் கொண்டிருக்கிறார். ஆனால் நாகராணி என்ன பாவம் செய்தாள்? தந்தையின் தவறுக்கு அவள் பலியாகி விட்டாள். பெருமூச்சு விட்டபடி தங்கராசு மௌனமாக அந்த ஊரை விட்டுப் புறப்படுகிறான். தான் வந்த சுவடு நாகராணிக்குத் தெரியக்கூடாது என்பதற்காக.

"ஓடமும் ஒரு நாள் வண்டியிலேறும்
வண்டியும் ஒரு நாள் ஓடத்திலேறும்"
(யாவும் கற்பனை)

**திருமதி. இராஜேஸ்வரி தெய்வேந்திரன்**
ஆசிரியர் B.A.Dip.in.Edu
வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகாமையாளரின் எண்ணத்துளிகள்

இறைவனால் அருளப்பட்ட விருட்சங்களுள் பனை விருட்சமும் ஒன்றாகும். இதன் பயன்கள் பெறுமதி மிக்கவை. இவ் அரியவளத்தினை மக்கள் பயனுறுமாறு பனை அபிவிருத்திச் சபை சேவை யாற்றி வருகின்றது. சேவையின் வெளிப்பாடுகளை அனைவருக்கும் எடுத்துச் செல்லும் வகையில்

கண்காட்சி, ஆய்வரங்கு, போட்டிகள் என்பனவை நடாத்துதல் பராட்டுக்குரியது.

கண்காட்சி சிறப்பு மலர் ஊடாக பனையின் சிறப்பியல்புகளை பதிப்பின் மூலம்வெயிடுவது காலம் காலமாக பயனுறவைக்கும் என்பது தூரநோக்கு. இம் மலர் சிறப்புற வெளிவர எனது வாழ்த்துக்கள்.

**திரு.என்.இராமேஸ்வரன்**
உள்ளகக் கணக்காய்வாளர்
பனை அபிவிருத்திச் சபை,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளகக் கணக்காய்வுப் பகுதி



தலைமைக் காரியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை அபிவிருத்திச் சபையின் உள்ளக கணக்காய்வுப்பகுதி

அரச உத்தியோகத்தர்கள் அரசிடமிருந்து பெறும் ஊதியம் மற்றும் சலுகைகள் என்பன ஒவ்வொரு குடிமகனினதும் பணம் என்பதை ஒவ்வொரு உத்தியோகத்தரும் கருத்தில் கொள்ளுதல் வேண்டும். உள்ளக கணக்காய்வுப் பகுதியானது சபையின் செயற்பாடுகளைக் கண்காணித்து வினைத்திறனுடனும் அதன் இலக்கை நோக்கி நகர்வதனை அவதானித்து அவற்றில் விலகல்கள் காணப்படுமிடத்து நேரடியாக சபையின் தலைவருக்கு அறிக்கையிடுதல் அத்துடன் அதற்கான தீர்வுகளையும் சிபார்சு செய்தல். உள்ளகக் கணக்காய்வுப் பகுதியானது சபையின் தலைவரின் நேரடியான வழிகாட்டலின் கீழ் செயற்படும் ஒரு பகுதியாகும்.

1. ஒரு திணைக்களத்தின் நிதி நடவடிக்கை சம்பந்தமான உள்ளக கணக்காய்வுப் பரிசோதனைகளின் கடமைகள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்கு விதிகளுக்கமைய பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்.

❖ ஒரு திணைக்களத்திலுள்ள தவறுகளையும் மோசடிகளையும் தடுப்பதற்கு அத் திணைக்களத்திலுள்ள உள்ளகத் தடுப்பு முறைகளும் கட்டுப்பாடுகளிலும் வடிவமைப்பிலும் உண்மையான செயல்முறையிலும் பயன்படத்தக்கவையென உறுதிப்படுத்தல்.

❖ கணக்கு முறைகளினதும் பிற பதிவுகளினதும் நம்பகத்தகு தன்மையை உறுதிப்படுத்தலும் அங்கு உபயோகிக்கப்படும் கணக்கீட்டு முறைகள் சரியான நிதிக் கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு ஏற்ற தகவல்களை தருமோவெனப் பார்த்தலும்.

❖ உத்தியோகத்தர் தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் காட்டும் செயல்திறனை மதிப்பிடல்.

❖ திணைக்களத்தின் சொத்துக்கள் பற்பல விதமான நட்டங்களிலிருந்து எந்த அளவில் பாதுகாக்கப்படுகின்றன என்பதை நிச்சயித்தல்.

❖ அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகளும் நிர்வாக ஒழுங்கு விதிகளும் திறை சேரியினால் காலத்துக்குக் காலம் வழங்கப்படும் பிற பிற்சேர்வான அறிவுறுத்தல்களும் பின்பற்றப் படுகின்றனவோ வென உறுதிப்படுத்தல்.

❖ அழிவு, உபயோகமற்றிருத்தல். அளவு கடந்த செலவு ஆகியவற்றைத் தடுப்பதற்கும் கண்டுபிடிப்பதற்கும் கையாளப்படும் உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் பயன்படு தன்மையை உறுதிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❖ திணைக்களத்தின் கணக்கீட்டு முறைமையையும் நிதிச்சிக்கல்கள் எவையேனுமுள்ள அதன் வேலைகளைப் பரிசோதித்தல், குறித்த திணைக்களத்தின் பொருள்களும் சொத்துக்களும் பாதுகாப்பாக, சிக்கனமாக, முறையாக உபயோகிக்கப்படுகின்றனவா எனச் சரிபார்த்தல்.

❖ தேவையேற்படும் பொழுது விசேட நுண்ணாய்வுகளைச் செய்தல்.

2. கணக்கீட்டு உத்தியோகத்தரும் முன்னேற்றக் கண்காணிப்பு குழுக்களும் வேலைகள், திட்டங்கள், முயற்சிகள் ஆகியவற்றின் முன்னேற்றத்தை நிச்சயிப்பதில் உதவுவதற்கு ஏதுவான உள்ளகக் கணக்குப் பரிசோதனைக் கடமைகள் பின்வருவனவற்றைக் கொண்டிருக்கும்.

➢ ஒரு திணைக்களத்தின் தொழில் நுட்ப அல்லது கணக்கு முறைக்கு எதிராக அதன் நிர்வாக முறையான கடமைகளைப் பரிசோதித்து அறிக்கை செய்தல்.

➢ வேலைகள் , திட்டங்கள், முயற்சிகள் ஆகியவற்றின் முன்னேற்றத்தையும் நிகழ்ச்சித் திட்டங்கள் எவ்வளவில் தம் இலக்கை அடைந்துள்ளனவென்பதையும் மதிப்பிடுதல்.

➢ வேலைகளை நிறைவேற்றுவதில் தாமதம் ஏற்படுத்தும் பிரச்சனைகளை உடனடியாக அந்த இடத்திலேயே விசாரணை செய்தல்.

➢ அத்தகைய வேலைகளை மேற்பார்வை செய்வதில் கையாளப்படும் கட்டுப்பாடுகளை மீளப்பார்வையிடுதலும் மதிப்பிடுதலும்.

ஆக்கம் :

**வி.பார்த்தீபன்**

கணக்காய்வு உத்தியோகத்தர்

**“மனித உழைப்பு ஒன்றே உயர்வளிக்கும் ஏணி நியம விதிகளை அதன் படிகளாக்கி உயரு”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை மரம் (கற்பகதரு) - Palmyrah Tree - තල් ගහ

நமது மூதாதையர் பனை மரத்தில் இருந்து கிடைக்கும் உணவுப் பதார்த்தங்களை முக்கிய உணவாக உபயோகித்தனர். மேலும் வாழ்க்கையின் பயன்பாட்டிற்கு அவசியமான பொருட்களைத் தரக்கூடிய மரமாகவும் உள்ளதால், பனை மரமானது "விரும்பியதைக் கொடுக்கும் மரம்" என்ற கருத்துடைய "கற்பகதரு" என்று அழைக்கப்படுகிறது.

பனை மரம் மனிதனின் பெருமுயற்சி இன்றி தானே வளர்ந்து மனித குலத்துக்கு பல பயன்களைக் கொடுக்கும் ஒரு இயற்கை வளம். பனை மரத்துக்கு ஒரு தரம் தண்ணீர் பாய்ச்சி விட்டால் போதும். இதன் வேர் 20 தொடக்கம் 25 அடி ஆழம் வரை செல்லக் கூடியதாகையால் நிலங்கீழ் நீரை பெற்று மிக வரண்ட காலநிலை உள்ள பிரதேசங்களிலும் பராமரிப்பின்றி வளர்கிறது. அது வளர்ந்து நுங்கினை, பனம் பழத்தை, ஓலையை, மட்டையை, ஏன் தன் உடலைக் கூட எமக்கு பயனாகத் தருகிறது.

விரும்பிய பயனைத் தரும் பனையை, சிறப்பாகப் பயன்படுத்தி, மக்களின் ஆரோக்கிய மேம்பாட்டையும், வேலை வாய்ப்பையும், பொருளாதார வளர்ச்சியையும் (வெளிநாட்டு வருவாய் உட்பட) அடைவதே பனை அபிவிருத்திச் சபையின் நோக்கமாகும்.

இலங்கை மற்றும் இந்தியாவில் காணப்படும் பனை மர இனம் Borassus Sundaica என்ற தாவரவியல் பெயரால் அழைக்கப்படுகிறது.

பனை மரங்கள் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் பெருமளவு காணப்படுகிறது.

## பனை மரத்தின் பயன்பாடுகள்

**பனை ஓலை :-** குருத்து ஓலைகளில் இருந்து அதிகமான பயன்தரும் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. கைப்பணிப் பொருட்களான பூக்கள், பூச்சாடிகள், அலங்காரப் பொருட்கள் (வெளிநாட்டவர்களும் விரும்பி வாங்கக்கூடிய), நாளாந்தப் பாவனைப் பொருட்களான தொப்பி, பெட்டி, சுளகு, பாய், கடகம், திருகணை, நீத்துப் பெட்டி என்பவை குருத்தோலையினால் செய்யப்படுகிறது. முற்றிய ஓலை வீடு வேயவும், வேலிகள் அடைக்கவும், மாட்டுத் தீனியாகவும் பயன்படுகிறது.

1. **நார் (தும்பு) :-** பனை மட்டையில் இருந்து பிரித்து எடுக்கப்படும் தும்பானது நீண்ட நாள் பாவிக்கக்கூடிய தூரிகைகள், (Brush) துடைப்பங்கள் செய்யவும் கயிறு திரிக்கவும் பயன்படுகிறது.

2. **மரம் (தண்டு) :-** கட்டுமானப் பணிகளுக்கு, குறிப்பாக வீட்டுக் கூரைகளுக்கு சிலாகை, தீராந்தி, வளை என்பவை தயாரிக்கப் பயன்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. **பதநீர் (கருப்பணி) :-** மதுவத்தால் (Yeast இனால்) நொதியம் அடையாத பூந்துணர் சாறு பதநீராக அருந்தவும், பனஞ்சீனி, பனங்கட்டி, பனம்பாணி, பனங்கற்கண்டு ஆகியன தயாரிக்கவும் பயன்படுகிறது. பூந்துணர்ச்சாறு நொதியம் அடையாமல் இருக்க முட்டியில் சுண்ணாம்பு பூசிவிடுவார்கள். பதநீர், வெல்லம், அமினோ அமிலங்கள், விற்றமின் டீ, கனியுப்புகள் என்பன காணப்படுகின்றன.

4. **மதுபானம் (கள், சாராயம்) :-** பூந்துணர் சாறு மதுவத்தால் (Yeast இனால்) நொதியம் அடைந்த பின் கள்ளு என அழைக்கப்படும் மதுபானம் பெறப்படுகிறது. கள்ளானது சாராயம் வடிக்கவும், வினாகிரி தயாரிக்கவும் பயன்படுகிறது. சின்னமுத்து, அம்மை நோய் வந்தவர்கள் உடன் இறக்கிய கள்ளு குடித்தால் நோய்த் தாக்கம் குறையும். ஆண் பனையில் இருந்து, வருடத்துக்கு 5 - 6 மாதங்களுக்கும், பெண் பனையில் இருந்து, வருடத்துக்கு 7 - 8 மாதங்களுக்கும் பூந்துணர் சாறைப் பெறலாம்.

5. **நுங்கு:-** முற்றாத பனங்காயை நுங்கு என்கிறோம். நுங்கு சுவையானதும், ஆரோக்கியமானதுமான ஒரு பானம்.

6. **பனம் பழம் :-** பனம் பழத்தை அப்படியே சூப்பிச் சாப்பிடலாம். காறல் சுவையை அகற்ற, சிலர் பழத்தைப் பிரித்து பளப்புளியில் ஊறவைத்தோ, தீயில் வாட்டியோ சாப்பிடுவார்கள். பனம் பழத்திலிருந்து பெறப்படும் பழக்கூழ் - பனங்களியில் (Fruit Pulp) இருந்து பழப்பாகு (Jam), பனாட்டு, குளிர்பானம் என்பன செய்யப் பயன்படுகிறது. அதைவிட இலங்கையர்கள் யாவரும் (குறிப்பாக பெரும் பாண்மை இனத்தவரும்) விரும்பி உண்ணும் சிற்றுண்டியான பனங்காய் பலகாரம் மிகவும் பிரபல்யமானது.

7. **பனங்கொட்டை :-** எரிபொருளாகவும் (புகையிலைக்கு புகையூட்டவும், வீட்டு சமையலுக்கும்) கைப்பணிப் பொருட்கள் தயாரிக்கவும் பயன்படுகிறது. பனம் கொட்டையினுள் உள்ள பூரானை உண்ணலாம்.

8. **பனங்கிழங்கு :-** உடல் ஆரோக்கியத்திற்கு சிறந்ததான பனங்கிழங்கை அவித்தும், தீயில் சுட்டும் உண்ணலாம். பனங்கிழங்கை அவிக்காது இரண்டாகப் பிளந்து வெய்யிலில் காயவிட்டு ஒடியல் தயாரிக்கலாம். இந்த ஒடியலில் இருந்து தயாரிக்கப்படும் ஒடியல் மா மூலம், உடலுக்கு மிக ஆரோக்கியமான ஒடியல் பிட்டு, ஒடியல் கூழ் என்பனவற்றைத் தயாரிக்கலாம். அவித்த பனங்கிழங்கை இரண்டாகப் பிளந்து வெய்யிலில் காயவைத்து புழுக்கொடியலைப் பெற்றுக்கொள்ளலாம். புழுக்கொடியல் மா தேங்காய் பூ, சீனி கலந்து சிற்றுண்டியாக உண்ணலாம்.

இந்த நூற்றாண்டு ஆரம்பத்தில் காணப்பட்ட 11.2 மில்லியன் பனை மரங்களில், ஏராளமானவை யுத்த சூழலில் அழிக்கப்பட்ட காரணத்தினால் எண்ணிக்கையில் குறைந்துள்ளன. பனை மர நடுகையை ஊக்குவித்து செழிப்புற வேண்டியது நமது கடமையாகும். பனை அபிவிருத்திக்கும், சந்தைப்படுத்தலுக்கும், பனை அபிவிருத்திச் சபை ஊழியர்களாகிய நாம் அனைவரும் அயராது உழைப்போமாக.

**அப்புத்துரை புஸ்பராணி,**
பிரதம இலிகிதர் (முகாமைத்துவ உதவியாளர் தரம்-1)
பனை அபிவிருத்திச் சபை, கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டக்களப்பு மாவட்ட அலுவலர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்பப் பனை

இன்பப் பனைச்சிறப்பு
இகத்தினிலே எதற்குமில்லை
இல்லாதோர் பனை சேர்ந்து
இல்லாமை போக்கிடுவார்.
கல்லாதோர் பலர் சேர்ந்து
கைத்திறனைப் படைத்தங்கே
சீமைப்பணம் பெற்று
சிறந்தோங்கி வாழ்ந்திடுவார்.

அடிமுதல் நுனி வரை
அனைத்துமே வைரங்கள்
பட்டை தீட்டி அதன்
பயன் பெற்று வளம் பெறலாம்.
பன்னீராண்டில் பருவத்துப்பெண்ணாகி
பசுமைப்பொலிவுடனே வானுயர்ந்து
வடிவு காட்டும் தன்னை நாடுவோரின்
வறுமை, பசி போக்கி வாழ்வளிக்கும்.

முத்தான விதை அதனை
முழுவதுமாய் பூமியிலே
புதைத்து வைத்துக்காத்திருந்தால்
நீர் வேண்டும் எனக்கூட
கையேந்தாக் கற்பகம் - தன்
காலத்தே பலன் தந்து
வானுயர்ந்து நின்றிடுமே
வற்றாப்புதையல் கற்பகத்தருதானே.

வானத்தை ஏறெடுத்து
வான்மழையை எதிர் பார்த்து
மழை வீழ்ச்சி கண்டவுடன்
வாயார அதைப்பருகி
தேனமுதம் தந்து நிற்கும்
தேவதரு பனை தானே.

தரிசான பூமியிலும்
தளராமல் செழித்தோங்கும்
புதுமை பல படைக்கின்ற
கற்பக விருட்சமதை
காரணங்கள் ஏதுமின்றி
கத்தரித்தல் முறைதானோ

பஞ்சத்தை பறக்கடிக்கும்
வள்ளல் பனையதனை
சிதைத்த பழி சேராமல்
வெட்டும் பனைக்கொன்று

நட்டு வளம் சேர்த்து
ஓங்கு பனைச்செல்வமதை
அழிக்காமல் காத்து நாமும்
வாழ்வு பெற்று வளமடைவோம்

ஆக்கம் :
**திருமதி. சாந்தினிதேவி ரஞ்சன்**
முகாமைத்துவ உதவியாளர்
பனை அபிவிருத்திச்சபை,
மட்டக்களப்பு.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகாமையாளரின் எண்ணத்துளிகள்

பனை சார்ந்த உற்பத்திப்பொருட்கள் முன்னைய கால மக்களி லிருந்து இன்றுவரை அதிமுக்கிய பாவனையில் இருந்து வருகின்றது. பாரம்பரிய மற்றும் நவீன சமூதாயத்தின்பாவனையிலுள்ள பொருட்களில் பனையிலான உற்பத்திப் பொருட்கள் முதன்மைஇடத்தை வகிக்கின்றது. இவ்வுற்பத்திப் பொருட்களை பாரம்பரியமிக்கதாகவும், நவீனம யமிக்கதாகவும்இத்தலைமுறையினருக்கேற்ப அறிமுகப் படுத்துவது எமது நோக்கமாகும். அத்துடன் இவ்வுற்பத்திப் பொருட்களின் பெறுமதித்தரத்தினையும், ஆரோக்கியத்தன்மையையும், சுகாதாரத்திற்கு ஏற்றதாகவும், சுற்றாடலுக்கு பங்கம் விளைவிக்காமலும், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டவர்களுக்கு பொருள் பற்றி அறிமுகப்படுத்துவதற்கும், விற்பனையை அதிகரிப்பதற்கும் சந்தைப்படுத்தல் பிரிவானது அதன் முக்கிய நோக்கமாக கொண்டுள்ளது.

இதனால் உற்பத்தியாளரை ஊக்குவித்து அவர்களின் வாழ்வாதாரத்தை அபிவிருத்தி செய்வதன்மூலம் பனை வளத்தை மேம்படுத்தி நாட்டின் வளர்ச்சிக்கு அதிகளவில் பங்களிப்பு செய்கின்றது. மேல் குறிப்பிட்ட நோக்கங்களை அடைவதற்கு பனை சார்ந்த தேசியளவிலான பொருட்காட்சிப்படுத்தல் யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளமை இங்கு மிக முக்கியமானதாக கருதப்படுகின்றது. இக்கண்காட்சி மாபெரும் வெற்றியளிப்பதற்கு எனது பங்களிப்புடன் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**திரு.வஹெலதந்திரி**
முகாமையாளர்(சந்தைப்படுத்தல்)
பனை அபிவிருத்திச் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முல்லைத்தீவு மாவட்ட அலுவலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு மாவட்ட அலுவலர்கள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாந்தோட்டை மாவட்ட அலுவலர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தளம் மாவட்ட அலுவலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





## பனை அபிவிருத்திச் சபை
## சந்தைப்படுத்தல் பகுதி

சந்தை என்பது கொள்வனவாளனும் விற்பனையாளனும் சந்திக்கும் இடம் சந்தை எனப்படும். ஆனால் பனம் பொருட்களைப் பொறுத்தமட்டில் சற்று வித்தியாசமான சந்தையாக காணப்படுகிறது. அதாவது தற்கால வாழ்வியலில் பனையின் முக்கியத் துவம் இளம் சமுதாயத்தினரிடம் பெரிதாக காணப்படாத போதிலும் எமது மூதா தையினர் அதன் முக்கியத்துவம் பற்றி பல குறிப்பேடுகளிலும், வாழ்ந்தும் காட்டியு ள்ளனர். பனம் உணவுகளை உட்கொண்டவர்கள் தற்பொழுதும் நோய் அற்று நல்ல தேக ஆரோக்கியத்துடன் வாழ்கின்றனர் ஆனால் இளம் சமுதாயத்தினர் தற்பொழுது இளவயதிலேயே அவர்களை நோயாளிகளாக்கி விடுகிறது. இதற்கு காரணம் செயற்கை முறையிலான இரசாயனம் கலந்த உணவுகளை உட்கொள்ளுதல் மற்றும் பிளாஸ்ரிக் பாவனை அதிகரித்தமை. எனவே தற்பொழுது பனை வளம் தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் பனை அபிவிருத்திச்சபையினாலும் பனை வளம்சார் நிபுணர்களாலும் வழங்கப்பட்டு வருகிறது. இதனால் மக்கள் தற் பொழுது பனை சார் உற்பத்திப்பொருட்களில் அதிகம் நாட்டம் கொள்வதன் காரண மாக பனை சார் உற்பத்திப்பொருட்களுக்கு அதிகம் கேள்வி ஏற்படத் தொடங்கி யுள்ளது. இதனால் நாம் அவற்றினை உற்பத்தி செய்து எமது கற்பகங் களின் ஊடாக விற்பனை செய்து வருகிறோம். இதனால் பனைவளம் உச்சமாக பயன்படுத்தப்படுத் தப்படுவதுடன் இதனால் பனை வளத்தில் தங்கி வாழும் குடும்பங்கள் அதிகம் பயன் பெறுகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டு பனை அபிவிருத்திச்சபையானது வாடிக்கையாளர்களதும் உற்பத்தியாளர்களதும் நன்மைகருதி ஒவ்வெரு மாவட்டங்களிலும் கற்பக விற்பனை நிலையங்களை நிறுவி பனைசார் உற்பத்திகளைக் கொள்வனவு மற்றும் விற்பனை செய்து மக்களுக்கு சேவைகளைச் செய்து வருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கைப்பணியாளர்களிடம் கொள்வனவு நடவடிக்கையின் போது கற்பகம் மாங்குளம்**



பனை அபிவிருத்திச்சபையானது பனை வளத்தினைப் பயன்படுத்தும் பொருட்டு பனை வளத்தில் தங்கிவாழும் குடும்பங்களுக்கு பின்வரும் பயிற்சிகளை வழங்கி வருகின்றது

1. பனங் கைப்பணிப்பயிற்சி
2. பனம் தும்புப் பயிற்சி
3. பனங்களி பயிற்சி
4. பனைசார் உணவுப் பயிற்சி

ஆகியவற்றினை மாவட்டங்கள் தோறும் வழங்கி அவர்களிடம் இருந்து தரமான சுகாதாரமான உற்பத்தியினை பனை அபிவிருத்திச்சபை ஒவ்வொரு மாவட்டங்களிலும் கொள்வனவு செய்து கற்பக விற்பனை நிலையங்களின் ஊடாக விற்பனை செய்து வருகின்றது. அதாவது அதிகளவில் பனை வளம் நிறைந்து இருக்கும் வடக்கு கிழக்கு மாகாணங்களில் அதிகளவில் உற்பத்தி நடைபெறுகின்றது. இவ் இடங்களில் பனை அபிவிருத்திச்சபையினால் பயிற்சி வழங்கப்பட்டு உற்பத்திக் குழுக்களாக உற்பத்தியில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் உற்பத்திகள் முதலில் வடக்கு கிழக்கு மாவட்டத்தில் மட்டும் விற்பனை செய்யப்பட்டு வந்தது. தற்பொழுது நாட்டில் உள்ள அனைத்து இடங்களிலும் கிடைக்கக் கூடிய வகையில் கற்பக விற்பனை நிலையங்கள் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது.

**மாங்குளம்** VRSDO **பனம் உற்பத்தி விற்பனை நிலையம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் கொழும்பு கற்பகம் பெரும் பங்கு வகிக்கின்றது. அதாவது அனைத்து சமூகமும் பயன் பெறும் வகையில் (கொழும்பு வாழ் தமிழர், சிங்களவர், இஸ்லாமியர், வெளிநாட்டவர்) என பலரும் தங்களுடைய தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய வகையில் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. எனவே தற்பொழுது வடக்கு கிழக்கில் உள்ள உற்பத்தி நிலையங்கள் தொடர்ந்தும் உற்பத்தியில் ஈடுபடுவதனால் அவர்களின் வாழ்க்கைத் தரம் மேம்படுகிறது.




அதுமட்டுமல்லாது விற்பனை அதிகரிக்கும் நோக்கில் வாடிக்கையாளர்களின் இடங்களுக்கு கொண்டு சென்று நடமாடும் விற்பனை (Mobile Sale) செய்யப்படுகின்றது. அத்துடன் நாடு முழுவதும் பல்வேறு வகையினரால் செய்யப்படும் கண்காட்சிகளில் பனை அபிவிருத்திச்சபையின் பங்கு மிகப்பெரிது அதாவது அனைத்து கண்காட்சிகளிலும் பனங்கைப்பணிப்பொருள், பனம் உணவுப்பொருள் என பலவகை பனைசார் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

**கண்காட்சியின் போது**






அத்துடன் உள்ளூர் உற்பத்தியாளர்களை உற்பத்தியினை ஊக்குவிக்கும் பொருட்டும் அவர்களது நலன் கருதியும் வாடிக்கையாளர்களது நலன் கருதியும் தற்பொழுது உள்ளூர் உற்பத்திப்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதனால் பலதரப்பட்டவர்கள் நன்மையடைகின்றனர்.

பனை அபிவிருத்திச்சபையின் கொழும்பு அலுவலகத்தில் உள்ள சந்தைப்படுத்தல் பகுதி பல வெளிநாட்டு ஏற்றுமதியாளர்களுடன் கைச்சாத்திட்டு பனை சார் உணவு உற்பத்திப் பொருட்கள், கைப்பணிப்பொருட்கள் மற்றும் பனம் தும்பு என்பன ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. இதனால் வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் பனையின் அனைத்து உற்பத்திப் பொருட்களையும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் உள்ளது. இவ்வாறாக தற்பொழுது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் உள்ள ஏனைய மாவட்டங்களில் விற்பனையை அதிகரிக்கும் நோக்கிலும் உற்பத்தியாளர்களின் நன்மை கருதியும் கற்பக விற்பனை நிலையங்கள் திறக்கப்படவுள்ளது.

பனங்கைப்பணிப் பொருட்களை பொறுத்தமட்டில் தரமான அழகான உற்பத்திப்பொருட்கள் அனைவராலும் விரும்பி கொள்வனவு செய்யப்படுகின்றது. இவர்களது உற்பத்தியினை நேரடியாக பல வெளிநாட்டு கட்டளைகளுக்கு பொருட்கள் செய்யப்பட்டு ஏற்றுமதி செய்யப் படுகின்றது. இவ்உற்பத்தி நாடுமுழுவதும் விற்பனைக்காக அனுப்பப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அத்துடன் சந்தைப்படுத்தலை விரிவுபடுத்தும் நோக்கில் தற்பொழுது Cargills Food City யுடன் இணைந்து ஒரு பகுதியில் எமது பனை சார் உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகிறது. இதனால் பனைசார் உற்பத்திப்பொருட்கள் தற்பொழுது அதிகம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. அந்தவகையில்

1. யாழ்ப்பாணம் Cargills Food City
2. கண்டி Cargills Food City
3. குருநாகல் Cargills Food City

பனை அபிவிருத்திச்சபையினால் பின்வரும் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

1. விற்பனை செய்யப்படும் பனம் கைவினைப் பொருட்கள். பனைசார் உணவுப் பொருட்கள் பனம் தும்புப் பொருட்கள்

**பனை அபிவிருத்திச்சபையில் உள்ள கற்பகங்களின் விபரம்**

| இல | மாவட்டம் | கற்பகம் அமைந்துள்ள இடம் |
|---|---|---|
| 1 | யாழ்ப்பாணம் | கே.கே.எஸ் கற்பகம் |
| | | நல்லூர் கற்பகம் |
| | | வைத்தியசாலை வீதி கற்பகம் |
| | | பேருந்து நிலைய கற்பகம் |
| | | நெடுந்தீவு |
| 2 | முல்லைத்தீவு | மாங்குளம் கற்பகம் |
| 3 | வவுனியா | வவுனியா கற்பகம் |
| 4 | மன்னார் | மடு |
| 5 | திருகோணமலை | திருகோணமலை |
| 6 | மட்டக்களப்பு | மட்டக்களப்பு |
| 7 | அம்பாறை | அம்பாறை |
| 8 | கொழும்பு | வெள்ளவத்தை |
| 9 | புத்தளம் | கற்பிட்டி |
| 10 | அம்பாந்தோட்டை | அம்பாந்தோட்டை |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கற்பக விற்பனை நிலையங்களின் கடந்த 4 ஆண்டு விற்பனை விபரம்

| இல | மாவட்டம் | கற்பகம் முகவரி | விற்பனை விபரம் | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | 2012 | 2013 | 2014 | 2015 |
| 1 | யாழ்ப்பாணம் | கே.கே.எஸ் கற்பகம் | 1,467,405.00 | 1,397,559.25 | 1,563,256.00 | 1,824,989.00 |
| | | நல்லூர் கற்பகம் | 1,688,061.50 | 1,569,108.50 | 1,924,913.95 | 2,395,092.61 |
| | | வைத்தியசாலை வீதி கற்பகம் | | | | |
| | | பேருந்து நிலைய கற்பகம் | 557,254.00 | 380,256.00 | 764,724.25 | 1,001,962.89 |
| | | நெடுந்தீவு | | | | 475,171.00 |
| | | வடமராட்சி | 286,272.60 | 107,170.00 | | |
| 2 | முல்லைத்தீவு | மாங்குளம் கற்பகம் | | | | 74,265.00 |
| 3 | வவுனியா | வவுனியா கற்பகம் | 4,705,473.00 | 4,313,455.00 | 2,930,934.00 | 3,580,754.50 |
| 4 | மன்னார் | மன்னார் | 827,858.50 | 658,556.00 | 1,097,568.45 | 968,981.55 |
| | | மடு | | | | |
| 5 | திருகோண மலை | கற்பகம் | 443,691.00 | 568,297.00 | 835,154.50 | 711,012.50 |
| | | Store | | | | 124,859.00 |
| 6 | மட்டக்களப்பு | மட்டக்களப்பு | 414,141.06 | 1,825,744.50 | 778,153.25 | 3,583,078.00 |
| | | காட்சியறை | 556,819.00 | 975,132.00 | 563,705.50 | 2,575,162.75 |
| | | | | | | |
| 7 | அம்பாறை | அம்பாறை | 219,015.50 | 334,912.50 | 338,517.75 | 212,880.50 |
| 8 | கொழும்பு | கற்பகம் | 3,783,585.20 | 3,487,799.01 | 4,076,782.25 | 5,251,288.72 |
| | | Store | 1,921,703.00 | 36,410.00 | | |
| | | கண்காட்சி | 2,031,406.74 | 1,557,137.50 | 1,497,013.20 | 1,100,795.26 |
| 9 | புத்தளம் | கற்பிட்டி | 110,855.00 | 130,250.00 | 187,005.40 | 164,588.50 |
| 10 | அம்பாந் தோட்டை | அம்பாந்தோட்டை | 112,505.00 | 190,515.00 | 174,325.12 | 270,905.00 |
| | | திஸ்சமாறாம | 58,880.00 | 239,947.00 | 561,531.00 | 543,297.00 |
| மொத்தம் | | | **9,184,926.10** | **7,772,249.26** | **17,293,584.62** | **24,859,083.78** |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரமுயர்ந்த கைப்பணிப் பெண்

**நா**ளைய விடியலுக்காய் ஊரே ஆழ்ந்த உறக்கத்திலிருந்தது. ஆனால் அன்னமலரின் விழிகள் மட்டும் உறக்கத்தைத் தொலைத்திருந்தன. காரணம் பொழுது விடிந்தால் அவளுக்கு அறுபது வயது நிறைவு நாள். இந்த அறுபது வயது தான் அவள் வேலைக்கே உலை வைத்துச் செல்லப் போகின்றது.

அன்னமலர் யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவள். அது மட்டுமல்ல யாழ்.பனை அபிவிருத்திச் சபையின் கைப்பணிப் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற ஒரு போதனாசிரியராகவும் கடமையாற்றி வருகின்றாள்.

அன்னமலர் அழகும், அறிவும், திறமையும் நிறைந்தவள். அவள் யாழில் மட்டுமல்ல திருகோணமலை, வவுனியா, புத்தளம், கொழும்பு என பல மாவட்டங்களில் தொழில் புரிந்தவள். இளமைக் காலங்களைப் போலவே இப்பொழுதும் அதே துடிதுடிப்பு, வேலைகளில் கவனம் செலுத்தல், அவசர வேலைகளின் போது நேரகாலம் பார்க்காது செயற்படுதல் என்று சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் அவள் வயது தான் அவளுக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றது.

திருமணம் முடித்து நான்கு பிள்ளைகளைப் பெற்றெடுத்த பின் இளவயதினிலேயே கணவனைப் பறிகொடுத்து விதவையானாள் அன்னமலர் அவள் குழந்தைளை வளர்ப்பதற்கு இந்த கைப்பணி வேலை தான் கைகொடுத்தது கடமை நேரங்கள் தவிர்ந்த ஏனைய நேரங்களிலும் வீட்டிலிருந்தவாறே கைப்பணிப் பொருட்களைச் செய்து விற்று பணம் சம்பாதித்தாள்.

பிள்ளைகளும் வளர்ந்து பெரியவனாகி அரச நிறுவனங்களில் வேலையாகினார்கள். அவர்களிற்கு திருமணமும் முடித்துக் கொடுத்து விட்டாள் அன்னமலர்.

எங்கோ சாமக்கோழி கூவும் சத்தம் அன்னமலரின் காதுகளில் கேட்கவும் அவள் தூக்கத்தைத் தானாகவே வரவழைத்துத் தூங்கி எழுந்து கொண்டாள். வழக்கத்துக்கு மாறாக வேலைக்குச் சென்றவளுக்கு வரவேற்புகளும் வாழ்த்துக்களும் அதிகமாக இருந்தது. உள்ளம் பூரிப்படைந்தாலும் ஏதோ ஒருவித வருடல் அவள் உள் மனதைத் துளைபோட்டு வாட்டியது. “இன்றிலிருந்து நான் வேலைக்கு வரமுடியாதா வீட்டிலேயே இருப்பதா வயது போய் கிழப்பருவமடைந்து விட்டேனா” என்று தனக்குள்ளேயே நினைத்தவளுக்கு தனது இரண்டு காதுகளையும் இறுகப் பொத்திக்கொண்டு ஓ...... வெனக் கதறவேண்டும் போலிருந்தது. கண்களிலிருந்து உருண்டு திரண்ட கண்ணீர்த்துளிகளை விரல்களின் உதவியுடன் துடைத்துக் கொண்டவள் எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு வீடு திரும்பினாள்.

நாட்கள் நகர்ந்தன ஆனால் அன்னமலர் ஓய்வு பெற்றும், ஓய்வின்றித் தொடர்ந்தும் வீட்டிலிருந்தவாறே கைப்பணிப் பொருட்களைச் செய்து வந்தாள். எப்போதும் பனையோலையும் கையுமாகயிருப்பாள். பலவிதமான கைப்பணிப் பொருட்களைச் செய்து விற்று தனவதியாக வாழ்ந்து வந்தாள். வேறு வேறு தொழில் புரிபவர்கள் எல்லாம் ஓய்வுபெற்ற பின் தமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளையே மறந்து வெறுமனே வீட்டிலிருந்து விடுவார்கள். ஆனால் கைப்பணி தொழில் புரிந்த தன் போன்றவர்களால் மட்டும்தான் தமது தொழிலை ஓய்வு பெற்ற பின்னும் தொடர முடிகின்றது. என்று நினைக்கும்போது அவளை நினைத்து அவளே பெருமிதம் அடைவாள்.

காலங்கள் யாருக்காகவும் காத்திருப்பதில்லை. அது தன்பாட்டிலேயே செல்லும் என்பதற்கிணங்க அன்னமலரின் உடல் நிலையிலும் தளர்வு ஏற்பட்டது. ஆனால் அவள் உள்ளமும் மனத்தைரியமும் எப்போதும் இளமையாகவே இருந்தது. எனவேதான் அன்னமலர் தனது கைத்தொழிலை கடவுளாக நினைத்து தொடர்ந்து பனையோலைகளால் வண்ணவண்ணப்பூக்கள், கூடைகள், பெட்டிகள் என பல பொருட்களைச் செய்து பக்கத்துச் சந்தையிலும் கடைகளிலும் விற்று வந்தாள். சில வேளைகளில் பொருட்களை சேர்த்து வைத்து பனை அபிவிருத்திச் சபையின் கற்பக விற்பனை நிலையங்களிலும் கொடுத்து காசாக்கினாள். பல நுகர்வோர் கூட அவள் பொருட்களில் தனிச்சிறப்பினைக் கண்டு மீண்டும் மீண்டும் கொள்வனவுக் கட்டளைகள் வழங்கி வாங்குவது மட்டுமல்லாது வீடு தேடிச்சென்று பாராட்டியும் வந்தனர்.

இன்னும் சிலர் அவள் வீட்டிற்குச் சென்று பன்னவேலை பயிற்சியினையும் பெற்று சென்றனர். அன்னமலர் மறுப்பேதும் இன்றி ஆவல் பொங்க கற்றுக்கொடுப்பாள். அதையும் விட அவள் தொழில் புரிந்த காலங்களில் அவளிடம் பயிற்சி பெற்றவர்கள் கூட மிகவும் திறமைசாலி என பெயர் வாங்கி அந்த மகிழ்ச்சியினை அன்னமலரிடம் வந்து கூறி அவளுடன் சேர்ந்து ஆனந்தம் அடைவார்கள்.

அன்று வேலைகளை முடித்துக்கொண்ட அன்னமலர் ஓய்வாக இருந்தாள். மேசை மேல் இருந்த அந்த நாளேட்டில் அவள் கண்கள் பணிந்தன மெதுவாக பத்திரிகையினை எடுத்துப் பக்கங்களைத் திருப்பினாள். பனை அபிவிருத்திச் சபையின் "ஞாலத்தில் புதுமை புகும் தாலம்" அவளது விழிகள் அதில் இலயித்தன. ஆம் பனை அபிவிருத்திச் சபையினால் நடாத்த இருக்கும் இவ் கண்காட்சியில் பல போட்டிகளும் நடத்த இருப்பதாக அவள் முழுமையாகப் படித்து முடிந்த பின் அறிந்து கொண்டாள். இதில் இடம்பெறும் கைப்பணிப் போட்டியில் தானும் பங்கு கொள்வதென ஆணித்தரமான முடிவெடுத்தாள்.

அன்னமலரின் வயதுதான் முதிர்ந்து விட்டதே தவிர, அவளது ஆக்கத்திற்கும், ஊக்கத்திற்கும், விடாமுயற்சிக்கும் வயது போகவில்லை. மறுநாளே பனையோலையையும் அதற்கு தேவையான கருவிகளையும் கையில் எடுத்தாள். தனது பங்கிற்கு பல விதமான பொருட்களை செய்து குவித்தாள். தனது பொருள் தனிச் சிறப்பு பெற வேண்டும் என எண்ணினாள். விழா ஏற்பாட்டாளர்களுடன் தொடர்பு கொண்டு கைப்பணிப் பொருட்களை உரிய நேரத்தில் உரிய இடத்திற்கு அனுப்பி வைத்தாள்.

அன்னமலரின் பிள்ளைகள் எல்லாம் வளர்ந்து பெரியவர்களாகி தங்கள் தங்கள் வாழ்க்கையை தேடிச் சென்று விட்டார்கள். இருந்தும் பெற்றெடுத்த தாயை தம்முடன் அழைத்துச் செல்ல எவ்வளவோ முயன்றும் அவர்களால் முடியவில்லை. காரணம் அன்னமலர் "நான் எனது சொந்தக்காலில் நிற்கமுடியும் என்னால் வரமுடியாது" என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிவாகக்கூறி மறுத்து விட்டாள். இன்றும் அவள் தனிமரமாகவே நின்றாலும் பல பேருக்கு நிழல் கொடுக்கும் விருட்சமாகவே இருந்தாள். அவள் சம்பாதிக்கும் பணத்தில் இல்லையென்று கேட்டு வருபவர்களுக்கு இனாமாக தன்னால் முடிந்த உதவிகளைச் செய்து வருகின்றாள். பிட்டு அவிக்க நீத்துப்பெட்டி, கறி இறக்கி வைக்க திருகணை, இன்னும் பெட்டிகள், கடகம் என்று என்ன தேவையோ அயலவர்கள் அன்னமலரிடம் வந்து பெற்றுச் செல்வார்கள். இப்படியே அவர்களது வாழ்க்கை உருண்டு கொண்டு இருந்தது.

"ஞாலத்தில் புதுமை புகும் தாலம்" நிகழ்வுகள் பனை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவரின் தலைமையில் ஆரம்பம் ஆனது. நிகழ்ச்சி ஒழுங்குகள் நிகழ்ச்சி ஒழுங்கமைபாளர்களினால் நடாத்தப்பட்டுக்கொண்டிருந்தன. விழாவில் அன்னமலரும் பார்வையாளர்களில் ஒருவராகவும், பொருட்களின் பங்காளராகவும் கலந்துகொண்டாள். முதலாவது நாள் , இரண்டாவது நாள், மூன்றாவது அதாவது விழாவின் இறுதி நாள் அன்று தான் போட்டிகளில் வெற்றி பெறுபவர்கள் பற்றி அறிவிக்கப்பட்டது. நடுவர் அவர்களின் தீர்ப்பிற்காக எல்லோரும் காத்திருந் தனர். பொருட்கள் பல தேர்ந்தெடுக்கப்பட்டு அதில் அதிசிறந்த பயன்பெறும் பொருளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது. திருமதி எஸ். அன்னமலர் என அறிவிக்கப்பட்டது. அன்னமலருக்கு வானத்திற்கும் பூமிக்கும் குதிக்கவேண்டும் போல இருந்தது. ஆனாலும் அவள் அமைதி யாகயிருந்தாள். மீண்டும் நடுவரின் குரல் ஒலித்தது. திருமதி எஸ்.அன்னமலர் கைப்பணிப் பொருட்களின் போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்டு முதலிடம் பெறுகின்றார் என்று அறிவித்தார்.

திருமதி அன்னமலர் உடனடியாக அரங்கத்திற்கு வாருங்கள் என்றதும் அன்னமலர் அன்னநடை பயின்று ஒரு புதுமைப் பெண்ணாக அரங்கத்தில் ஏறினாள். இன்னும் ஒரு இனிப்பான தகவல் இப் போட்டியில் முதலிடம் பெற்ற அன்னமலர் அவுஸ்திரேலியா செல்லும் வாய்ப்பையும் பெற்றுள்ளார். நடுவர் அவர்கள் கூறி முடிக்கவும் அன்னமலருக்கு தனது காதுகளையே நம்ப முடியாமல் "நானா ..... நானா...." என தன்னை அறியாமல் புலம்பத் தொடங்கினாள் அன்னமலருக்கு பொன்னாடை போர்க்கப்பட்டது. கழுத்தில் மாலைகள் வந்து விழுந்தன. அன்னமலர் ஆனந்தத்தில் குதித்தாள் அவள் அவுஸ்ரேலியா நோக்கி வானில் பறந்தாள். ஏதோ கைகள் இரண்டையும் உயர்த்தி வானில் பறப்பது போல இருந்தது அன்னமலருக்கு.

நன்றி

ஆக்கம்

**பற்குணன் அம்பிகாபதி**

பனை அபிவிருத்திச் சபை

வவுனியா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துணை ஒன்று - சிறுகதை

அனைத்துமே சூனியமாகியதை எண்ணி தன் ஒரே மகளைக் கூட மறந்தவளாய் எங்கோ வெறித்துப் பார்த்துக் கொண்டு ஆழ்ந்த யோசனையில் மூழ்கியிருந்த தனத்தை தட்டி எழுப்பியது அந்த அதட்டல் குரல்.

"பிள்ளை தனம் இன்றைக்கு காசு தருவன் என்டு சொன்னனியெல்லா அதுதான் வந்தனான்" என்றார் குமாரண்ணன்.

"அண்ணன் என்னட்ட இப்ப காசில்ல. அடுப்புக் கூட பத்தவைக்கல்ல தயவு செய்து ஒரு கிழம பொறுங்க அதுக்குள்ள வீட்டுவேலை செஞ்சாவது உங்கட காசத்தாறன்" கவலையுடன் கூறினாள் தனம்.

"சரி, சரி அடுத்த கிழமை திருப்பி இந்தக் கதை சொல்லக்கூடாது நான் போயிட்டு வாறன்" என்று கூறியவாறு புறப்பட்டார் குமாரண்ணன்.

தனது கணவன் கடலோடு போன பிறகு எந்த எதிர்பார்ப்பும் இல்லாதவளாக கணவனையும், தன் மகளையும் எண்ணிக் கண்ணீர் வடித்தபடி, இன்றுடன் ஆறு மாதங்களைக் கடத்தி விட்டாள். உறவுகள் சுற்றியிருந்தும் உதவுவார் எவருமில்லை. இளமையும், அழகும் நிறைந்த தனத்தை ஆசையுடன் பார்த்தார்களே தவிர பாசத்துடன் பார்க்க யாரும் இருக்கவில்லை. தன் நிலைமையை நொந்து கொண்டவளாக வீட்டுவேலை தேடி பிள்ளையுடன் தன் கால்போன போக்கில் நடக்கலானாள். வழியில் "தனம் எங்க பயணம்" என்ற குரல் கேட்டு நிமிர்ந்து பார்த்தாள். போட் முதலாளி விஸ்வம் கண்ணில் ஆசையும் உதட்டில் சிரிப்புமாக அருகில் வந்தான்.

"இந்த வெயிலுக்குள்ள புள்ளையோட எங்க போறா?" "வீட்டில இருந்து என்ன அண்ணன் செய்யிற, பிள்ளைக்கு சாப்பாடு குடுக்க வேணும். அதான் குமாரண்ணன் வீட்டு வேலைக்குப் போறன்" உனக்கென்ன பைத்தியமா நான் இல்லையா? கேட்டா உதவி செய்ய மாட்டேனா? உன் அழகுக்கும் இளமைக்கும் வீட்டு வேல செய்யிறதா? இந்தா காசப்பிடி இப்ப வீட்ட போ நான் பின்னேரம் வாறன்.

"அண்ணன் எனக்கு காசு வேணாம். நான் உழைச்சி சாப்பிட வேணும் என்டு நினைக்கிறன். என்னைப் பிழையா நீங்க நினைக்காதீங்க, நான் போயிட்டு வாறன்" என்று கூறியபடி கணவனை இழந்த இளம் விதவைகள் சமூகத்தில் வாழ்வது எவ்வளவு கடினமானது என்பதைச் சிந்தித்தவளாக மரத்துப்போன மனதுடன் வீதியைக் கடக்க முற்பட்டவளை ஒரு ஆட்டோ தடுத்து நிறுத்தியது. "ஏய் தனம் பைத்தியமா உனக்கு, இப்பிடியாடி ரோட்டக் கடப்பா?" என்று கூறியபடி ஆட்டோவை விட்டு இறங்கினாள் வித்தியா. வித்தியா தனத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெருங்கிய நண்பி, எப்போதும் பரபரப்பாகவே காணப்படுவாள். கணவன் நல்ல உழைப்பாளி. இருந்தாலும், வித்தியா வீட்டில் சும்மா இருக்க மாட்டாள். 10ஆம் வகுப்பு வரை தான் படித்தாள். ஆனால் கை வேலைகள் செய்வதில் கெட்டிக்காரி.

“தனம் என்னடி உடம்பு சரியில்லையா? எங்கடி இந்த வெயிலுக்குள போறா? பாவம் புள்ள எப்படி வேர்த்துப் போய்க் கிடக்கு பாரு” என்று கூறினாள்.

தனம் கண்கலங்கியபடி, “வித்தியா என்ட கஷ்டம் உனக்குத் தெரியாதா? நான் வேல தேடிப் போறன்டி சாப்பாட்டுக்கே வழியில்லை. யாரிடமும் தொடர்ந்து கையேந்த விருப்பமில்லை” என்று கூறி அழுதாள். அவளது அழுகையைத் தடுத்து நிறுத்திய வித்தியா, “கோழையா நீ? தைரியமா இரு. எங்கட கையில வேலையை வைச்சிக் கொண்டு ஏன் வேல வேல எண்டு அலைய வேணும். இப்ப நான் பனை அபிவிருத்திச் சபைக்குப் போறன். நிறைய சாமான்கள் பின்னிக் கொடுத்தனான். இன்டைக்கு காசு எடுக்க வரச் சொன்னவங்க அதுதான் போறன். ஏறு ஆட்டோவில உனக்கு நல்ல வழி நான் காட்டிறன்” என்று தைரியம் கூறி அழைத்துச் சென்றாள் வித்தியா.

நாட்கள் நகர்ந்தன. வித்தியா செய்த உதவியையும், நல்ல நட்பையும் எண்ணி எண்ணி பெருமிதமடைவாள் தனம். காலச்சக்கரம் மிக வேகமாகச் சுழன்று பதினெட்டு ஆண்டுகளைத் தாண்டி நின்றது. இன்று தனம் மனநிறைவோடு தலைநிமிர்ந்து நிற்கும் ஒரு சமூகசேவகி மட்டுமல்ல, ஏழை விதவைப் பெண்களுக்கு தொழில் வழிகாட்டியாகவும் மாறிவிட்டாள்.

பனையை ஆதாரமாகக் கொண்டு பழுதுகள் ஏதும் வராமல் வித்தியா கற்றுக் கொடுத்த பின்னல் கலை தனத்திற்குக் கைகொடுத்ததால் இரவு, பகல் பாராமல் ஓய்வின்றி உழைத்து உயர்ந்த நிலைக்கு வந்துவிட்டாள். சுய தொழிலுக்காக வங்கிகூட கடன் உதவி செய்தது. தனத்தின் ஒரே மகள் இன்று பெரியவள். போதனா வைத்தியசாலையில் தாதியாகப் பணி புரிகிறாள். துணையின்றிக் கதியற்றுக் கலங்கியபோது தனத்திற்குத் துணையாகக் கை கொடுத்துக் கரைசேர்த்தது பனையே. பனம் பொருள் உற்பத்திகள் மூலம் அவளது வாழ்வு மட்டுமல்ல. அவளது மகளின் வாழ்வும் வளமடைந்தது. தனம் இப்போது தனிமரமல்ல. அவளுக்கு நல்ல பனையின் துணையுண்டு.

முற்றும்

ஆக்கம்.

**திருமதி. சாந்தினிதேவி ரஞ்சன்,**
முகாமைத்துவ உதவியாளர்,
பனை அபிவிருத்திச் சபை,
மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருகோணமலை மாவட்ட அலுவலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வவுனியா மாவட்ட அலுவலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியம் தொட்டு வாழ்வியல் ஈறாக பனை

"பனை ஒரு மரம் என்பதை விட - இம் மண்ணுக்கு கிடைத்த வரம்"

பனை மரம் கிராமப்புறங்களின் கலாசாரத்தோடும், நாட்டின் பொருளாதாரத்தோடும் தலைமுறை தலைமுறையாக பின்னிப்பிணைந்துள்ளது என்பது மறக்கமுடியாத உண்மை.

"தேவலோகத்து கற்பகதரு போல பூவுலகத்து கற்பகதரு" என அழைக்கப்படுகின்றது. சங்ககாலம் முதல் தமிழர் தம் வாழ்வில் பனை மரம் ஓர் அங்கமாக விளங்கியிருக்கிறது. அன்று முதல் இன்றுவரை எம் வாழ்வியலோடு நெருங்கிய தொடர்பு கொண்டதாகவும் விளங்கிய பனையின் பெருமைகளை நோக்கின்,

அச்சு இயந்திரம் வருவதற்கு முன் ஓலைச் சுவடியில் தவழ்ந்த தமிழை சுமந்த பெருமை பனைக்கே உரியது. பனை ஓலையில் தான் நம் இனத் தமிழ் தவழ்ந்து கொண்டிருந்தது. உலகம் போற்றும் உன்னத நூல்களாக விளங்கும் திருக்குறள், தொல்காப்பியம், சிலப்பதிகாரம் உள்ளிட்ட அனைத்து தமிழ் இலக்கியங்களையும் பத்திரமாக புதிய தலைமுறையினருக்குக் கிடைக்கச் செய்த பெருமை பனையோலையையே சாரும்.

சங்ககாலத்தில் நெய்தல் நிலத்தில் பாடப்பட்ட நற்றிணை எனும் இலக்கியத்தில் "தொன்று உறை கடவுள் சேர்ந்த பராரை......." என்ற பாடலில் பண்டு தொட்டு உறைகின்ற கடவுள் தங்கப்பெற்ற பருத்த அடியினை உடைய ஊர்ப் பொதுவில் உள்ள பனையின் வளைந்த மடலிடத்துச் செய்த குடம்பையின் காண் இருந்து தன் பெடையை புணரும் மகனறலின் வருத்தம் தரும் குரலை கேட்கும் தோறும் என்று அ.நாராயணசுவாமி பொருள் கூறியுள்ளார். இதிலிருந்து பருத்த பனை மரத்தில் கடவுள் இருக்கின்றார் என்ற நம்பிக்கை நிரூபிக்கப்படுகின்றது. இந்த நம்பிக்கை தான் 2000ஆம் ஆண்டுகளுக்கு முன் இலங்கையை ஆண்ட பண்டுகாபயனிடம் இருந்திருக்கின்றது. "வேட்டைக்காரர்களின் கடவுள்" என்று பனை மரம் பண்டுகாபயன் ஆட்சிக்காலத்தில் நம்பப்பட்டதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது.

இது மட்டுமல்ல, பனை மரக்கொடியை கிருஸ்ண பரமாத்மாவின் அண்ணன் பலராமன் வைத்திருந்தாக தொல்காப்பியம் வியந்து கூறியிருக்கின்றது. "பனை முன் கொடிவரின் .........." என்ற உயிர் மயங்கிய சூத்திரம் சான்று பகர்கின்றது. இது மட்டுமன்றி இலங்கை மன்னன் விபீஷணனை அமர்த்தி விட்டு புறப்பட்ட இராமனுக்கு விபிஷணனை தங்கத்திலான ஏழு பனைமரங்கள் பரிசாகக் கொடுத்ததாக இராமாயணத்தில் குறிப்பிடப்படுகின்றது.

அத்தோடு காதலில் தோல்வியுற்ற காளையர்கள் மடலேறுதல் நிகழ்வில் பனை மட்டைகளை வைத்து குதிரை செய்து ஏறியதாக இலக்கியங்கள் கூறுகின்றன. இதிலிருந்து சங்ககாலத்திலிருந்து பனையின் பயன்பாடுகளை அறியக்கூடியதாக உள்ளது.

சங்கமருவிய காலத்தவரான திருவள்ளுவர் தனது உலகப்பொதுமறையான திருக்குறளில் பனை பற்றிக் கூறத்தவறவில்லை. நான்கு குறட்பாக்களில் பனை பற்றிக் கூறியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளுவனும் பெருமை கொள்ளும் அளவிற்கு பனையின் சிறப்பு அமைந்திருக்கின்றது என்றால் அது மிகையாகாது. "தினை துணை நன்றி செய்யினும் பனைத் துணையாக கொள்வர்பயன் தெரிவர்"

என்ற குறட்பாவிலே ஒருவன் தினை அளவு நன்மை செய்யினும் பனை அளவு பெரியதாக கருதுவர் அதன் பயனை அறிந்தவர் என்று விளக்கியிருக்கின்றார்.

இதே கருத்தைத்தான் நாலடியாரும் கூறிச் செல்கின்றார்

"தினை அனைத்தே ஆயினும் செய்த நன்றுண்டால் பனை அனைத்தா வள்ளுவர் சான்றோர்" என்று பனையின் சிறப்பையே கூறிச் செல்கின்றது நாலடியார்.

மேலும் பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு என்ற நெடுஞ்செழியனை மாங்குடிகிழார் பாடிய புறப்பாட்டிலே

"கடலோர பரதவர் மகளீர் இளநீர் பனை நுங்கின் நீர் கருப்பஞ்சாறும் கலந்து உண்டார்" என்று குறிப்பிடப்படுகின்றது. எனவே அக்காலத்திலும் உணவிலே பனையில் இருந்து பெறப்படும் பொருட்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டது என்பது புலனாகின்றது.

பனையை 'தால' என்றும் குறிப்பிடுவர் பழந்தமிழ் நூலான 'தாலவிலாசம்' பனைமரத்தின் 801 பயன்களை கூறுகின்றது. இதுமட்டுமல்லாமல் ஈழத்து இலக்கிய வரலாற்றுப் பரப்பில் 19ம் நூற்றாண்டில் எழுந்த 'தால புராணம்' பனையின் சிறப்புகள், பனையின் பயன்கள் என்பவற்றை பற்றி மிகச்சிறப்பாக கூறியுள்ளது.

அடி முதல் முடி வரை எமக்கு பயன்பெறும் ஒரே மரம் பனை மரம் என்றால் அது மிகையாகாது. முளைவிட ஆரம்பித்ததில் இருந்து வெட்டி வீழ்த்தப்பட்ட பின்னரும் நெடுங்காலத்திற்கு பயன் தரும் பனையை பாதுகாப்பது எம் ஒவ்வொருவரின் கடமையாகும். பருவ நிலை மாறுதலை சாமாளிப்பதில் பனைக்கு நிகர் எதுவும் இல்லை. காடு, மேடு, தரிசு, வயல், தோட்டம் என்று எங்கு வேண்டுமானாலும் வளர்ந்து பலன் தரும் கற்பக விருட்சமானர் பனையை வளர்க்க வேண்டியது காலத்தின் கட்டாயம்.

கம்போடியா நாட்டின் தேசிய மரமாகவும் தமிழ் நாட்டின் மாநில மரமாகவும், திருபனந்தாழ், திருப்பனங்காடு, திருப்பனையூர், திருமணல்பாடி, திருக்குறுங்குடி போன்ற இடங்களில் தல மரமாகவும் இலங்கையின் வடமாகாண சபையின் சின்னத்திலும் இடம்பிடிருத்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

வெயில் காயும் பனை மரம் நாம் வெயில் காயும் போது நம் தாகத்தையும், உடல் சூட்டையும் தணிக்க வல்லது. கொழுப்பைக் குறைக்கவும் உடல், உள ஆரோக்கியத்திற்கும், மலச்சிக்கல், வயிற்றுப்போக்கு, இரத்தசோகை, மார்பகபுற்றுநோய், அம்மை நோய் போன்றவற்றில் இருந்து எம்மை பாதுகாக்கின்றது. நுங்கு , பனைவெல்லம், பனங்கற்கண்டு, பனம்பழம், பனங்கிழங்கு என அனைத்துமே மருத்துவ குணம் நிறைந்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை மரம் என்று கூறுவதை விட பயன் மரம் என்று கூறும் அளவிற்கு எண்ணிலடங்காத பயன்களை தன்னகத்தே கொண்ட பனை மரங்களை தமிழை அழியாமல் காத்த பனை மரங்களை அழியவிடாமல் காப்பது எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். பண்டைய தமிழ் இலக்கியங்களை பாதுகாத்து தம் தலைமுறைக்கு வழங்கி பனை மரங்களை வாழையடி வாழையாக வரும் தம் தலைமுறைகளும் பயன்படுத்தும் வகையில் பாதுகாப்பாக வளர்ப்பது தான் பனை மரங்களுக்கு நாம் செய்யும் கைமாறு.

1978ஆம் ஆண்டு முதல் பனை மரங்களை பாதுகாக்கும் பொருட்டும், பனை மரத்தின் மூலம் பெறப்படும் பயன்களை அனைவரும் பயன்படுத்தும் வகையிலும் இலங்கையில் பனை அபிவிருத்திச் சபை செயற்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது. இச்சபை தமிழர்கள் வாழும் பிரதேசங்களில் மாத்திரம் செயற்படாமல் இனிவரும் காலங்களில் இலங்கை முழுவதும்விஸ்தரிக்கப்படுமாக இருந்தால் பனை மரங்களை ஆண்டாண்டு காலமாகப் பாதுகாக்கவும் எதிர்கால சந்ததியினர் பயன்படுத்தி பயன் பெறவும் முடியும் என்பது மறுக்க முடியாத உண்மை.

ஆக்கம்:<br>**செல்வி துர்க்காஜினி தெய்வேந்திரன்**<br>(B.A),வவுனியா.

**"சுயதொழில் தரும் சுபீட்ச வாழ்வு**
**மனமதில் நிறுத்தி தினமும் வாழு"**

**"இலக்கு நோக்கிய இலட்சிய வழியில் பயணிப்பதனால்**
**தொலைவில் இல்லை உச்சியின் தூர எல்லை"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகாமையாளரின் எண்ணத்துளிகள்

பனை அபிவிருத்திர் சபையின் கண்காட்சி மற்றும் ஆராய்ச்சி முடிவுகளை வெளிப்படுத்துகை சம்பந்தமான நிகழ்ச்சி நடாத்துவதை இட்டு மகிழ்ச்சி அடைகின்றேன்.

இம் முயற்சியின் மூலம் பனை செல்வத்தின் முக்கியத்துவத்தை மக்களிற்கு மேலும் வெளிப்படுத்தி அதன் பயன்பாடுகளை அதிகரிக்கலாம் என நம்புகின்றேன்.

பனை ஆராய்ச்சி நிறுவன ஆராய்ச்சி பகுதிகளில் பல்வேறுபட்ட துறை சார்ந்த உதாரணமாக, பனை சார்ந்த புதிய பொருட்களின் அறிமுகம். பனை சார்ந்த உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல் சம்பந்தமான முடிவுகள், பனை உற்பத்திகளின் போசணைக்கூறுகள் மற்றும் மருத்துவ முக்கியத்துவம், உற்பத்தித்திறனை அதிகரிக்கம் இயந்திரங்களின் அறிமுகம் போன்ற தொழிற்பாடுகளை வெளிக் கொணருவதற்கும், மக்கள் அதனை அறிந்து பயன்பெறவும் இந்நிகழ்வு ஒரு களமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

அத்துடன் இந்நிகழ்வு பனை உற்பத்திகளை நாடளாவிய ரீதியிலும் சர்வதேச ரீதியிலும் அறிய வழிவகுக்கும் என வாழ்த்துகின்றேன்.

**திரு. ஸ்ரீதயாளன் ஸ்ரீவிஜீந்திரன்**
B.Sc (Special in Chemistry) , M.Sc (SJU), A.I.Chem.C.
M.A (Administration), PgD.MM ( UOC )
முகாமையாளர் (ஆராய்ச்சி மற்றும் தரக் கட்டுப்பாடு),
பனை ஆராய்ச்சி நிறுவனம்,
பனை அபிவிருத்திச் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை ஆராய்ச்சி நிறுவன உத்தியோகத்தர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை சார் பாரம்பரிய கைத்தொழில் மக்களின் வாழ்வாதாரம் நோக்கிய பனை ஆராய்ச்சி நிறுவனம்




இலங்கையின் மக்கள் பாரம்பரியமாக பல கைத்தொழில்களை மேற்கொண்டு வருகின்றனர். அத்துடன் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல்வேறு கைத்தொழில்களைச் செய்வதோடு விவசாயத்திலும் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறான பாரம்பரியத்தில் பனை சார் கைத்தொழில் மிகப் பாரம்பரியமானதொன்றாகும். இலங்கையின் வடபகுதியில் பனைவளம் இலங்கையின் பொருளாதார வளத்திற்கு பாரிய பங்களிப்புச் செய்யக்கூடியதாக இருந்த போதிலும் பெரிதும் முக்கியத்துவம் பெறாத ஓர் துறையாகவே காணப்பட்டது. அதனால் பனை சார் உற்பத்தி குறிப்பிட்ட சில உற்பத்திகளுக்குள் வரையறுக்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக கள் உற்பத்தி, பதநீர் உற்பத்தி, பனாட்டு உற்பத்தி இன்னும் குறிப்பிட்ட சில பனையோலை உற்பத்திகளுள் (கடகம், பெட்டி, பாய், சுளகு) வரையறுக்கப்பட்டிருந்தன.

வடபகுதியில் பாரம்பரியமாகக் காணப்பட்ட வளங்களில் விவசாய, கடல்சார் வளம் போன்று பனை சார் வளமும் முக்கியமானதொன்றாகக் காணப்படுகிறது. எவ்வாறாயினும் பனைசார் வளத்தை அடிப்படையாகக் கொண்டு வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் மக்களை ஊக்குவிக்க ஆரம்ப காலங்களில் அதிக அக்கறை காட்டப்படவில்லை. காலப்போக்கில் ஏற்பட்டு வந்த சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்களின் காரணமாக பனை வளம் நாட்டின் பொருளாதாரத்திற்கும் அடிப்படைத் தேவைகளுடைய மக்களின் வாழ்வாதாரத்திற்கும் உதவக்கூடிய முக்கிய துறையாக இனங்காணப்பட்டு அது தொடர்பான பல்வேறு மாற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்பட்டு வரப்பட்டன. இதன் வளர்ச்சிப் பாதையில் பனை, தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்கள் ஒரு மைல் கல்லாகக் கொள்ளப்பட்டது. இதனூடாக பனைசார் கைத்தொழில் மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த நிறுவனமயப்படுத்தப்பட்ட பல்வேறு முயற்சிகள் வரலாற்றில் பதியப்பட்டுள்ளன. இவ்வாறான வரலாற்றுப் பாதையில் பனை அபிவிருத்திச் சபை மற்றுமொரு முக்கிய அமைப்பாகும். ஆரம்பத்தில் பனை அபிவிருத்தி சபை சிறிய அளவிலான ஆராய்ச்சிப் பகுதியைக் கொண்டிருந்தபோதும் பனை மரங்களின் உச்ச பயனைப் பெறக்கூடியவாறு அவற்றை சரியான முறையில் பயன்படுத்தவும் அவற்றின் பயன்பாடுகளை விஞ்ஞான ரீதியான ஆதாரங்களுடன் மக்களுக்குக் கொடுத்து மக்களிடையே பனைவளம் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தவும் தற்போதுள்ள பொருட்களின் தரத்தை அதிகரிக்கவும் வேண்டிய தேவையை உணர்ந்ததன் காரணமாக அவ்வாறான ஆராய்ச்சியின் முக்கியத்துவம் கருதி பனை அபிவிருத்தி சபையின் தனியான ஓர் அலகாக பனை ஆராய்ச்சி நிறுவனம் தோற்றம் பெற்றது.

## பனை ஆராய்ச்சி நிறுவனம்

2012 ஆம் ஆண்டு பனை ஆராய்ச்சி நிறுவனம் இந்திய மற்றும் இலங்கை அரசாங்கத்தின் நிதி உதவியுடன் பாரம்பரிய தைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சினால் மீள் புனரமைக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் செயற்படத் தொடங்கியது. இவ் பனை ஆராய்ச்சி நிறுவனமானது தற்போது பல வெற்றிகரமான செயற்பாடுகளுடன் புத்துணர்வு பெற்ற நிறுவனமாக செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது.

## பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் தூர நோக்கும் பணிக்கூற்றும்

பனை ஆராய்ச்சி நிறுவனம் சிறிய அளவிலான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டு படிப்படியாக வளர்ச்சி கண்டதன் காரணமாக நிறுவனம் தனக்கென தூரநோக்கையும் பணிக்கூற்றையும் ஆக்கிக் கொண்டது.

### தூரநோக்கு

இலங்கையின் தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்யும் துறையாக பனை ஆராய்ச்சியினை அதி உத்தம மட்டத்திற்கு அடைதல்.

### பணிக்கூற்று

இலங்கையின் தேசிய உற்பத்தியில் குறிப்பிட்ட அளவு பங்களிப்புச் செய்யும் பனைசார் கைத்தொழிலை புத்தாக்கமுடைய தொழில்நுட்ப மாற்றத்தினூடாக அபிவிருத்தி செய்தல், மேம்படுத்தல், பிரபல்யப்படுத்தல், நிலை பேண் உடையதாக சீராக்குதல் மற்றும் பேணக்கூடிய ஆராய்ச்சிகளை பயிற்சிப்படுத்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நோக்குகள்

பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் இனங்காணப்பட்ட தூரநோக்கு பணிக்கூற்றின் அடிப்படையில் பின்வரும் அடிப்படையான நோக்குகளுடன் செயற்படுகின்றது.

- ❖ பனைசார் உற்பத்திகளை அடிப்படையாகக் கொண்ட ஆய்வுகளை நடாத்துதல்.
- ❖ பனைசார் உற்பத்திகளின் செய்முறைகளினூடாக பனைசார் உற்பத்திகளின் பண்பு, தரத்தை பராமரித்தலும், முன்னேற்றுதலும்.
- ❖ பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் செயற்பாடுகளை விரிவாக்கலும், நெறிப்படுத்தலும்
- ❖ பனை ஆராய்ச்சி நிறுவனத்தைப் பலப்படுத்தல்
- ❖ பனைசார் வளங்களின் பயனை அதிகரிப்பதற்குத் தேவையான தரவுகளையும், உண்மைகளையும் வழங்கும் ஆய்வுகளை மேற்கொள்ளல்
- ❖ பனைசார் வளங்களின் வளர்ச்சிக்கும், பயிர்ச்செய்கைக்குமான ஆய்வுகளை கையாளுதலும், எதிர்வுகூறலும்

## பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் செயற்பாடுகளும் ஆய்வுகூடங்களும்

மேற்கூறப்பட்ட தூரநோக்கு, பணிக்கூற்று, குறிக்கோள்களின் அடிப்படையில் செயற்படும் பனை ஆராய்ச்சி நிறுவனமானது பனை தொடர்பான ஆராய்ச்சிகளை சில பல்கலைக்கழகங்களுடனும், வேறு சில ஆய்வு நிறுவனங்களுடனும் இணைந்து ஆய்வுகளில் ஈடுபட்டு மேற்கொள்வதுடன் பனை உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல், உற்பத்தித் திறனை மேம்படுத்தல், பனை உற்பத்திகளின் ஊட்டச்சத்துக்களை பகுப்பாய்வு செய்தல், தொழில்நுட்ப ஆலோசனைகளை வழங்கல் போன்ற முக்கிய பணிகளில் ஈடுபட்டு வருகிறது. இதற்காக நான்கு முக்கிய பிரிவாக ஆய்வுகூடங்கள் உள்ளன.

1. **பகுப்பாய்வு ஆய்வுகூடம்** (Analytical Laboratory)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனை சார் உற்பத்தியை இலாபகரமான அதிகரிக்கும் முகமாகவும், தரத்தை அதிகரிக்கவும் பனைசார் உணவு உற்பத்திப் பொருட்களின் போசணைக்கூறு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் பகுப்பாய்வு ஆய்வுகூடம் இயங்கி வருகிறது.

பல நவீன ஆய்வுகூட உபகரணங்களை உள்ளடக்கி இயங்கும் இவ் ஆய்வுகூடமானது பின்வரும் செயற்பாடுகளைச் செய்து வருகிறது.

✓ பனைசார் உற்பத்திப் பொருட்களிற்கான போசணைக் கூறுகளின் அளவுகளை பாகுப்பாய்வு செய்து விபரங்களை வழங்குவதன் மூலம் உலக சந்தையில் பனை சார் உற்பத்திப் பொருட்களிற்கான கேள்வியை அதிகரித்தல்.

✓ சிறிய முதலீட்டாளர்களின் உற்பத்திப் பொருட்களிற்கான தர பரிசோதனையை இலங்கை தரக் கட்டளைச் சட்டத்தின் நியமத்திற்கு அமைவாக மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கை மற்றும் ஆலோசனைகளை வழங்கல்

✓ பனைசார் உணவு உற்பத்தி செய்முறையில் இடம்பெறும் இரசாயன மாற்றங்களை கண்டறிந்து அவை உற்பத்திக்கு நன்மை பயக்கும் வகையில் ஒழுங்கமைத்தல்

✓ உணவு சாரா பனம் பொருட்களை பெறுமதி மிக்கதாக மாற்றல்

✓ பல்கலைக்கழகம் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகளின் கல்விசார் நடவடிக்கைகளிற்கு உதவுதல்

○ உணவுப் பொருட்களின் போசணை உள்ளடக்கத்தை பகுப்பாய்வு செய்யும் ஆய்வுகூட உபகரணங்கள் தொடர்பான விளக்கவுரைகளையும், உபகரணங்களுடைய பரீட்சயத் தையும் ஏற்படுத்தல்

○ பனம் உணவுப் பொருட்களின் உணவு இரசாயனவியல் தொடர்பான விரிவுரைகள் வழங்கல்

✓ பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களிற்குச் சென்று அவர்களுடைய உணவு உற்பத்தி செய்முறையை இனங்காணலும், சரியான முறையைத் தெளிவுபடுத்தலும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. உணவு தொழில்நுட்ப ஆய்வுகூடம் (Food and Technology Laboratory)

நவீனமயமாக்கப்பட்ட உலகில் மக்கள் விரும்பும் போசணையுடன் கூடிய சுவையான உணவை உற்பத்தி செய்தலை அடிப்படையாகக் கொண்டு போசணை மிக்க பனை வளத்தை பதிலீடு செய்தல் மூலம் நோக்கத்தை எட்டும் முயற்சியுடன் இவ் ஆய்வுகூடம் பின்வரும் செயற்பாடுகளைச் செய்து வருகிறது.

✓ புதிய வகை உணவுகளைக் கண்டுபிடித்தலும், சந்தையில் அறிமுகப்படுத்தலும்

✓ சந்தையில் ஏற்கனவே உள்ள உணவுப் பொருட்களின் தரத்தை இலங்கை தர கட்டளைச் சட்டத்தின் நியமத்திற்கு அமைவாக மாற்றியமைத்தல்

✓ பல்கலைக்கழகம் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளின் கல்வி சார் நடவடிக்கைகளிற்கு விளக்கவுரைகள் மற்றும் விரிவுரைகள் வழங்குவதன் மூலம் உதவுதல்

○ உணவினுடைய போசணை உள்ளடக்கத்தைப் பகுப்பாய்வு செய்யும் ஆய்வுகூட உபகரணங்கள் தொடர்பான விளக்கவுரைகளையும், உபகரணங்களுடைய பரீட்சயத்தை ஏற்படுத்தல்

○ பனம் உணவுப் பொருட்களின் உணவு இரசாயனவியல் தொடர்பான விரிவுரைகள் வழங்கல்

✓ உணவு உற்பத்தி செய்முறையின் சிறந்த உற்பத்தி நடைமுறைகள், சுகாதார நடைமுறைகள் போன்றவற்றை கைத்தொழில் துறைகளிற்கு அறிமுகப்படுத்துவதன் மூலம் இலங்கை தர கட்டளைச் சட்டத்தின் நியம சான்றிதழை (SLS Certification) பெற ஊக்குவித்தல், வழிகாட்டல்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. நுண்ணுயிரியல் ஆய்வுகூடம் (Microbiology Laboratory)

பனைசார் உற்பத்திப் பொருட்களின் மருத்துவ ரீதியான நன்மைகள் பாரம்பரியமாக நம்மபப்பட்ட போதிலும் விஞ்ஞான ஆதாரங்கள் நிரூபிக்கப்படாத தொன்றாகவே காணப்படுகிறது. இந்நம்பிக்கையை நிரூபிக்கும் நோக்கிலும், பனைசார் உணவுப் பொருட்களின் நுண்ணுயிரியல் ரீதியான மாற்றங்களைக் கண்டறியும் நோக்கிலும் இவ் ஆய்வுகூடமானது தன் சேவையை ஆற்றி வருகிறது.

இவ் ஆய்வுகூடத்தின் பிரதான பணிகளாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- ✓ முதலீட்டாளர்களின் உற்பத்திகளிற்கான நுண்ணங்கியியல் பரிசோதனையை மேற் கொண்டு அது தொடர்பான அறிக்கை மற்றும் ஆலோசனைகளை வழங்கல்
- ✓ பனைசார் உற்பத்திப் பொருட்களிற்கான மற்றும் புதிய உற்பத்தி பொருட்களிற்கான நுண்ணங்கி பெருக்கத்தை அவதானிப்பதன் மூலம் உணவுப் பொருட்களின் பாவனைக் காலத்தைத் தீர்மானித்தல்
- ✓ நன்மை பயக்கக்கூடிய நுண்ணங்கிகளைப் பயன்படுத்தி பனை உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்தல் மற்றும் பெறுமதியற்ற வளங்களை பெறுமதி சேர் வளங்களாக மாற்றல்
- ✓ தாம் பெற்றுக்கொண்ட அனுபவங்கள் மூலமாக பல்கலைக்கழகம் மற்றும் தொழில்நுட்ப கல்லூரிகளின் கல்விசார் நடவடிக்கைகளிற்கு உதவுதல்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## 4. உயர்தொழில்நுட்ப ஆய்வுகூடம் (Hi-Tech Laboratory)

உயர்தொழில்நுட்ப ஆய்வுகூடமானது இலங்கையில் பெறுமதி மிக்க உயர்தொழில்நுட்ப ஆய்வுகூட உபகரணங்களை (High Performance Liquid Chromatography and Gas Chromatography Instruments) கொண்டு இயங்குகின்றது.

இவ் ஆய்வுகூடம் மற்றும் உபகரணங்களின் முக்கிய பயன்பாடாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- ✓ உணவில் மிக நுண்ணிய அளவில் உள்ள போசணைக்கூறுகளை இனங்காணலும், அவ் போசணைக்கூறுகளின் அளவைக் கண்டுபிடித்தலும் (Detailed nutritional data). உதாரணமாக விற்றமின்கள், வெல்லங்கள் மற்றும் அமினோ அமிலங்களின் விபரமான பெயர்களையும் கொள்ளளவையும் கண்டு கொடுப்பதன் மூலம் விபரமான போசணைக் கூற்றுப் பட்டியல் உருவாக்க வழிவகுத்தல். (High Performance Liquid Chromatography) உபகரணத்தை பயன்படுத்துவதன் மூலம் இப் பணி நிறைவேற்றப்படுகிறது.
- ✓ அற்ககோலில் உள்ள கூறுகளை ஆராய்தலும் ஓர் பணியாக இங்கு இடம்பெறுகிறது. இதை ஆராய Gas Chromatography உபகரணம் பயன்படுத்தப்படுகிறது.

### பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் செயற்பாடுகள் ஆராய்ச்சி முடிவுகளை வெளிப்படுத்தும் பகுதி (Research dissemination unit)



பனை ஆராய்ச்சி நிறுவனம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை பல செயற்பாடுகளை மேற்கொள்ளுமளவுக்கு முன்னேற்றம் கண்டுள்ளது.

1. ஆராய்ச்சிகளும் தொழில்நுட்ப பரிமாற்றங்களும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பனைசார் உணவு உற்பத்தியின் தரத்தை அதிகரித்தல், அவற்றின் மருத்துவ மற்றும் ஊட்டச்சத்து இயல்புகளை ஆராய்ந்து அவற்றின் முக்கியத்துவங்களை வெளிப்படுத்தல், புதிய பனைசார் உற்பத்திப் பொருட்களை நவீன உலகின் மருத்துவ மற்றும் உடல்நல உணவுத் தேவைகளுக்கு ஏற்ப தயாரித்தல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

3. அத்துடன் பனைசார் உணவு உற்பத்திகளை மேற்கொள்ளும் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களுடன் இணைந்து அவற்றின் உற்பத்தித் தரத்தை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது. இந்த செயற்பாட்டின் ஒரு அங்கமாக பனை ஆராய்ச்சி நிறுவனம் சங்கங்களுடன் இணைந்து சிறந்த உற்பத்தி நடைமுறைகள், சிறந்த சுகாதார நடைமுறைகள், தரக்கட்டுப்பாட்டுச் செய்முறைகள் மற்றும் உற்பத்தி முகாமைத்துவம் ஆகியவற்றை அவற்றின் உற்பத்தி நிலையங்களில் அமுல்படுத்துவதற்கான ஆலோசனைகளையும், கண்காணிப்புக்களையும் மற்றும் அதற்கான பயிற்சிகளையும் வழங்கி வருகின்றது. இவற்றுக்கு மேலதிகமாக பனை ஆராய்ச்சி நிறுவனம் தனது ஆராய்ச்சி முடிவுகள் மக்களைச் சென்றடையும் வகையில் சில திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றது.

4. ஆய்வுகூடச் சேவைகள்

பனை சார் உற்பத்தி பொருட்களுக்கான இரசாயன மற்றும் நுண்ணுயிரியல் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளப்பட்டு அவற்றிற்கான அறிக்கைகள் சமர்ப்பிக்கப்படுகின்றன. இதுவரையில் 100 இற்கும் மேற்பட்ட பகுப்பாய்வு அறிக்கைகள் வழங்கப்பட்டுள்ளன.

5. பல்கலைக்கழகங்களின் ஆய்வு மற்றும் களச் செயற்பாடுகள்

ஊவா வெல்லஸ பல்கலைக்கழகத்தின் பாம் மற்றும் பால் மரங்கள் தொடர்பான கற்கைநெறி பயிலும் மூன்றாம் வருட மாணவர்களுக்கான விரிவுரையும் செய்முறையும் இங்கு நடைபெறுகின்றது.

இவற்றைவிட இலங்கையிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த மாணவர்கள் தமது உள்ளகப் பயிற்சி நெறியைப் (Industrial training) பூர்த்தி செய்யும் வாய்ப்புக்கள் வழங்கப்படுகின்றன.

இலங்கையிலுள்ள பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவர்களுக்கான தனியான விஞ்ஞான ஆய்வுகளுக்கான ஆய்வுகூட வசதி வழங்கப்படுகின்றது.

6. ஆய்வு முடிவுகளின் வெளியீடுகள், பரப்புரைகள் மற்றும் தொழில்நுட்ப பரிமாற்றங்கள்

ஆராய்ச்சி முடிவுகளை உரிய பயனாளர்களுக்கு பயிற்சிப்பட்டறை, கருத்தரங்கு மற்றும் செய்முறை விளக்கங்கள் மூலமாக பகிர்ந்து கொள்ளல். ஏனைய ஆராய்ச்சியாளர்களுக்கும் விஞ்ஞானத்துறையினருக்கும் பனையின் மருத்துவ, இரசாயன மற்றும் பல்வேறு பயனுள்ள இயல்புகளை ஆராய்ச்சிப் பத்திரிகைகள் மற்றும் ஆராய்ச்சி மாநாடுகளூடாக வெளிப்படுத்துதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு மேற்கொள்ளப்பட்ட பெரும்பாலான ஆராய்ச்சிகளின் முடிவுகள் தேசிய மற்றும் சர்வதேச சர்வதேச ஆராய்ச்சி மாநாடுகளின் பதிப்புகளிலும் சஞ்சிகைகளிலும் வெளியிடப் பட்டுள்ளன.

இவ்வாறான ஆய்வுகூட செயற்பாடுகளினூடாக கடந்து வந்த காலங்களில் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அவற்றில் திருப்திகரமான முடிவுகளும் பெறப்பட்டுள்ளன.

**கடந்த காலத்தில் பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள்**

பனைசார் கைத்தொழிலில் ஈடுபடும் பனை அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்கள், முதலீட்டாளர்கள், கல்விமான்கள் உட்பட பல தரப்பினருடனும் கலந்தாலோசித்து ஓர் ஆராய்ச்சி முதன்மைத் திட்டத்தை உருவாக்கி அதனடிப்படையில் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

கடந்த 4 வருடங்களில் பனை ஆராய்ச்சி நிறுவனத்தினால் பனை வளம் சார்ந்த கைத்தொழில்களில் உள்ள பிரச்சனைகள் ஆராயப்பட்டு முப்பதிற்கும் மேற்பட்ட ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அவற்றில் முக்கியமானவையாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

I. பனங்கட்டியின் தரத்தை மேம்படுத்துதல்

II. நவீன பரிசோதனை முறைகளைப் பயன்படுத்தி பனங்கட்டியிலுள்ள கலப்படத்தை இனங்காணுதல்

III. பனங்கட்டி மற்றும் பனை சார் உற்பத்திகளின் போசணைத் தரத்தை துணிதல்.

IV. பனங்கட்டியின், பனைசார் உணவு உற்பத்திகளின் கிளைசீமிக் சுட்டெண் (Glycaemic index) மற்றும் இன்சுலின் சுட்டெண் (Insulin Index) ஆகியவற்றைக் கணித்தல்

V. பனம் பாணியின் தரத்தை அதிகரித்தல்

VI. பனங்கற்கண்டின் தரத்தை உயர்த்துதல்

VII. போத்தலில் அடைக்கப்பட்ட பதநீரின் தரத்தை அதிகரித்தல்

VIII. பனம் பழக்களியைப் பதனிடல்

IX. பனங்கள்ளின் தரத்தை மேம்படுத்தல்

X. பனம் பழத்திலிருந்து பெக்ரின் பிரித்தெடுத்தலும் அதன் இயல்புகளை ஆராய்தலும்

XI. பனாட்டு மற்றும் ஒடியல் மாவின் போஷாக்கு மற்றும் மொத்த பீனோல் கொள்ளளவை ஆராய்தல்

XII. பனைசார் உற்பத்திப் பொருட்களின் சந்தைப்படுத்தலுக்கான புதிய உத்திகளின் உருவாக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

XIII. பாணிப் பனாட்டின் போசணைக்கூறை ஆராய்தலும் பனம் பாணியினை பயன்படுத்துவதன் மூலம் பதப்படுத்தப்பட்ட பாணிப் பனாட்டினை உற்பத்தி செய்தலும்

XIV. உயிரியல் தொழிற்பாட்டு மூலக்கூறுகளின் அளவைத் துணிதல்

XV. பனையின் உண்ணத்தகாத பொருட்கள் தொடர்பான ஆய்வு

✓ சாடிக்கலவையின் ஒரு மூலப் பொருளாக பனந்தும்புக் கழிவைப் பயன்படுத்தல்

✓ மருதாணி இலையிலிருந்து இயற்கை நிறமூட்டியைப் பிரித்தெடுத்தலும் அதனைப் பயன்படுத்தி பனையோலையை நிறமூட்டலும் மருதாணிச் சாயத்தின் பங்கசுக்கெதிரான தொழிற்பாட்டை ஆராய்தலும்

✓ பனை ஓலையிலிருந்து வர்த்தக ரீதியிலான விலங்கு தீவனத்தை உற்பத்தி செய்வதற்கான ஆராய்தல்

✓ பனம் விதை ஓட்டிலிருந்து ஊக்கல்கரி உற்பத்தி

✓ பனையோலையில் நுண்ணங்கித் தாக்கத்தைக் குறைத்துப் பாதுகாத்தல் மற்றும் சாயமூட்டல்

✓ பனம் பூரானையும் பனங்கிழங்கையும் ஒரே நேரத்தில் உயர் ஊட்டச்சத்துடன் பெற்றுக்கொள்வதற்கான கால எல்லையை துணிதல்

XVI. ஏனைய புதிய உணவு உற்பத்திப் பொருட்கள் தொடர்பான ஆய்வு -

✓ பனங்களி சேர்ந்த யோகட் தயாரிப்பு - பனங்களி மற்றும் பால் பிரதானமாகப் பயன்படுத்தப்பட்டன.

✓ பனைசார் மூலப்பொருட்களைப் பயன்படுத்தி ஸ்பொஞ் கேக் தயாரித்தல்

✓ உடனடிப் பனங்கூழ் தயாரித்தல்

✓ பாம்போஷா போன்ற பனைசார் துணை உணவின் தரத்தை அதிகரித்தல்

✓ பனங்கருப்பணியில் நுங்கு பதனிடல்

✓ வெதுப்பக உற்பத்திப் பொருட்களில் ஒடியல் மாவையும் உள்ளூர் வளங்களையும் பயன்படுத்தல்

✓ பனங்களி சேர்ந்த ஜெலி தயாரிப்பு

✓ ஒடியல் மாவை மூலப்பொருளாகக் கொண்ட புடிங் தயாரிப்பு

✓ பனாட்டை அடிப்படையாகக் கொண்ட பழ இனிப்பை (Fruit and nut bar) தயாரித்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### நடைமுறை ஆய்வுகள்

இவ் வருடத்திற்குரிய ஆராய்ச்சித் திட்டமானது சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு புனர்வாழ்வு மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத விவகார அமைச்சின் மேற்பார்வையின் கீழ் செயற்படுத்தப்பட்டு வருகின்றது. அவற்றில் பிரதானமாக பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

- பனை சார் கழிவுப் பொருட்களிலிருந்து எதனோல் (Ethanol) பிரித்தெடுப்பிற்கான சாத்தியப்பாட்டை ஆராய்தல்
- பனங்கட்டியின் விற்றமின் கூறுகளை ஆராய்தல்
- பனம் பாணியை ஏனைய தாவர பாணிகளுடன் ஒப்பிடல்
- உடனடி பனங்களிக்கும் (Fresh Pulp) பதப்படுத்தப்பட்ட பனங்களிக்கும் (Preserved Pulp) இடையேயான போசணைக் கூற்று வேறுபாட்டை ஆராய்தல்
- பனங்களியை மூலப் பொருளாகக் கொண்ட ஐஸ்கிறீம் தயாரித்தல்
- நுங்கின் போசணைக் கூறுகளினைப் பகுப்பாய்தல்

### பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் முயற்சிக்கான சவால்களும், எதிர் பார்க்கைகளும்

கடந்த காலங்களில் பனை ஆராய்ச்சி நிறுவனம் பல்வேறு வெற்றிகரமான ஆய்வுகளில் ஈடுபட்டு பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் நோக்கங்களை திருப்திகரமாக அடைந்து கொள்வதில் வெற்றியும் கண்டுள்ளது. எவ்வாறாயினும் பனை ஆராய்ச்சி நிறுவனம் பல சவால்களுக்கு முகம் கொடுக்க வேண்டி இருக்கின்றது.

1. ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் வெளியிடப்படுகின்ற தரவுகளும் முடிவுகளும் ஆலோசனைகளும் நடைமுறையில் பின்பற்றப்படுவதில் பனைசார் உற்பத்தியாளர்களால் காட்டப்படுகின்ற தயக்கங்கள்
2. பனை உற்பத்திகளின் பண்பு, தர மேம்பாட்டிற்காக ஆய்வு முடிவுகளின் அடிப்படையில் வழங்கப்படுகின்ற அளவு வரையறைகள் நடைமுறை உற்பத்தியாளர்களால் பின்பற்றப்படுவதில் நாட்டமின்மை
3. பனை உற்பத்தி வெளியீடுகள் தொடர்பாக பல்வேறு வெளியீடுகள் இனங்காணப்பட்டு வழங்கப்பட்ட போதிலும் பனைசார் கைத்தொழில் பயனாளிகள் தமது பாரம்பரிய உற்பத்திகளுடனும் நடைமுறைகளுடனும் நிறுத்திக்கொள்ளுதல்
4. பனை வளத்தினுடைய முக்கியத்துவமும் பனை உற்பத்திகளின் பல்வகைமை பற்றியும் தேசிய அளவில் உணரப்படாதிருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பனை ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய ஆய்வுகள் ஆய்வு முடிவுகளுடனேயே நின்றுவிடுதல். ஆய்வின் முடிவுகளை மேலெடுத்துச் செல்வதற்காக பனைசார் உற்பத்தியாளர்கள், முதலீட்டாளர்கள் முன்வராமை

6. பனை ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வின்மை.

7. பனை ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய செயற்பாடுகள் தொடர்பான ஊக்குவிப்புகளும் (Motivation) பின்னூட்டல்களும் (Feedback); இன்மை

## பனை ஆராய்ச்சி நிறுவனத்தில் எதிர்காலத்தில் மேற்கொள்ளவேண்டிய திட்டங்கள்

1. பனை ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய ஆய்வுகளை வெளிப்படுத்துவதற்கும் ஊக்கமளிப் பதற்குமான தனியான பிரிவொன்று அமைத்து செயற்படுத்தல்

2. பனை உற்பத்திகளின் பண்பு தரத்தை மேம்படுத்தும் ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய ஆய்வு முடிவுகளையும் தரவுகளையும் உற்பத்தியாளர் மட்டத்திற்கு / பயனாளிகள் மட்டத்திற்கு எடுத்துச் செல்வதற்கான முயற்சிகளில் ஈடுபடல்

3. பனை ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய புதிய உற்பத்தி வெளியீடுகள் தொடர்பான உற்பத்திகளை செய்வதற்கான முயற்சிகளை தனிப்பிரிவினரிடம் வழங்குதல் / வெவ்வேறு உற்பத்தி நிறுவனங்களுடன் இணைந்து உற்பத்தி வெளியீடுகளை செய்வதற் கான முயற்சிகளில் ஈடுபடல்

4. ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய புதிய கண்டுபிடிப்புகளை உற்பத்தி செய்து சந்தைப் படுத்துவதற்கான சந்தை ஆய்வுகளினூடான சந்தைப்படுத்தல் முயற்சிகளில் ஈடுபடல்

5. பனை உற்பத்திப் பொருட்களின் பல்வகைமையை பயன்படுத்தி தேசிய சர்வதேச சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் ஈடுபடுதல்

6. பனை உற்பத்தி பொருட்களின் தரமான உற்பத்திகளை அதிகரிப்பு செய்வதற்கான புதிய தொழில்நுட்பங்களையும் (Techniques) புதிய தொழில்நுட்ப சாதனங்களையும் (Technologies) அறிமுகப்படுத்துதல்

7. பனை ஆராய்ச்சி நிறுவனத்தை இலாப நோக்குடைய நிறுவனமாக மாற்றுவதற்கான முயற்சிகளில் ஈடுபடல்

பனை வளம் தொடர்பான முக்கியத்துவம் தற்பொழுது அதிகளவில் படிப்படியாக உணரப்பட்டு வருகின்றது. பனைசார் உற்பத்திகள் தொடர்பாக காட்டப்பட்டு வரும் கரிசனையும் ஈடுபாடும் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் பனம் பொருள் உற்பத்தி தொடர்பான ஆராய்ச்சியும் அபிவிருத்தியும் உணரப்பட்டுள்ளது. இதன் விளைவாக பனை ஆராய்ச்சி நிறுவனமும் முக்கியம் பெற்ற நிறுவனமாக மாறியுள்ளது. அதனால் ஆராய்ச்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்துறைப்படுத்தப்பட்டுள்ளது. அதன் முடிவுகள் வெற்றிகரமானதும் பாராட்டுக்குரியவையும் ஊக்கம் பெறத்தக்கனவுமாகவும் அமைகின்றன. எனினும் ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய முடிவுகளை உற்பத்தியாளர்கள் ஏற்றுக்கொண்டும் பாரியளவில் உற்பத்தி செய்து சந்தைப்படுத்துவதற்கான வழிகள் இன்மையால் ஆராய்ச்சி நிறுவனத்தினுடைய முன்னேற்றகரமான எதிர்காலத்திற்கு சவால்களாக அமைகின்றன. இச் சவால்களை வெற்றி கொள்வதற்கான ஆலோசனைகள், விதந்துரைப்புகள் கவனத்தில் எடுக்கப்பட்டு செயற்படுவதன் ஊடாக பனை ஆராய்ச்சி நிறுவனம் மட்டுமல்ல பனம் பொருள் உற்பத்தி துறை சார்ந்த சகல துறைகளும் எதிர்கால முன்னேற்றம் காண்பதுடன், நாட்டின் தேசிய உற்பத்திக்கும், தேசிய பொருளாதாரத்திற்கும் பங்களிப்பு செய்யும் துறையாகவும் மாற்ற முடியும்.


**பனை ஆராய்ச்சி நிறுவனம்,**

கண்டி வீதி,

கைதடி,

யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல : 021 205 7065 / 021 205 7067

தொலைநகல் இல : 021 205 7066


**“தாலத்தின் பாகங்கள் பலவும் பயன் தரும்**
**ஞாலத்தோர் நாடி நன்மை பெறவேண்டும்”**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை வளம் காப்போம்

காலத்தால் முதிர்ந்து வந்த
கனிவான தமிழ் மொழியே
கல்தோன்றி மண்தோன்றா
காலம் வென்ற தாய்மொழியே

குமரியில் கூடி வாழ்ந்த
குடிமக்கள் மனம் மகிழ்ந்து
குதூகலித்துப்பேசிக்கொள்ளும்
குமரியான் செம்மொழியே

நாடுகாண் பயணங்கள்
நாள்தோறும் வளர்ந்த போதும்
நாளடைவில் தேசங்கள்
நாம் அறிய அழிந்தனவே

கண்டங்கள் தீவாகி கரைந்து போக
கண்டெடுத்த நாடு நம்நாடு
கானல் கதையாகக் கொள்ளாதீர்
கண்டு பிடித்ததாய் சொல்வது வரலாறு

லெமூரியா எனும் தீபகற்பம்
லட்சக்கணக்கில் பனைமரங்கள்
லக்கிணம் மட்டும் தெரியாது
லௌகீக உலகில் நின்று மறவாது

பனை வளம் மிகுந்த அத்தேசம்
பகுதியாய் சிதைந்தது கடலரிப்பால்
பராமரிப்பு அற்ற பனைகள் மட்டும்
பரந்து வளர்ந்தது சான்றாக

ஆண் பெண் என்ற இனமுண்டு
ஆனால் பிள்ளை குட்டி ஈன்பதில்லை
ஆண்டவன் படைப்பின் அதிசயமோ
அது தானாய் வளரும் வரம் பெற்றது

பொசுக்கும் வெயிலும் சாகாது
பொங்கும் வெள்ளத்திலும் அழியாது
பெரிதாய் உயர்ந்து வளர்ந்திருந்து
பொறுப்பாய் எம்மை காத்திடுமே

சூழல் சமநிலை பேணுதற்காய்
சூட்சுமமான இயல்பு உண்டு
சுயமாய் தான் தோன்றினாலும்
சுற்றத்தின் மீது கவனம் உண்டு

ஏட்டின் நூறு உற்பத்தியாம்
எல்லாத் துறையிலும் உயர்தரமாம்
எங்கும் இதற்குக்கேள்வி தானே
எம் நாட்டிற்கு பெருமை தந்திடுமே

சித்த மருத்துவம் சிறப்பிக்கும்
சிக்கனமான மூலவளம்
சித்தர் காலத்து மக்களுக்கும்
சிறந்த ஆயுள் தந்ததுவே

தமிழ் மொழிந்த லெமூரியர்கள்
தமிழர்கள் என்பதில் ஐயமில்லை
தாமும் தமிழர் என்பதால்
தலை நிமிர்ந்துள்ளன பனைமரங்கள்

முப்பாட்டன் போதைக்கு கள் தந்து
முந்திய தலைமுறைக்கு உணவளித்து
முச்சங்க காலத்தில் முதன்மையாகி
மூத்த பாட்டன்மார் நம் பனைகள்

பண்பான தமிழரின் பாமர உணவு
பழங்கஞ்சி என்றால் மிகையில்லை
பக்கத் துணைக்குப் பனாட்டு சேர்த்து
பக்குவமாக பலமும் பெற்றான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழை எளியோரின் வாழ்வாதாரம்
ஏளனமாய் எண்ணாதீர்
ஏமாற்றும் இந்த உலகில் கூட
ஏற்றம் தந்திடும் வருமானம்

ஆழி கக்கிய பேரலையை
அழகாய் தடுத்து தாக்கியது
அதனால் இன்று கடற்கரையில்
ஆர்வமாய் பனைகள் நடுகின்றனர்

நீர் இறைக்க கூலி இல்லை
நித்தம் காவல் தேவையில்லை
நோய் நொடிகள் ஏதுமில்லை
நிம்மதியாய் வளர்ந்து விடும்

எழுத்தறிவுள்ளவன் தமிழன் என
ஏட்டுச் சுவடிகள் சான்று தரும்
எத்தனை காலங்கள் கடந்த பின்பும்
ஏடு தொடக்குதல் மரபில் உண்டு

தமிழர் வாழ்வோடு இணைந்ததனால்
தர்மம் செய்தே வாழ்கிறது
தமிழர்கள் எம் வரலாற்றை
தலை நிமிர்ந்து சொல்கிறது

முடியுடை மூவேந்தர் ஆட்சியிலே
முதன்மை பெற்றவை பனை மரங்கள்
மூத்தவர் சேரன் மார்புகளில்
மையல் கொள்வது பனம் பூ மாலை

கிளைகள் இன்றி குடையாகி
கிழங்கும் தந்து பசி தீர்த்து
களியை பிசைந்து பலகாரம்
களிப்பு தந்திடும் ஆகாரம்

அலங்காரப் பொருளின் உற்பத்தியில்
அந்நியச் செலாவணி அதிகமுண்டு
அரசின் வருவாயில் பங்கு கொண்டு
அசுர இலாபம் தந்திடுமே

சுற்றுலாப் பயணிகள் உள்ளத்தினை
சுவைமிகு ஒடியற்கூழ் கவர்ந்திடவே
சுற்றிப் பார்க்க வந்தவர்கள்
சுற்றுவார்கள் கற்பக நிலையம் தேடி

பதநீர் தேடா ஆடவர் உண்டோ
பனம் கற்கண்டின் பதம்தான் என்ன
பழனி முருகன் பஞ்சாமிர்தம்
பதமாய் காப்பதில் முதல்வன் இதுவாம்.

வேரில் உள்ள கணுக்கள் எலலாம்
விரட்டி அடிக்கும் மண்ணரிப்பை
வியர்வை சிந்தும் தோழர்க்கெல்லாம்
விசிறியாகி குளிரூட்டும்

ஆயுதப் போரில் அகப்பட்ட நாம்
ஆயுதங்களை அறைந்தோம் உன்னில்
அத்தனை வலியும் தாங்கிய நீ
அழகிய வீட்டின் தீராந்தியானாய்

பண்பில் உயர்ந்தவன் நீ அன்றோ
பொறுமை காத்து சிரிக்கின்றாய்
பெருமையால் உன்னைப் போற்றிடவே
படைத்தவன் வீட்டிலும் உயர
வைத்தான்

கரிய உந்தன் மேனியிலே
கத்தி கோடரி பட்டபோது
கத்தி அழுவாய் என நினைத்தோம்
கனிவாய் வெள்ளை மனம் திறந்தாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்முன்னோரின் உயர்ந்த உள்ளம்
நன்கு அறிந்தோம் உன் உயரத்தில்
நானிலமும் போற்றி நிற்கும்
நம் தலைவன் நீதானே

அடிமுதல் நுனி வரை
அத்தனையும் பலன் தருதே
அப்படி நீ பூமியிலே
அகத்துறிஞ்சியது எதைத்தானோ

பனை ஓலை கொழுக்கட்டை
படுப்பதற்குப் பாய் தந்தாய்
பன்னாடை கூட இங்கு
பயன் தருதே பலவாறு

சங்கத்தமிழ் சொல்லெடுத்து
சரமாக தொடுத்து வந்தேன்
சங்கதிகள் உனதானதால்
சற்றுக்கூட தளரவில்லை

முடியாத வயது வந்தபோதும்
முறிந்து கீழே விழுவதில்லை
முதுகில் குற்றும் கோழைகள் முன்
முகவரி இழந்து தோற்றதில்லை

பக்திகள் தரும் காவடியாய்
பக்தர் பாரம் நீ அமர்ந்தாய்
பக்குவமாய் நேர்த்தி செய்ய
பலவாறு வலிகள் கண்டாய்

தமிழர்கள் இல்லா நாடுமில்லை
தமிழர்க்கு என்று ஒரு நாடுமில்லை
தன்மானம் இன்னும் இழுக்காததால்
தாய் நாட்டுத்தலையில் நிமிர்ந்து
நிற்கின்றாயே

தொட்டிலிட்டு கட்டிலிட்டு
தொட்டு அழ வெறுத்த போதும்
தொட்டுத் தழுவ நீயே வந்து
தீயிட்டு அஸ்தி தந்தாய்

பாமரரே படித்தவரே
பக்குவமாய் சொல்லி விட்டேன்
பனைமரங்கள் நம் பூட்டன்மார்
பராமரிப்பது நம் கடனே

காசு பணம் கேட்காது
காலை மாலை கடன்கள் இல்லை
கஸ்டம் தர விரும்பாது
கண்ணீர் விட்டும் அழுதிடாது

இனாமாய்த் தானே கிடைத்ததனை
இழிவாய் வெட்டிக் கொத்தாதீர்
இலங்கை மக்கள் நாமாவது
இன்றில் இருந்து போற்றிடுவோம்.

பழமை வாய்ந்த சொத்து இது
பக்குவமாய் பேணிடுவோம்
பனை வளத்தைக்காத்திடுவோம்
பயன்கள் பல பெற்றிடுவோம்

**செல்வி : க.ரமபிரியா**
சமயபுரம்,
உயிலங்குளம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மன்னார் மாவட்ட அலுவலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை பாடும் கவி

சீர் பொலியும் இலங்கையிலே
சிறப்பான பூமியிலே
கற்பகதருவாய்க் கடவுள் எனைப்
படைத்தாரே
என்பணி ஏதென்று என்னை
ஈன்றவரிடம் நான் கேட்டேன்
உன்பயன் முழுவதையும் உலகுக்கீந்து
தியாகியாய் நீயும் திகழ்வாய் பூமியிலே
என்றே கூறியென்னை நன்றாய்
வளர்த்தாரே
என் அங்கமெல்லாம் எவ்வாறு பயனாகும்
எனும்
பன்முகப் பாவனையைப் பணிவாக நான்
சொல்வேன்
இல்லத்திற்குக் கூரையாவேன்
எல்லை காக்கும் வேலியாவேன்
பந்தல்கால் நானாவேன்
சந்தையிலே விலை போகும் சரக்காவேன்
படுக்கப் பாயாவேன் - பாலகர்க்கு
தடுக்காய் நானிருந்து தந்திடுவேன் சுகபலம்
அட்டியிலே அடுக்கடுக்காய் நானும்
பெட்டியாயிருந்து பல பணிக்கு
உதவிடுவேன்
பிடைக்கச் சுளகாவேன்
கடை செல்லும் பையாவேன்
முகப்பறையில் நானும் முந்தி நின்று
வரவேற்பேன்
எழுத்தறிவிக்கும் ஏடாவேன் - மக்களை
ஏற்றி வைக்கும் ஏணியும் நானாவேன்
புலவோர் பாட்டையும் தாங்கி நிற்பேன்
அறவோர் உரையையும் ஏற்று நிற்பேன்
வனிதையர் கை வண்ணத்தால் நான்
வகை வகையாய் அலங்கார
உருவெடுப்பேன்
தூய என் பழக்கத்தின் பெருமையோ
எண்ணிலடங்காது நீரும் அறிவீரே
வித விதமாய் தின்பண்டம் - இது
இதமாயிருந்து பலமதைத் தந்திடுமே
துணி துவைக்கும் சோப்பாக
பல் துலக்கும் பற்பசையாக
நோய் தீர்க்கும் மருந்தாக
உடலுக்கு உறுதியும் உள்ளத்தில் தெளிவும்
திடமாகத் தந்தே கடமைகளைச்
செய்திடுவேன்
என்வேரும் ஒடியலாய் புழுக்கொடியலாய்
எல்லோரும் விரும்பும் உணவாகும்
இன்னும் உரைத்திட எண்ணற்ற
செய்தியுண்டு
என்னை நான் புகழ்தல் பண்பல்ல
என்றே நிறுத்திவிட்டேன் இத்துடன்
என் பயனை அனுபவிக்கும் மானிடரே
என் நலனை நித்தம் நீர் பேணி
நல்வாழ்வும் நற்கதியும் பெற்றே
நிலமிசை நீடு வாழ்வீர்

**திருமதி ச.கார்த்திகா**
சரசாலை தெற்கு, சாவகச்சேரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவ்வளவு நாள்களானாலும் கெட்டுப் போகாத உணவைத்தரும் பெண் பனை

உணவு தரும் காராம்பசு ஒரு பெண். இலக்கியத்தில் கூறப்படும் இக்காராம் பசுவை நாம் நேரிற் கண்டதில்லை. ஆனாலும் அட்சய பாத்திரமாகத் திகழும் ஒரு பெண்- எமக்கு காலங்காகலமாக சத்துணவு தருவதில் முன்னிற்பதும் எமது வாழ்வோடும் வளத்தோடும் ஒன்றிணைந்த பெண்பனைகளாகும்.

பனாட்டு நாவுக்குச் சுவையானதுடன், உடலுக்கு போஷாக்குத் தருவதும் ஆகும். இப்பனாட்டினை பாணியில் தோய்த்து வைத்தோமாயின் அது கெட்டுப்போகாது. பல மாதங்கள் கடந்தும் எமக்கு உணவாகும். அந்த வகையில் அது ஒரு பஞ்சந்தாங்கியாகவும் எமக்கு உதவும்.

அதே போன்று ஒடியல், நன்றாகப் பதப்படுத்தி, காயவைத்து வைத்திருப்போமாயின், தேவையேற்படும் போது அதனை மாவாக்கி பிட்டவித்து உண்ணலாம். முருங்கையிலை போன்றன சேர்த்து அவிப்பதன் மூலம் சுவையும் கூடும். போஷாக்கும் அதிகரிக்கும். சிறிய நெத்தலி மீன் போட்டு அவிக்கப்பட்ட ஒடியற் பிட்டு ஒருவரை பல்லாண்டு வாழவைக்கும் திறன் கொண்டது.

இவற்றிற்கு மேலாக புழுக்கொடியல் எனப்படுகின்ற அவித்து, காயவிட்ட பனங்கிழங்கு காலங்காலமாக கெட்டுப் போகாது இருக்கும். மீண்டும் சமைக்காது அதனை அப்படியே 'மொறக் மொறக்'கென கடித்து உண்டால் பசி ஓடிப் போவதுடன் பல்லும் உறுதி பெறும்.

போர் நெருக்கடி உலக நாடுகளை அச்சுறுத்திக் கொண்டிருக்கும் இவ்வேளை, நாம் பாதுகாப்பாக, பாணிப்பனாட்டு, ஒடியல் மாவு, புழுக்கொடியல் போன்றனவற்றை சேமித்து தயார் நிலையில் இருக்க வேண்டும். பேரிடர்களின் போது உணவு கிடைக்காத வேளைகளிலும் இவை எமக்கு கை கொடுக்கும். சிறுவர் முதல் பெரியோர் வரை உதவும் இவ்வுன்னத உணவுகளை உற்பத்தி செய்து அவ்வப்போது உண்பதுடன், நெருக்கடி வேளைகளிலும் இதனை உண்டு பசியாறலாம்.

நெருக்கடி நிலை, இல்லாத வேளைகளிலும் இவற்றை நாம் உண்பதனால் என்ன கெட்டா போகப் போகின்றோம்?

**இ.சசிக்குமார்**
உள்ளக கணக்காய்வுப் பகுதி.
பனை அபிவிருத்திச் சபை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்குப்பகுதி



தலைமைக் காரியாலயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகாமையாளரின் எண்ணத்துளிகள்

பனை ஒரு மரம் என்பதை விட இம் மண்ணிற்குக் கிடைத்த வரம் என்றே கூறலாம். பனையை அழிப்பதனைத் தவிர்த்து அதன் மூலம் கிடைக்கும் பயனை எதிர்கால சந்ததியினர் பயனை அடைவதற்கு பனையை வளர்க்க வேண்டியது அவசியமாகும்.

பனை அபிவிருத்திச் சபையானது பனை வளங்களையும் சூழலையும் அழியாமல் பாதுகாக்கும் அதேவேளை, நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அர்த்தம் மிகுந்த பங்களிப்பைக் கொடுக்கும் பனைவளங்களை அபிவிருத்தி செய்தல் என்ற நோக்கத்துடன் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

பனை அபிவிருத்திச் சபையினால் "ஞாலத்தில் புதுமை புகும் தாலம்" என்ற இக்கண்காட்சி சிறப்பு மலர் பல்வேறு ஆக்கபூர்வமான கருத்துக்களையும், பனை சார்ந்த பல்வேறுபட்ட விடயங்களையும் தாங்கி இம் மலர் வெளியிடப்பட்டுள்ளது. இம் மலர் மக்களை சென்றடைந்து மக்கள் பயன்பெற வேண்டும் என்பதுடன் மலர் சிறப்புற எனது வாழ்த் துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திரு.வி.பி.தேவராசா**
முகாமையாளர், (நிதி)
பனை அபிவிருத்திச் சபை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பனை வளம் வருடம் முழுவதும் வற்றாத வளம்

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன் தெரிவார்"

திருக்குறளில் 104வது குறள் உணர்த்துவது யாதெனில், தினையளவு நன்றி செய்தாலும் அதைச் சிறியது என்று எண்ணாமல் பனை அளவு பெரிதாகவே அந்த உதவியின் பயனை அடைந்தவர் கருதுவார் என்பதாகும். ஆயிரம் ஆண்டுகளிற்கும் மேலான இதிகாசங்கள், இலக்கியங்களிலும் தன் சிறப்புக்கள் மூலம் வரலாற்றில் இடம்பிடித்த பனையானது தமிழர்கள் அதிகம் வாழும் இடங்களில் அதிகமாகக் கிடைத்தது பெரும் வரப்பிரசாதமாகும்.

பனை ஒரு மரம் என்பதை விட இம்மண்ணிற்குக் கிடைத்த வரம் என்றே கூறலாம். கடுமையான வறட்சியையும் தாங்கிக்கொண்டு பலவிதமான பொருளாதாரப் பயன்களைத் தரவல்லது. தென்கிழக்காசிய நாடுகளில் வளரும் தாவர இனத்தைச் சார்ந்ததாகும். "பொராசஸ்" எனும் தாவர இனமாகிய பனை தெற்கு ஆபிரிக்காவிலும் பரவிக் காணப்படுகின்றது. இந்தியாவில் 8.6 கோடி பனை மரங்கள் காணப்படுவதாகவும் அதில் தமிழ்நாட்டில் 50% ற்கும் அதிகமாக 5கோடி அளவில் இருப்பதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன. இந்து சமுத்திரத்தின் முத்தாகிய எமது இலங்கைத் தாய்த்திருநாட்டிலும் புள்ளி விபரங்களின்படி 1.1 கோடி பனை மரங்களைக் கொடையாகப் பெற்ற நாம் பெரும் பாக்கியசாலிகள். வடக்கு மாகாணம் மற்றும் கிழக்கு மாகாணங்களிற்கு அடையாளமாகக் காணப்படும் பனையின் வளத்தினை மேம்படுத்துவதற்காக 1978ம் ஆண்டு ஆவணி மாதம் 07ம் திகதி அரச நிறுவனமாக பனை அபிவிருத்திச் சபை தோற்றம் பெற்று தனது தொலைநோக்காகிய "வளங்களையும் சூழலையும் அழியாமல் பாதுகாக்கும் அதேவேளை நாட்டின் மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு அர்த்தம் மிகுந்த பங்களிப்பைக் கொடுக்கும் பனை வளங்களை அபிவிருத்தி செய்தல்" என்ற நோக்கத்துடன் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றது.

பனையின் அடி முதல் நுனி வரை பெறும் பயன்கள் பல. உதாரணமாக பதநீர் (கருப்பணி) உற்பத்தியை எடுத்து நோக்கினால் மெதுவாக வளரும் தாவரமாகிய பனை 13-15 வருடங்களின் பின்னர் சுமார் 12-13 மீற்றர் உயரம் வளர்ந்த பின்னர் தான் பாளைவிட்டு பதநீர் கொடுக்கும். சராசரியாக ஒரு பனை மரம் வருடத்திற்கு 125-150 லீற்றர் பதநீரைக் கொடுக்கும். பதநீரின் பருவகாலம் தை மாதம் முதல் ஆனி மாதம் வரையாகும். 08 லீற்றர் பதநீரைக் காய்ச்சினால் 01 கிலோகிராம் பனம் வெல்லத்தினைப் பெறமுடியும். ஒரு பனையிலிருந்து அண்ணளவாக 12000 ரூபாவினை வருமானமாகப் பெறலாம். பனையின் மொத்த வளங்களையும் பயன்படுத்தினால் கைநிறைய வருமானத்தை ஈட்ட முடியும். தனியார் துறையினரும் ஆர்வத்துடன் தொழிற்சாலைகள் அமைத்தும், குடிசைக் கைத்தொழில்கள் மூலமாகவும் உற்பத்திகளை மேற்கொண்டு இலாபமடைகின்றனர். முன்னோர்களின் ஆரோக்கிய வாழ்க்கைக்கு அவர்கள் பனை வளத்தினை உச்சமாகப் பயன்படுத்தியமையானது பெரும் பலமாகவும், பாலமாகவும் அமைந்திருக்கின்றது. பனையானது சமூகமயமானதன்று! சமுதாய ஆரோக்கியத்திற்கான அருமருந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்பாறை மாவட்ட அலுவலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிளிநொச்சி மாவட்ட அலுவலர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையான பராமரிப்பின்றி முளைத்து வளர்ந்துவிடும் தன்மை பனையின் சிறப்பாகும். பனைக்கு எரு, உரம் எதுவும் தேவையில்லை. தண்ணீர் குறைந்தளவு போதுமானது. பருவநிலை மாறுதலை சமாளிப்பதில் பனைக்கு நிகர் எதுவுமில்லை. காடு, மேடு, தரிசுநிலம், வயல், தோட்டம் எங்கு வேண்டுமானாலும் வளர்ந்து பயன்தரும் கற்பக விருட்சமான பனையை வளர்க்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். எதிர்கால சந்ததி மேல் அக்கறை உள்ளவர்கள் கண்டிப்பாக பனம் விதை நடுகை செய்வதுடன் இருக்கின்ற பனை வளங்களையும் அழிப்பதனை தவிர்க்க வேண்டும். நம் முன்னோர்கள் நாட்டிய பனையிலிருந்து நாம் பயன் பெறுவதைப் போல எதிர்கால சந்ததியினருக்காக பனைகளை வளர்க்க வேண்டியது அவசியம் ஆகும்.

சுவை நீ சுமந்து நாங்கள் சுகமாய் வாழ
நலம் வழங்கும் பனை மரமே !
தரணியில் விருட்சமாய் வளர்ந்து
மக்களின் வாழ்வை செழிப்பாக்கும் - பனை
வருடம் முழுவதும் வற்றாத வளமாக
பாரினில் வளர்வாய்.

**ஆக்கம்**
கணக்குப்பகுதி,
பனை அபிவிருத்திச் சபை

**"வளத்தினூடே வாழ்வு வளம்பெற உழைப்பு ஒன்றே நமக்கு உறுதுணை என்று உறுதிகொள்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடலிகள் வானுயரும்

வடலிகள் வானை
நிறைத்திடும் காணி
வடக்கும் கிழக்கும்
பனைசூழ் பூமி

விதைகள் துளிர்க்கும்
விருட்சங்களாகும்
விழுந்தே கிடந்தால்
எச்சங்களாவோம்

வடலிகள் உயரும்
வானினை முட்டும்
கிழக்கினின் உதயம்
திசைகளை எட்டும்

விதைப்பவன் இல்லை
வளர்ப்பவன் இல்லை
அழிப்பவனுக்கோ
எண்ணிக்கை இல்லை

பூமித்தாயே! பூமித்தாயே!
எழுவோம் தமிழர் பனைகளைப் போல....
நெடுநெடுவெனவே வளரும் திறம்
வளர்வோம் தமிழர் பனைகளைப் போல...

கீறிப்பார்த்தால் நெஞ்சில் உரம்
வாழ்வோம் தமிழர் பனைகளைப் போல.....
ஏழைக்கும் நிறைவாய் உணவிடும் அறம்
நெடும் பனையே தமிழரின் தேசிய மரம்

மன்னார் அமுதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு நிறக் கற்பகதரு

**வ**டபுலத்தின் வளமரம் -அது
வானுயர வளரும்
கனியது மதுரம் - அது
கறுப்பு வைரம்

மாகாணத்தின் சின்னம் - ஏழை
மக்களின் அட்சய கிண்ணம்
அது
விதைக்கும் போது விதையாகும்
வளரும் போது மரமாகும்
கனிந்தால்
சுவை தரும் கனியாகும்
பிழிந்தால் இனிய ரசமாகும்

'பால்' இனம்
உன்னிலும் இருக்கும் -அதில்
'பெண்' இனத்திற்கு
மதிப்பு அதிகம்

கள்ளிப்பாலில்
உயிர் துறக்கும்
பெண் சிசுவே

பனையில் மட்டும்
உன் இனம்
உயிர் கொண்டு வாழும்

கற்பகதருவே
உன் கர்பத்தில்
எத்தனை
சிசுக்கள்
சூல் கொண்டு
எழுகின்றன
அத்தனையும்
தேசத்திற்காய் உழைக்கும்
உன்னத படைப்புக்கள்

தொகுதிச்சின்னமும் நீ - கைத்
தொழில் மூலவளமும் நீ
முன்பு
சோதனைச்சாவடிகளின்
காவல் அரண் -பழைய
தேறாப் பொருட்களைக்
காக்கும் பரண்
தமிழ் நிலத்தின் சாகாவரம்
இதுவே என்றும் நிரந்தரம

**எஸ்.கௌரி**
மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் கணபதி ஓம்

அன்பே சிவம்

# மனிதமும் பனை மரமும் பனை அபிவிருத்திச் சபையும் நீடுழி காலம் வாழ கரம் கூப்பிய வாழ்த்துக்கள்

| | | |
|---|---|---|
| **ப**னைமாது | ஏடகம் | |
| பாரியத்திரம் | பார்பதம் | |
| புற்பதி | புல்லூதியம் | |
| போந்து | போந்தை | |
| நீலம் | துருமேகம் | |
| தருமவிசாரன் | தாளி | |
| தாலம் | பூலோக கற்பகம் | |
| காமபுரம் | கரும்புளம் | |
| பஞ்சம்போக்கி | கற்பகதருவென | |
| சொரியும் | பனை | விருட்சமும் |
| பனை | அபிவிருத்திச் | சபையும் |
| மனிதமும் | பார்போற்ற | வாழ்ந்திடவே |
| கணபதியாம் | கற்பகனை | கற்பகவல்லியை |
| கரம்கூப்பி | கவிபாடி | வணங்கி |
| நீடுழிகாலம் | வாழ | வாழ்த்துகின்றேன் |

| | | |
|---|---|---|
| அன்பேசிவம்! | அன்பேசிவம்! | அன்பேசிவம்! |
| சாந்தி! | சாந்தி! | சாந்தி ! |

**நாகலிங்கம் சற்குணநாதன்,**
சிவத்தொண்டர்,
சிவன்மேம்பாட்டு நிறுவனம்,
முகாமைத்துவ உதவியாளர்
(சந்தைப்படுத்தல் பகுதி)
பனை அபிவிருத்திச் சபை.

கிழவிதோட்டம்
கரவெட்டி கிழக்கு,
கரவெட்டி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். மாவட்ட பணியாளர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “மலரின் மகரந்தம் ”

**ப**னையை துணையாகக் கொண்டு வாழ்வில் சமூகபொருளாதார அபிவிருத்தி நோக்கி நகரும் வழிகாட்டலை புதிய வியூகத்தில் பனை அபிவிருத்திச் சபை இட்டுச் செல்கின்றமையை நம்மவர்களுக்கு “ஞாலத்தில் புதுமை புகும் தாலம் ”எனும் தொனிப் பொருளில், கண்காட்சி, விற்பனை, கருத்தரங்கு, உற்பத்திப் போட்டிகள், கட்டுரைப் போட்டிகள் மற்றும் கண்காட்சி சிறப்பு மலர் என வெளிப்படுத்தி உள்ளது.

இலங்கைத் திருநாட்டில் பனை வள பயன்பாடு உள்ள அனைத்து மாவட்ட பனை அபிவிருத்திச் சபை பணியாளர்கள், உற்பத்தியாளர்கள், தொழில்நுட்ப வல்லுனர்கள், அமைச்சர்கள், அறிவுசார் பெரியோர்கள் ஆகியோரின் பனங்கூடலாக சபைத் தலைவர் Dr.இ.சிவசங்கர் அவர்களின் வழிகாட்டலில் யாழ். மத்திய கல்லூரி வளாகத்தில் பல்லாயிரம் மக்கள் இணைந்து சங்கமித்தனர்.

பழமையை அறியாதவர்களும், புதுமையை தெரியாதவர்களும் பாரம்பரியத்தின் சிறப்பினை, பண்பாட்டின் நன்மையினை உலகம் அறியுமாறு ஊடகங்கள் வாயிலாகவும், பத்திரிகைகள் ஊடாக செய்திகளாகவும், காணொளிகளாகவும் மக்களை சென்றடைந்துள்ளது.

சபையின் இலக்கு பனைசார் அபிவிருத்தி. இவ் இலக்கில் தாலத்தினை மூலமாக நம்பி வாழும், வாழ துணியும் அனைவரும் பனை அபிவிருத்திச் சபையுடன் இணைந்து புதிய பரிமாணத்தினுள் வாழ்வாதாரத்தினை அடைய முடியும்.

“வடக்கின் பெருவளம் கண்முன்னே பரவிக்கிடக்கின்றது
பயனாக்கி பார்போற்ற வாழுங்கள்.”

பனை அபிவிருத்திச் சபை,
தேசிய வீடமைப்பு அதிகாரசபை கட்டடம்,
முதலாம் மாடி,
ஏ9 வீதி,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பனந்தும்பு உற்பத்திகள்

1. தரை விரிப்பு
2. பாய்
3. கம்பளம்
4. துடைப்பம்
5. தும்பு தடிகள்
6. கடுமையான தும்பு – நீண்டகால பாவனைக்கான தூரிகைகள்
7. நடுத்தர தும்பு – வீட்டுப்பாவனைக்கு மற்றும் சுத்தப்படுத்தலுக்கான தூரிகைகள்
8. மெல்லிய தும்பு + தென்னந்தும்பு – தும்பிலான நூல்
9. பூச்சாடிகள்
10. மற்றும் தும்பிலான கைவினைப் பொருட்கள்



## பனையோலை உற்பத்திகள்

1. பாரம்பரிய வேயப்பட்ட கூடைகள்
2. வேயப்பட்ட கதிரைகள்
3. கஜூ அடைப்பதற்கான பெட்டிகள்
4. தேயிலையும் சுவையூட்டிகளும்
5. தொப்பிகள்
6. மேசை விரிப்புகள்
7. சுளகுகள்
8. பொருட்கள் கொள்வனவுக்கான பைகள்
9. வடிவமைக்கப்பட்ட பைகள்
10. கைப் பைகள்
11. விற்பனைக்கு பொதி செய்யும் பெட்டிகள்
12. முடிச்சி நீத்துப் பெட்டி
13. அர்ச்சனி கூடைகள்
14. இடியப்பத் தட்டுகள்
15. வேயப்பட்ட மாலைகள்
16. ஈக்கிளினாலான உற்பத்திகள்
17. ஈக்கிளினாலான தும்புத்தடிகள்
18. பற்குற்றிகள்
19. குற்றி வகைகள்
20. அழகுசாதனப்பொருட்கள்
21. பூக்கொத்துகள்
22. பூக்கூடைகள்
23. பனையிலான விளையாட்டுப் பொருட்கள்
24. சுவரில் தொங்கவைக்கும் பொருட்கள்
25. பிரம்புகள்
26. தாவரங்களுக்கான பசளைகள்
27. மண்ணரிப்பு தடுப்பான்கள்
28. ஏனைய பனையோலையிலான பொருட்கள்



වියලි තල් අල (කොට්ට කිලංගු)
තල් පිටි
ඇසුරුම් කරන ලද තල් යුෂ
තල් කැවුම්
තල් වඩ
තල් චොක්ලට්
තල් කෝඩියල්
තල් බීම
තල් හකුරු
තල් පැණි
තල් පිනාටු
නෙල්ලි යුෂ
පිරිසිදු තල තෙල්





ලවි අංශය
අංක 244 , ගාලුපාර
කොළඹ 04
දුරකතන අංක 011 - 5234216
011 - 2586820



பனங்களியானது பனம் பழத்தின் சாற்றிலிருந்து பெறப்படுகின்றது. இப் பனங்களியிலிருந்து ஜாம், கோடியல், சோஸ், மதுசாரம் அற்ற பானங்கள், பனாட்டு (உலர வைத்த பனங்களி) போன்றன உற்பத்தி செய்யப்படுகின்றன.

பனங்களியை சூரிய வெப்பத்தில் உலர வைப்பதன் மூலம் பனாட்டு உற்பத்தி செய்யப்படுகிறது. இப்பனாட்டிற்கு பாணி, உணவு வாசனைப் பொருட்களை சேர்ப்பதன் மூலம் பாணிப்பனாட்டு உற்பத்தி செய்யப்படுகிறது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Print@: Andra Printers, Jaffna. | 021 222 8929